1264 1264 238

M. 1190. 1935 May யுவ௵ வைகாசி௴

# ஆனந்தபோதினி



REGD NO. M. 1190.

ANANDA BODHINI

Vol. 20. பொருளடக்கம் No. 11.


பக்கம்

1. கடவுள் வணக்கம் ... 811
2. திருவள்ளுவர் திருநாள் ... 813
3. நேயர்கட்கு ஒரு வேண்டுகோள் 818
4. பிரம சூத்திரம் ... 819
5. விமர்சனம், கங்கை வேடனும் காளத்தி வேடனும் 824, 827
6. விசேஷ மஹாத்மிய ஸ்தலங்கள் 831
7. மொழி யாராய்ச்சி ... 836
8. ஒளவையார் ... 843
9. நெப்போலியன் தினசரி வாழ்க்கையில் ஒரு பகுதி ... 849
10. மக்கட்பேற்றின் மாண்பு ... 854
11. 28. குடியரசு நீங்கி முடியரசு மீளுதல் ... 858
12. கண்ணன்-என் அரசன் ... 864
13. 'மணிமேகலை' ஆராய்ச்சி ... 879
14. விசித்திர விநோதம் ... 878
15. ஆசிரியர் குறிப்புக்கள், நாவல் 884, 887




M211, N15 A3 N35.20.11 207695

## "ஆனந்தபோதினி"

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி உள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பினாங், ஸிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி அனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமீ முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜு 3-அணு சேர்த்து (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணு சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரயம் அனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் தலையாவது அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியவைகளாகவும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, ஸிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | „ | 25—0—0 |

[illegible] No. 3005. Telegrams:—"Ananda Bodhini," Madras.
[illegible] முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி" [illegible] மணி தெரு, தபால் பெட்டி நெ. 167, சென்னை.

ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும்

# சோதிட கணிதாமிருத சாகரம்.

*கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

என்ற மூதுரை வாக்கியப்படி எவ்விதக் கல்வியாயினும் குற்றமறக் கற்றுத் தெளிவதே நம்மோர் கடமையாகும். அதுபற்றியே வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாகிய, சோதிட சாஸ்திரமானது நம்மவர் எளிதிலறியும் வண்ணம் ஆரம்பசோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் துர்பிக்ஷகாலமுண்டாகும் விபரம், சர்வதேச அக்ஷாம்சம் செய்யும் முறை, சாஸ்திர உபயாதிகள். வர்கோத்தமம். தசவர்க்கம் பிரிக்குமிடைவு வக்கிர. ரிஜு அஸ்தமயமறிதல், துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை, கேந்திர திரிகோணதிஸ்தானங்கள், பார்வைஸ்தான பலம், திரிகரண சஞ்சிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காய்வேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவகஸ்புடம், கிரகங்களில் ஆட்சி, உச்சநட்பு நீச்சம்பகை முதலியபலம்; மண்டல சமயசார பருவம், மழையளந்து ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடப்பாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடியும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம், கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திரபாவம்; ரோக பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாபம், விரய முதலியவைகளும்; ருதுகால பலாபலன்களை விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளைப் பவருடன் சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையினலெடுத்துக் காட்டும் புராதன கணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேக நிவர்த்தியாக, போதுமான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருதபலவிமர்சம் என்னும் ஜாதககணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உலக பரோபகாரமாக குறைந்தவிலையில் தயார் செய்திருக்கிறோம். இந்நூலிலேயுள்ள விஷயங்கள் பெரும்பாலும் சாஸ்திர சம்பந்த சந்தேகங்கள் நிவர்த்தி செய்யவும் உள்ளபடி உண்மைப் பலன் சொல்லவும் ஏதுவாகும். சோதிடர்கள் பொதுவாய் ஜனன கால லக்ஷணங்களை சந்தேகமின்றி எடுத்துச்காட்டவும் யோகாவயோகங்களும் அவையுண்டாகும் காலங்களும் தமிழ் வாசிக்கத் தெரிந்தவர் இப்புத்தகத்தைக் கொண்டே கணிதம் செய்யத்தக்க எளியநடையிலெழுதியுள்ளதாகையால் இப்புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதேனுமையமில்லை.

## இப்புத்தகத்தி லடங்கிய விஷயங்கள்.

1. நட்சத்திர விவரணம்.
2. விவாக பொருத்த நக்ஷத்திரங்கள்.
3. ஜன்ம நட்சத்திர பலன்.
4. இராசி.
5. இராசிகளில் சாஸ்திராதிகள்.
6. ஜன்ம லக்கின பலன்.
7. கிரகங்கள்.
8. அவைகட்குள் சத்துரு மித்திரத்துவம்.
9. தாத்கால சத்துருமித்திரத்துவம்.
10. காரகத்துவம்.
11. சுப, பாபிகள்.
12. கேந்திர திரிகோணஸ்தானங்கள்.
13. ஆட்சி, உச்சாதிகள்.
14. உச்சாதி கிரகசங்கியை.
15. இராசிக்கு சுப, பாபி.
16. பார்வை.

ங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், சாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரென்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவரவர்க்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமும் அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும, மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

# இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் இந்நூல் இன்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீஸில் தமிழ்நாட்டுச் சகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம். இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

# தமிழ் மெட்டீரியா மெடிக்கா

## என்னும் அருமையான வைத்திய நூல்

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலவை முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!

# சற்குணவல்லி

## அல்லது

# சித்தூர் இளைய ஜமீன்தாரணி

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது.)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடுவதோடு தீவியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோமேஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பெண்ணின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகளுக்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிமொழிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

# கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவைகளுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந்
தெரிந்துகொள்ளும் ஆனந்த

# ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

600-பக்கங்களுக்குமேல் தீக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சிறந்த காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

நற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கின்றது. அப்படிப் படிக்காதவர்கள், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற்குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச்செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சியுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் மிக சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத்தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வோரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தனியாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தேவங்க பதிப்பு விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

ஔவையார் அருளிச்செய்த

## பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 2.

# கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இக்கதையின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டுவது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாகக் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குலத்து வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் விபரீதங்களில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் மூட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வகையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேஷமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

## இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

## விலை ரூபா 1—8—0.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மானத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

இவ்வருடம் கிறிஸ்துவ பண்டிகைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

100 பக்கங்கள் கொண்ட **யுவ வருஷத்திய**

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாந்திர ஸௌரமான)

சர்வமுகூர்த்த

"ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திரக் கணிதத்திலும் திறமை வாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன் பி. ஏ. (B. A. Mathematics) அவர்களால் இப் பஞ்சாங்கம் சுத்தமாகக் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்களின் நாழிகையோடு, மணி நிமிஷமும் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பஞ்சாங்கத்தில் இருக்க வேண்டிய, நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாக சக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், தசாபுத்தி, கிரக சாரங்கள், தசவிதப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு, நவநாயகர்கள் பலன் முதலிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு சோதிடர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சோதிட பொது விஷயங்களும் வெளியிடப்பட் டிருக்கின்றன. இவ்வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள நட்சத்திர ஓரை, சந்திர உதயம், கிரக உச்சம், நவக்கிரக நிரயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய உபயோகமாகும்.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2.

6-பஞ்சாங்கங்கள் 0—8—0. 12-பஞ்சாங்கங்கள் 0—14—0.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—10—0 முந்தி அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். ரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

☞ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

தனலக்ஷ்மி கம்பெனியார் வெளியிடும் 6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்களும் எமது அச்சுக்கூடத்திலேயே நல்ல விதத்தில் பதிப்பிக்கப்பெற் றிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு அணா ½.

6-பஞ்சாங்கம் அணா 2½. 12-பஞ்சாங்கம் அணா 4

ஷை வருஷத்திய தேலுங்கு நிம்மகேட்ட பஞ்சாங்கம்.

1-க்கு அணா ½. 6-க்கு அணா 2½. 12-க்கு அணா 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.



சிவமயம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி | யுவ௵ வைகாசி௴ ௧௨ | பகுதி |
|---|---|---|
| 20 | 1935௵ மே௴ 14௨ | 11 |


## கடவுள் வணக்கம்.

207695

வஞ்சனை அழுக்கா றாதி
வைத்திடும் பாண்ட மான
நெஞ்சனை வலிதின் மேன்மேல்
நெக்குநெக் குருகப் பண்ணி
அஞ்சலி செய்யுங் கையும்
அருவிநீர் விழியு மாகத்
தஞ்சமென் றிரங்கிக் காக்கத்
தற்பரா பாமு னக்கே. (1)

உனக்குநா னடித்தொண் டாகி
உன்னடிக் கன்பு செய்ய
எனக்குநீ தோற்றி அஞ்சேல்
என்னுநா ளெந்த நாளோ
மனக்கிலே சங்க டர்ந்த
மாதவர்க் கிரண்டற் றோங்குந்
தனக்குநே ரில்லா வொன்றே
சச்சிதா னந்த வாழ்வே. (2)

உளவ றிந்தெலா நின்செய லாமென உணர்ந்தோர்க்கு
அளவி லானந்தம் அளித்தனை அறிவிலாப் புன்மைக்
களவு நாயினேற்கு இவ்வணம் அமைத்தனை கருத்துத்
தளருந் தன்மையின் காரொடும் புகலுவேன் தக்கோய். (3)

வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தென்காலோ. (4)

# அரும்பொருள் விளக்கம்

1. இதனால் அன்பு தோன்றச் செய்து காக்கும் பொறுப்பு இறைவனைச் சார்ந்து நிற்கிறது என்கிறார்.

(இ-ள்.) தற்பரனே! கள்ளமும், அசூயை முதலிய குணங்களும் வைக்கப்பட்டிருக்கின்ற பாத்திரமாகிய மனத்தினையுடையவனைப் பலாத்காரமாக மேன்மேலும் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகும்படி செய்து குவிந்த கையும் அருவிபோல் நீர்பொழியும் கண்களும் ஆகப்பண்ணி, தேவரீரே ஆதாரமென மனங் கசிந்து காப்பாற்றத் தேவரீருக்கே பாரமாகும் என்க.

ஆதி என்றதனால் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம் முதலியவுங் கொள்க. இவையனைத்து நிறைந்த ஒருவனுக்கு மனம் நெக்குருகுதலும் கையஞ்சலியாதலும், கண்ணீர் வார்தலும் உண்டாகாதாகலின்—இவையனைத்து முண்டாகத் தேவரீரே வலிய வந்து ஆட்கொண்டு இவையுண்டாகும்படிச் செய்யவேண்டும் என்றனர்.

2. இதனால் தமக்கு அபயம் அளிப்பது எப்போது என்று இறைவனைக் கேட்கின்றார்.

(இ-ள்.) மனோவியாகுலங்கள் நீங்கப்பெற்ற பெரிய தபோதனருக்கு இரண்டாந் தன்மை யற்று ஓங்கிய சமான ரகிதமான ஒப்பற்ற வஸ்துவே! சத்து, சித்து, ஆனந்த உருவமாகிய வாழ்வே! தேவரீருக்கு அடியேன் அடிமையாகித் தேவரீர் திருவடிகட்கு அன்பு பாராட்ட அடியேனுக்குத் தேவரீர் வெளிவந்து பயப்படேல்! என்று சொல்லுகிற நாள் எந்நாளோ என்க.

அன்பு செய்வாரிடத்திலேயே முதல்வன் றோன்றி விளங்குவனாகலின் "அன்பு செய்ய எனக்கு நீ தோற்றி" என்றனர். மனக்கிலேசம் உள்ளவரைக்கும் தன்னிடத்திலேயே மறைந்திருந்த முதல்வன் மனக்கிலேசமற்றவழி உடனே அநந்நியமாகத் தோன்றி விளங்குவான் என்பார் "மனக்கிலேசங்கள் தீர்ந்த மாதவர்க்கு இரண்டற்றோங்கும்" என்றனர்.

3. இதனால் தம்மிடம் அமைந்த தீக்குணங்கட்காக இரங்குகின்றார்.

(இ-ள்.) தகுதி யுடையோனே! ஞானசாஸ்திரங்களின் உண்மை தேர்ந்து எல்லாம் உனது செயலே என அறிந்தவர்கட்கு அளவில்லாத இன்பத்தினைக் கொடுத்தனை; அறிவற்ற—அற்பத் தன்மையும் திருட்டுத்தனமுமுள்ள நாயேனுக்கு இவ்வாறு அமைத்தனை. மனமானது தளர்ச்சி அடையுந் தன்மையை இவ்விடத்தில் யாரோடு சொல்லுவேன் என்க.

உளவறிந்து என்றது ஆன்மா முதல்வனை அடைதற் கேதுவாயுள்ள உண்மைகளை நன்கு விளக்குவதாகிய ஞானசாஸ்திரங்களைத் தெரிந்து கொள்ளுதலாம்.

4. பிரபஞ்ச விஷயங்களில் வேட்டையாடுகின்ற ஐம்புலேயர்கள் அடையா வகை மனமாகிய காட்டினைத் திருத்திப் பலனுறிய முடிவினைக் காண்ப தென்னாளோ? என்க.

# ஆனந்தபோதினி

யுவஹூ

வைகாசிமீ 1உ

## திருவள்ளுவர் திருநாள்

தமிழகத்திற்கு ஒளி தந்து நிற்கும் தண்டமிழ்ப் புலவர் எண்ணிலர். தங்களையும் தங்கள் தமிழ்மொழியையும் வானளாவப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் புலவர் திருநாட்களை கொண்டாட மறந்து விட்டது வருந்தத்தக்கதாகும். நாகரிகம் பெற்ற நாடுகளில் புலவர் திருநாட்கள் பொன்னே போல் போற்றிக் கொண்டாடப்பட்டு வருகின்றன. இங்கிலாந்தில் சிறந்த நாடகப் புலவரான ஷேக்ஸ்பியர் திருநாள் உலகம் புகழும் முறையில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவருக்குச் சிறந்த ஞாபகச் சின்னங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உலகத்திலுள்ள பல வேறு நாடுகளும் ஷேக்ஸ்பியர் திருநாள் கொண்டாட்டத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளுகின்றன. அரச குடும்பத்தினரும் அதில் ஆர்வங் காட்டி வருகின்றனர். "முடியுடை மூவேந்தரும், குறுநில மன்னரும், ஏனைய தமிழ் வள்ளல்களும் புலவர்களை உயிராக மதித்துக் காத்து வந்தார்கள்; திருவாலவாய் இறைவரே புலவரோடு ஒரு புலவராக இருக்க விரும்பினார்" என்று சரித்திர ஆதாரங் காட்டிப் பெருமை பேச விரும்பும் தமிழர்கள் நல்லிசைப் புலவர் திருநாட்களைக் கொண்டாடவும், அத்திருநாட்களில் தமிழ் மொழிக்கு ஆக்கந் தேடவும் ஏன் முன் வரவில்லை என்று கேட்கின்றோம்.

தமிழ் நாட்டில் பெரியார் நாட்களைப் போற்றும் வழக்கம் இல்லாமல் இல்லை. ஆனால் பெரிதும் சமயப் பெரியார் திருநாட்களே போற்றிக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆலயங்களிலும் தனிப்பட்ட முறையிலும் நாயன்மார்—ஆழ்வாராதியர் திருநக்ஷத்திரங்களும், ஏனைய துறவற ஞானிகள் திருநக்ஷத்திரங்களும் சமயமுறைப்படி கொண்டாடப்படுதல் யாவரும் அறிந்ததே. இத்தகைய சமயப் பெரியார் திருநக்ஷத்திரங்களும் அர்த்தமற்ற முறையில்—சம்பிரதாயத்தை ஒட்டிக் கடவுளர் விழாக்களைப்போலவே கொண்டாடப்படுகின்றன. விசேஷ அபிஷேக ஆராதனைகளோடு திருநக்ஷத்திர

வைபவங்கள் முற்றுப் பெற்றுவிடுகின்றன. சமயப் பெரியார் திருநக்ஷத்திர 'வைபவங்களிலேனும் அவர்களுடைய அறிவுரைகளை—அவர்கள் காட்டிய நன்னெறிகளைச் சாமானிய மக்கட்கு எடுத்துரைக்க எத்தகைய ஏற்பாடும் இல்லை என்றே சொல்லவேண்டும் இத்தகைய நிலைமை நாட்டில் ஏற்பட்டிருப்பதற்கு யார் பொறுப்பாளிகள்? சாதாரண மக்களா? இல்லை! இல்லை!! சமயத் தலைவர்களும் சமய அறிஞர்களுமே இதற்குப் பொறுப்பாளிகள் ஆவார்கள். இவர்கள் தங்கள் உண்மைக் கடமைகளை மறந்துவிட்டு வெவ்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கிறார்கள். சைவ, வைஷ்ணவ, அத்துவைத மடங்கள் எதற்காக நம் நாட்டில் நிறுவப்பட்டிருக்கின்றன? எதற்காக ஆண்டுதோறும் லக்ஷக்கணக்காகவும் பல்லாயிரக்கணக்காகவும் வருமானம் வரக்கூடிய மானியங்கள் இம்மடங்களுக்கு விடப்பட்டிருக்கின்றன? எதற்காகத் துறவிகளே மடாதிபதிகளாக வரவேண்டும் என்ற விதியை நம்முன்னோர்கள் ஏற்படுத்ினார்கள்? மக்களிடையே உண்மையான சமய அறிவும், ஒழுக்க அறிவும் பரவுமாறு செய்யவே இம் மடங்கள் நிறுவப்பட்டன. ஏராளமான மானியங்களும் விடப்பட்டன. தியாக உணர்வுடன் இவைகளை நிர்வகிக்கத் துறவிகள் அதிபதிகளாக இருக்க வேண்டும் என்ற விதியும் ஏற்படுத்தப்பட்டது. இக்காலத்தில் இம்மடங்கள் நம்முன்னோர் நோக்கங்களை நிறைவேற்றி வைக்கும் நிலையில் இல்லை. மானியப் பொருள்கள் பெரும்பாலும் அல்வழியில் செலவாக்கப்பட்டு வருகின்றன. துறவிகளான மடாதிபதிகள் "இந்திர போகங்க"ளில் மூழ்கிக் கிடக்கின்றனர். நமது நாட்டில் மற்றச் சமய அறிஞர்கள் என்பவர்களும் உண்மைச் சமய தத்துவங்களை எடுத்துக்காட்டி மக்களை நல்வழிப்படுத்த முன் வருகின்றார்கள் இல்லை. பொருளற்ற மூடப்பழக்க வழக்கங்களை அச்சுக் குலையாமல் காப்பாற்றுவதே இவர்களுடைய சமயக் கடமையாக இருக்கிறது. எனவே பெரியார் திருநக்ஷத்திர வைபவங்கள் தூபதீபாராதனை நைவேத்திய அளவில் முற்றுப் பெறுவதைக் கண்டு யாரை நொந்து கொள்ளுவது என்று கேட்கின்றோம்? வேலியே பயிரை மேய்ந்தால் பயிரின் கதி என்னவது? இது நிற்க.

தமிழகத்தில் தலை சிறந்து விளங்கும் நல்லிசைப் புலவர்களுடைய திருநாட்களை ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என்று சிலரிடையே ஒரு புதிய உணர்வு அரும்பி யிருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சிப் பெருக்கு அடைகின்றோம். திருநெல்வேலியிலும் வேறு சில இடங்களிலும் கம்பர் திருநாளும் வள்ளுவர் திருநாளும் கொண்டாடப்பட்ட செய்திகளை அறிந்து மகிழ்ந்தோம். இத்தகைய திருநாட் கொண்டாட்டங்கள் ஏககாலத்தில்—பண்டிகை நாட்களைப்போல் தமிழ் நாடெங்கும் நடைபெற வேண்டும் என்று நாம் அடிக்கடி விரும்பியதுண்டு. இத்திருநாட்களில் புலவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும், அவர்கள் மக்கட்கு அறிவுறுத்திய விசேஷங்களையும் வல்லவர்களைக் கொண்டு சாமானிய மக்கட்கு எடுத்துக் காட்ட வேண்டும். அதன் மூலம் தமிழ் மொழிக்கும், மக்கட்கும் புத்துயிர் ஏற்பட வேண்டும் என்றும் நாம் எண்ணியதுண்டு. சிறப்பாக மதுரைத் தமிழ்ச் சங்கமும், கரந்தைத் தமிழ் சங்கமும் பொதுவாகத் தமிழ் நாட்டிலுள்ள வேறு பிறசங்கங்களும் தமிழ்ப் புலவர்திருநாட்களைக் கொண்டாட முன் வந்திருக்க வேண்டும். ஆனால் அவை அங்ஙனம் செய்ய முற்படாதது வருந்தத்தக்கதாகும்.



சென்னையில் சில தமிழறிஞர்கள் திருவள்ளுவர் திருநாளை ஆண்டுதோறும் சிறந்த முறையில் கொண்டாட வேண்டும் என்னும் உயரிய நோக்கத்துடன் முன் வந்திருப்பது கண்டு அவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றோம். இதற்கெனத் "திருவள்ளுவர் திருநாட்கழகம்" என்னும் பேரால் ஒரு ஸ்தாபனத்தையும் நிறுவியிருக்கின்றனர். இக்கழகத்தில் தமிழ்ப்பேறிஞர் உயர்திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் தலைவராக விளங்குகின்றார்கள். உபதலைவர்கள், காரியதரிசிகள், நிர்வாக சபை அங்கத்தினர்கள் முதலிய எல்லாரும் சிறந்த தமிழறிஞர்களாகவும், ஆங்கிலப் புலமையோடு தமிழ்ப் புலமையும் வாய்ந்த அறிஞர்களாகவும், பொது நலத்தொண்டில்—பல வேறு துறைகளில் ஈடுபாடுடையவர்களாகவும் விளங்குகின்றார்கள். இக்கழகத்தில் திருவள்ளுவனார் கொள்கைக் கேற்பச் சாதி சமய வேற்றுமைக்கு அணுவளவேனும் இடமில்லாதிருப்பது பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும். நிர்வாகசபையில் இரு பெண்மணிகள் அங்கம் வகிப்பது தமிழ்ப் பெண்ணுலகிற்கே பெருமை அளிப்பதாகும். இக் கழகத்தார் மேற்கொண்டுள்ள நோக்கங்கள் பெரிதும் பாராட்டத் தக்கவை என்பதில் ஐயமில்லை. அவையாவன:—

1. பொது மறையாகிய திருக்குறளைப் பயந்த திருவள்ளுவரின் திருநாளை ஆண்டுதோறும் நாடெங்கும் சிறப்பாகக் கொண்டாடச் செய்தல்.

2. திருவள்ளுவர் திருநாளன்று ஆங்காங்கு ஏழைகளுக்கு உணவளிப்பதற்கான முறைகளைத் தேடி அமைத்தல்.

3. திருவள்ளுவர் பெயரால் ஒரு "நினைவுமலர்" (Souvenir) அச்சிட்டு, திருநாளன்று அடக்க விலைக்குத் தருதல்

5. இந்தியாவிலுள்ள இந்திய மொழிகளில், எந்தெந்த மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்படாதிருக்கின்றதெனத் தெரிகிறதோ அந்தந்த மொழிகளில் மொழி பெயர்க்கச் செய்தல்.

5. சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தமிழ் மொழியில் முதன்மையாகத் தேர்வு பெறும் மாணவர்களுக்கு நூல்கள் பதக்கங்கள் முதலிய பரிசுகளை அளித்தல்.

6. திருவள்ளுவர் பண்டசாலை யொன்று சென்னை நகரிலே நிறுவுவதற்கான முறைகளைத் தேடி அமைத்தல்.

7. எத்திறத்தார்க்கும் பொதுவாகப் பயன் படுமாறு தலைநகராகிய சென்னையின்கண் ஒரு மன்றம் அமைத்தல்.

8. ஒரு பொது நூல் நிலையத்தை மன்றத்திலமைத்தல்.

9. மன்றத்தின் நடுவே தெய்வப் புலவர் திருவள்ளுவர் உருவச் சிலை யொன்றைப் பளிங்கினாற் செய்து நிறுத்தல்.

இவையே திருவள்ளுவர் திருநாட் கழகத்தினர் மேற் கொண்டுள்ள நோக்கங்கள். வள்ளுவர் தமிழ்நாட்டின் தவப்புதல்வர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சாதிசமய வேற்றுமைகளை ஒழித்துச் சமரஸ சன்மார்க்கத்தை நிலைநிறுத்த முயன்றவர். வருணாச்சிரம வேற்றுமை செல்வாக்குப் பெற்றுக்கொண்டிருந்த அக்காலத்தில் "பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்" என்று துணிந்து வீரமுழக்கம் செய்த ஞானதீரர். வேதசாஸ்திர புராணேதிகாசங்களின் பேரால் உயிர்க்கொலைகள் நிகழும் யாகங்களுக்கு மரியாதையும் மதிப்பும் ஏற்பட்டிருந்த அக்காலத்தில் "அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன், உயிர்செகுத் துண்ணாமை நன்று" என்று அருளறச்செந்நெறி காட்டிய அருந்தவச் சிரேஷ்டர் நமது திருவள்ளுவனார். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண, நன்னயஞ் செய்து விடல்" என்ற உயரிய அன்புநெறி ஒழுக்கத்தை மன்பதைக் குணர்த்திய வர் நமது பொய்யாமொழியார். இவர் பயந்த திருக்குறளில் மக்கள் வாழ்க்கைக்குரிய எல்லாக் கூறுகளும் திறம்பட ஆராயப்பட்டு முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. அம் முடிவுகள் எக்காலத்திற்கும் பொருந்துபவை. எவராலும் அசைக்க முடியாதவை. மன்பதைக்கே பொதுவான ஒழுக்கங்களைத் தெரிவிப்பவை. இதனாலன்றோ "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி" என்றார் தத்துவப் பேரறிஞர் சுந்தரம்பிள்ளை அவர்களும். பேர்பெற்ற தேசியக் கவிஞராகிய சி. சுப்பிரமணிய பாரதியார் தமிழ் நாட்டின் சிறப்பைக் கூறும்போது "வள்ளுவன் றன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று புகழ்ந்தார். தாம் அறிந்த புலவர்களில் வள்ளுவரைப் போல் யாரையுங் கண்டதில்லை என்றும் கூறினார். முற்காலத்திலும் கம்பர் முதலிய காவியப் புலவர்கள் திருக்குறள் நீதிகளைத் தாங்கள் எடுத்தாண்டிருப்பதோடு அவருடைய குறளடிகளையும் அப்படியப்படியே எடுத்துத் தங்கள் பாக்களை அழகு செய்து கொண்டிருக்கின்றார்கள். திருக்குறள் மேலை நாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுப் பாராட்டப்படுவ தொன்றே தமிழ் மக்கட்குப் பெருமை அளிப்பதாகும். இத்தகைய அரும்பெறல் புலவர்



சிகாமணியின் திருநாளை இதுகாறும் தமிழ்நாடு மறந்து விட்டது நன்றி கெட்ட தன்மை என்பதைத் தவிர வேறு கூற எம் மனம் துணிய வில்லை. "எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந் நன்றி கொன்ற மகற்கு" என்னும் வள்ளுவர் வாய்மொழியைத் தமிழ்மக்கள் ஊன்றி நோக்குவார்களாக. நாம் வள்ளுவர் விஷயத்திலேயே செய்ந்நன்றி கொன்ற குற்றவாளிகளாகி விட்டோம். போனதெல்லாம் போகட்டும். இனிமேலேனும் திருவள்ளுவர் திருநாட்கழகத்தினர் மேற் கொண்டுள்ள [illegible] நன்னோக்கங்களை நிறைவேற்றி வைக்கத் தமிழ்மக்கள் தவறக் கூடாது என்பது எமது பணிவான வேண்டுகோள்.

மேற்கண்ட நோக்கங்கள் எளிமையாகவும் இனிமையாகவும் நிறைவேறுதற்பொருட்டுத் தமிழ்மக்கள் ஆற்றவேண்டிய கடமை என்ன? ஒவ்வொருவரும் இக்கழகத்தில் உறுப்பினராகச் சேருவதோடு மற்றவர்களையும் சேருமாறு தூண்டவேண்டும். சாதிசமய வேற்றுமையின்றி எல்லாரும் இக்கழகத்தில் உறுப்பினராகும் தகுதியுடையவராவர். இதற்காக ஆண்டுக்கட்டணம் அணா நான்கே செலுத்த வேண்டும். ரூபாய் ஐந்து கொடுப்போர் இதற்கு வாழ்நாள் உறுப்பினராவர். ரூபாய் பத்தும் அத்தொகைக்கு மேலும் கொடுப்பவர் காப்பாளராவர். இவ்வாண்டு வள்ளுவர் விழா யுவ ஹு வைகாசி மீ 5-ம் நாள் (18—5—35) நடைபெறும்.

இங்ஙனமே கம்பர் முதலிய சிறந்த நல்லிசைப் புலவர் திருநாட்களையும் தமிழன்பர்கள் ஆண்டுதோறும் கொண்டாட முன்வரவேண்டும் என்று எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். தனித்தனி ஒவ்வொரு புலவருக்கும் ஒவ்வொரு கழகம் ஸ்தாபித்துத் திருநாள் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்வதைவிடச் சிறந்த நல்லிசைப்புலவர் எல்லாருடை திருநாட்களையும் கொண்டாடப் "புலவர் திருநாட் கழகம்" என்ற போல் ஒரு பெரிய ஸ்தாபனம் ஏற்படுத்தல் பொருந்தும் என்பது எமது கருத்து. இதைப்பற்றித் தமிழறிஞர்கள் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவார்களாக. தமிழ் வளர்ச்சிக்கென ஏற்பட்டுள்ள சங்கங்களே புலவர் திருநாட்களைக் கொண்டாட ஏற்பாடு செய்தால் வேறு தனி ஸ்தாபனத்திற்கு அவசியம் இல்லை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றோம். எவ்விதமேனும் பேரும் புகழும் பெற்று விளங்கும் நல்லிசைப் புலவர் திருநாட்களைத் தமிழ்மக்கள் தவறாமல் கொண்டாடி வரவேண்டும் என்பதொன்றே எமது வேட்கை.

ஓம் தத் ஸத்.

# நேயர்கட்கு ஒரு வேண்டுகோள்

## 21-வது ஆண்டின் முன்னறிக்கை

நாளிது யுவ ஆண்டு ஆடித் திங்கள் 1-ம் தேதி (16-7-35) நமது "ஆனந்த போதினி" மாத சஞ்சிகைக்கு 21—வது ஆண்டு பிறக்கப் போகிறது, "ஆனந்தபோதினி" தமிழ் மக்களுடைய ஆதரவும் நன்மதிப்பும் பெற்றுப் பற்பல சிறப்பியல்புகளுடன் விளங்கிவருவது எல்லாரும் அநுபவத்தில் அறிந்து வரும் செய்தியாகும். மக்கள் வாழ்க்கைக்குரிய எல்லாத் துறைகளிலும் ஒரு விழிப்பையும் எழுச்சியையும் உண்டாக்குவதே "ஆனந்தபோதினி"யின் முதற்பெரு நோக்கம். 21—வது ஆண்டுமுதல் தமிழ் நாட்டில் பேரும் புகழும் பெற்று விளங்கும் சமயப் போறிஞர்—தமிழ்ப் போறிஞர் கட்டுரைகளும், வேறு குறிப்பிடத்தக்க விசேஷ அம்சங்களும் "போதினி"யை அணிசெய்து எல்லாருக்கும் நல்விருந்தாய் மகிழ்வூட்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆகையால் ',ஆனந்த போதினி"யின் பால் அன்புபூண்டு ஆதரித்து வரும் தமிழ்ச் சகோதரி சகோதரர்களெல்லோரும் 21—வது ஆண்டின் சந்தாத் தொகையை நாளிது யுவ ஆண்டு ஆனிமீ 27—ம் தேதிக்(10—7—35)குள் மணியார்டர் மூலமாகவோ நேரிலோ எங்கட்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டுகின்றோம். சந்தாத்தொகையின் பொருட்டு வி. பி. அனுப்புவதால் தபால்செலவு 4—அணா மணியார்டர் கமிஷன் 2—அணா ஆக 6—அணா அதிகச் செலவும் சஞ்சிகை வந்துசேர வீண்கால தாமதமும் ஆகும். ஆகையால் எல்லாரும் மேற்குறிப்பிட்ட தேதிக்குள் மணியார்டர் செய்து விடுவதுதான் உங்கட்கும் எங்கட்கும் லாபமும் சௌகரியமும் ஆகும். வி. பி. அனுப்புவதால் இன்னொரு சங்கடமும் உண்டு. அதாவது வி. பி. வந்தால் ஏழு நாட்களுக்கு மேல் தபாலாபீஸில் வைத்திருக்க மாட்டார்கள். அதற்குமேல் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றவர்கள் நாள் 1—க்கு 2—அணா வீதம் ஸ்டாம்பு வாங்கி ஒட்டி விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அதுவும் பத்து நாட்களுக்கு மேல் தபாலாபீஸில் வைத்திருக்க மாட்டார்கள். இந்தச் சங்கடங்களை யெல்லாம் நோக்கும்போது எல்லாரும் சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்பி ஆதரிப்பதே நலம் என்று தோன்றும்.

குறிப்பு:—முன்பணம் அனுப்புவோர் பழைய சந்தாதார்களாயிருந்தால் மணியார்டர் கூபனில் தங்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு "21—வது ஆண்டுக்கு" என்று விவரம் எழுதவேண்டும். புதிய சந்தாதார்கள் "புதிய ஆண்டுக்கு" என்ற விவரம் எழுத வேண்டும்.

மானேஜர்.




# பிரம சூத்திரம்.

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

## 6-வது அதிருச்யத்வாதி குணாதி கரணம்.

21-வது சூத்திரம், அவதாரிகை:—"அதபாராயயாத தக்ஷர மதிகம்யதே, யத்த தத்ரேஸ்ய மக்ராஹ்ய மக்ராஹ்ய மகோத்ர மவர்ண மசக்ஷுச் ரோத்ரம் ததபிணி பாதம் நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் ததவ்யயம் யத்பூத யோநிம் பரிபச்யம் திதீரா:" என்பது முண்டகோபநிஷத்திலுள்ள ஓர் வாக்கியம்.

இதன் பொருள்: "எதனால் அந்த அக்ஷரமானது அறியப்படுகின்றதோ அந்த வித்தை அபர வித்தையாகும். அந்த அக்ஷரம் அதிருசியமானது; கிரகிக்க முடியாதது; கோத்ர மற்றது; வர்ண மற்றது; கண்ணும் காது மற்றது; கால் கைகளேற்றது; நித்தியமானது; வியாபகமானது; அறியத் தகாதது; நாசமற்றது; இதுவே எல்லாப் பூதங்களுக்கும் உபாதான காரணமானது; இதனையே ஞானிகள் பார்க்கின்றார்கள்," என்பதாம்.

இந்த வாக்கியத்தில் காட்டப் பட்டுள்ள பூதயோனி (பூதங்களுக்குக் காரணமான பொருள்) பிரதானமா (பிரகிருதியா?) சாரீரனா (ஜீவனா?) பரமேசுவரனா? என்பது சந்தேகம். பிரதானமே என்பது சிலர் வாதம். அவர்கள் (பூர்வபக்ஷிகள்) கூறும் வாதம் இது:

"பூதங்களுக்குக் காரணமென்று இவ் வாக்கியத்தில் குறிக்கப் பட்டுள்ள பொருள் அசேதனமாகிய பிரதானம் என்பதே பொருத்த மாகும். ஏனெனில்:

"யேதோர்ண நாபிஸ் ஸ்ருஜதே க்ருஹ்ணதே சயதாப்ருதிவ்யா மோஷதயஸ் ஸம்பவந்தி, யதாஸத: புருஷாத் கேசலோமா நிததாக்ஷராத் ஸம்பவந்தீஹ விஸ்வம்" என்னும் சுருதி வாக்கியத்தினால், "சேதனத்திற்கு ஆதாரமாய் அசேதனங்களாகவுள்ள சிலந்திப் பூச்சி நூலுக்கு உபாதான காரணமாயிருக்கின்றது. புருஷர்களின் சரீரம் உரோமத்திற்கு உபாதான காரணமாயிருக்கின்றது. அப்படியே, அசேதனமாகிய பிருதிவியும் உபாதான காரணமாகக் கூறப் பட்டது" என்னும் விஷயம் அறியப் படுகின்றது.

"யயாததக்ஷர மதிகம்யதே யத்தத் ரேச்யம்" (மேலே காட்டப்பட்ட விஷய வாக்கியம்) என்ற. அக்ஷரத்திற்கே அதிருஷ்டம் முதலாகிய தர்மங்

களை சுருதியானது கூறி, பிறகு, அந்த அக்ஷரத்தினல் பிரபஞ்சம் உற்பத்தி யாகிறதென்று கூறுகின்றது. சுருதியின் முடிவில் அக்ஷரத்தை விட அன்னியமாக வேறொருவன் இருக்கின்றான் என்றும் கூறப் பட்டிருக்கின்றது. ஆதலால், அக்ஷரம் என்னும் பதப் பொருள் பிரதானமே என்றும், சர்வஞ்ஞத்துவம் முதலிய தர்மங்கள் அந்த அக்ஷரத்தினும் வேறாகிய ஈசுவரனுக்குப் பொருந்து மென்றும் விளங்குகின்றது. ஆகலின், இங்கு, அக்ஷரம் என்னும் பதத்தினல் குறிக்கப் படும் பொருளே பூதயோனியாக விருக்கின்ற தென்பது நிச்சயிக்கப் படுகின்றது" என்பது பூர்வபக்ஷியின் வாதம்.

இந்த வாதம் கீழ்வரும் சூத்திரத்தால் கண்டிக்கப் படுகின்றது,

சூ. 21. "அத்ருச்யத்வாதி குணகோதர்மோக்தே:"

பதவுரை:—அத்ருச்யத்வாதி குணக:= அதிருசியம் முதலிய குணங்களையுடைய பூதயோனி (பரமாத்மாவே;) ஏனெனில், தர்மோக்தே:= சர்வஞ்ஞத்துவம் முதலிய தர்மங்கள் அந்தப் பூதயோனிக்குக் கூறப்பட்டிருத்தலால்.

கருத்து:— அதிருசியத் தன்மை முதலிய குணங்களையுடைய பூதயோனி பரமாத்மாவே; வேறொன்றல்ல. ஏனெனில், அந்தப் பூதயோனிக்கு பரமேசுவர தர்மங்கள் கூறப் பட்டிருக்கின்றன. அசேதனமாகிய பிரதானத்திற்காவது உபாதி பரிச்சின்னனாகிய ஜீவனுக்காவது சர்வஞ்ஞத்துவம் முதலிய தர்மங்கள் சம்பவியா. விஷய வாக்கியத்தில் அதிருசியத் தன்மை முதலிய குணங்களையுடைய பூதயோனியை அக்ஷரம் என்னும் பெயரால் குறிப்பிட்டு பிறகு, அந்த அக்ஷரத்திற்கு ஜகத்திற்குக் கர்த்தாத் தன்மை கூறி, வாக்கிய முடிவில், அந்த ஜகத்கர்த்தாவிற்கு சர்வஞ்ஞத்துவம் முதலிய தர்மங்கள் உண்டு என்று சுருதியானது சொல்லுகின்றது. இவ்வாறிருத்தலின், சர்வஞ்ஞத்தன்மை முதலிய தர்மங்கள் அக்ஷரம் என்னும் பதத்தால் குறிக்கப்பட்ட பூதயோனிக்கே பொருந்துகின்றது. அக்ஷரம் என்னும் பதத்தால் குறிப்பிடப் படும் பொருளினும் வேறாக வேறொருவன் இருக்கின்றானென்னும் அர்த்தத்தைக் கொடுக்கும் வாக்கியம் இல்லை. "அக்ஷராத் பரத:" என்னும் வாக்கியம் 'அக்ஷரத்தினும் வேறாக ஒரு பொருள் இருப்பதாகக் கூறுகின்றதே' எனின், இந்த வாக்கியத்தின் அர்த்தம் அதுவல்ல, இதன் அர்த்தம் பின் சூத்திரத்தில் காட்டப் படும்.

வேதமானது பரவித்தை அபரவித்தை என்று இரண்டு வித்தைகள் உள்ளனவென்றும், அவை அறியத் தக்கவை யென்றும், வேதம் வேதாங்கம் முதலியவற்றை அறிவது அபர வித்தை யென்றும், அக்ஷரப் பொருளை யறிவது பரவித்தை யென்றும், இதுவே பிரஹ்ம வித்தை யென்றும், அபரவித்தை ஓரளவுக் குட்பட்ட பலனை அளிக்கும் என்றும், பரவித்தை அளவிட முடியாத பலனைத் தரும் என்றும் கூறுகின்றதே யன்றி, இந்த இரண்டு வித்தைகளிலும் வேறாக பிரதான வித்தை யென்று ஒன்று இருப்பதாகக் கூறுவதில்லை

'எந்த ஞானத்தினல் சர்வ விஞ்ஞானமும் உண்டாகும்?' என்னும் கேள்வி வந்த போது, சுருதியானது வித்தை பரவித்தை அபர வித்தை என்று இரண்டு பாகமாகப் பிரித்து, அவற்றுள் சர்வ விஞ்ஞான காரணமாயிருப்பது பரவித்தையே யென்று கூறிற்று. பிரதான வித்தையானது புருஷ விஞ்ஞானத்தை யுண்டாக்காதல்லவா? அப்படியே போக்தா (போகத்தை யனுபவிப்பவன்) வாகிய ஜீவனுடைய விஞ்ஞானம் போக்கியப் பிரபஞ்ச விஞ்ஞானத்தையும் உண்டாக்காது. ஆதலால், ஜீவன் ஒரு வேளை பூதங்களின் உற்பத்திக்கு நிமித்த காரணமாயினும் சர்வ விஞ்ஞான காரணமாகிய பூதயோனியாக மாட்டான். ஆதலால், அதிருசியம் முதலிய குணங்களையுடைய பூதயோனி பரமேசுவரனே யென்பது நிச்சயிக்கப் படுகின்றது.



22-வது சூத்திரம் அவதாரிகை:—பூதயோனி பரமேசுவரனே யன்றி ஜீவனுமல்ல; பிரதானமு மல்ல; என்பது வேறு காரணங்களாலும் காட்டப் படுகின்றது.

சூ. 22. "விசேஷண பேதவ்யபதேசாப்யாம்சநேதரௌ."

பதவுரை:—விசேஷண பேதவ்யபதே சாப்யாம்—ச= விசேஷணத்தையும் பேதத்தையும் கூறுவதாலும், இதரௌ= ஜீவனும் பிரதானமும், ந= பூதயோனி என்னும் பதத்தால் குறிப்பிடப் பட்டனவாகா.

கருத்து:—"திவ்யோஹ்ய மூர்த்த: புருஷஸ்ஸ பாஹ்ய ப்தயம்ரோஹ்யஜோ அப்ராணோஹ்ய மநாஸ்ஸுப்ர:" (சுயம்பிரகாசன்; அபரிச்சின்னன் (பூரணன்;) பிரத்யகான்மா; ஸ்தூல சூக்கும பூதங்களுக்கு ஆதாரமாயுள்ளவன் என்று, பூதயோனி ஜீவனைவிட வேறான லக்ஷணமுள்ளதாகக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த சுயம் பிரகாசம் முதலிய விசேஷணங்கள் ஜீவனுக்குச் சம்பவியாவன்றோ? மேலும்,

"அக்ஷராத் பரத:பர:' என்னுமிடத்து அக்ஷரசப்தத்தால் அறிவிக்கப்படும் பிரதானத்தை விட பின்னமாக பூதயோனி கூறப் பட்டது. இந்த அக்ஷரமே அவ்வியாகிருதம் (விகார மடையாதது;) நாமரூபங்களுக்குப் பீஜசக்தி வடிவமாகிய சூக்கும பூதம்; இதனினும் வேறாக பூதயோனி 'பர' என்னும் சப்தத்தால் குறிக்கப் பட்டது. இப்படி பிரதானத்தைக் காட்டிலும் பூதயோனி வேறாகக் கூறப் படுதலால் பிரதானமே பூதயோனி என்பது கூடாது.

23-வது. சூத்திரம் அவதாரிகை:—பூதயோனி பரமேசுவரனே என்று வேறு காரணத்தால் நிரூபிக்கப் படுகின்றது.

சூ. 23. "ரூபோப ந்யாஸாச்ச."

பதவுரை:—ரூபோபந்யாஸாத்—ச= பூதயோனிக்கு எல்லாப் பூதங்களுக்கும் அந்தராத்மாவாகிய வடிவம் உள்ளதென்று சுருதி கூறுதலாலும் (பூதயோனி பரமேசுவரனே.)

கருத்து:-"அக்ஷராத் பரத:பர:" என்னும் வாக்கியம் "ஏதஸ்மாஜ்ஜாயதே ப்ராண:" முதலிய வாக்கியங்களால் பிராணம் முதல் பிருதிவி வரையிலுள்ள சிருஷ்டியைச் சொல்லி, பிறகு பூதயோனிக்கு சர்வ விகாராத்மத் தன்மையைக் கூறியது. எனவே பூத யோனிக்குத் தேவலோகம் வடிவமும் சூரிய சந்திரர்கள் காதுகளுமாக இவ்வாறு வடிவத்தைக் கூறுகின்றது அத்தகைய வடிவத் தன்மை பரமேசுவரனுக்கே தகுமன்றி, சூக்கும மகிமையையுடைய ஜீவனுக்காவது சர்வ பூத அந்தராத்மத் தன்மை சம்பவியாத பிர

தானத்திற்காவது பொருந்தாது. இந்த ரூப உபன்யாசம் பூதயோனிக்கே செய்யப்பட்டதென்று பிரகரணத்தினுல் சித்திக்கின்றது.

இச் சூத்திரத்திற்கு மேலே காட்டப்பட்ட கருத்து விருத்திகாரரின் அபிப்பிராயத்தை யொட்டியது. இக் கருத்து முழுவதும் பாஷியகாரருக்கு உடன் பாடன்று. ஆகலின் அவர் கருத்து கீழே காட்டப் படுகின்றது.

சுருதியில் செய்யப்பட்ட ரூப உபன்யாசம் இரண்யகர்ப்பனுக்கே யன்றி பூதயோனிக் கன்று. ஏனெனில், இங்கு சிருஷ்டிக்கப்பட்ட வஸ்துக்கள் சிலவற்றை சுருதியானது விவரித்து (சூரியர் சந்திரர் முதலியன) அந்த வஸ்துக்களை மூர்த்தம் முதலிய அவயவங்களாகவுடைய பூதத்தைப் பின்னர் விவரித்தது. சிருஷ்டிக்கப்பட்ட பதார்த்தங்களைத் தனக்கு அவயவங்களாகவுடைய பூதமும் சிருஷ்டிக்கப்பட்டதாகவே யிருத்தல்வேண்டும். ஆதலின், தேவலோகத்தை வடிவமாகவும் என்பது போன்ற வாக்கியங்களால் குறிக்கப்பட்டவன் இரண்யகர்ப்பனாக இருக்க வேண்டுமேயன்றி அதிருசியத் தன்மை முதலிய குணங்களையுடைய பூதயோனியாக விருத்த லியலாது.

### 7-வது வைசுவானராதி காணம்

24-வது சூத்திரம். அவதாரிகை:—"எமது ஆத்துமா எது? பிரம்மம் எது? இந்த வைசுவானரனை ஆத்மாவாக உபாசிக்கிறாய் அவனையே எமக்குக் கூறுவாயாக. ஏதோ வொரு இடத்திலுள்ளவனும் சர்வஞ்ஞனும் ஆகிய வைசுவானரனை எவன் ஆத்மாவாக உபாசிக்கின்றானோ?" என்னும் பொருளைத் தரும் "கோந ஆத்மா, கிம்ப்ரஹ்மேதி.........ஆத்மா நமேவேமம் வைச்வாநரம் ஸம்ப்ரத்யத்யேஷிதமேவ கோப்ரூஹி......யஸ்த்வேத மேவம் ப்ராதேச மாத்ரமபி விமாநமாத்மா நம்வைச்வா நர மூபாஸ்தே" என்னும் வாக்கியத்தில் காட்டப்பட்டுள்ள வைசுவாநரன் என்னும் யாரைக் குறிக்கின்றது? ஜாடராக்னியையா? அல்லது பூதாக்னியையா? அதன் அபிமான தேவதையையா? ஜீவனையா? அல்லது பரமேசுவரனையா? என்பது இங்கு ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும்.

வைசுவானரன் என்னும் பதம் சாதாரணமாக சில விடங்களில் ஜாடராக்கினி பரமாகவும், சில விடங்களில் சாதாரண அக்கினிபரமாகவும், சில விடங்களில் அக்கினியின் அக்கினிதேவதா பரமாகவும் வழங்கி வருகின்றது. மேலும், மேற்கண்ட வாக்கியத்தின் ஆரம்பத்தில் "கோந ஆத்மா; கிம்பிரஹ்ம" (எமது ஆத்மா எது? பிரம்மம் எது?) என்னு மிடத்து ஆத்மா என்னும் பதம் ஜீவாத்மாவையே குறிக்கின்றதென்று நன்றாகத் தெரிவதாலும் "ஆத்மாநம் வைச்வாநர மூபாஸ்தே" என்னு மிடத்து, ஆத்மா வைசுவானரன் என்னும் பதங்கள் ஒரே அர்த்தத்தில் வழங்கப்பட்டிருத்தலாலும் வைசுவாநரன் ஜீவனே என்பது விளங்குகின்றது. மேலும் சுருதியில் கூறப்பட்டுள்ள ஓரிடத்தில் மாத்திரம் இருக்கிறான் என்னும் கற்பனை உபாதியால் பிரிக்கப்பட்டவனுகிய ஜீவனுக்கே பொருந்துகின்றது. ஆகலின், வைசுவானரன் என்னும் பதத்தால் குறிக்கப்பட்டவன் ஈசுவரனல்ல என்னும் பூர்வ பக்ஷியின் வாதம் கண்டிக்கப்படுகின்றது.



சூ. 24. "வைச்வாநரஸ் ஸாதாரண சப்த விசேஷாத்."

பதவுரை:—வைச்வாநர:=வைசுவாநரன் (பரமாத்மாவே); ஏனெனில், ஸாதாரண சப்த விசேஷாத்—சாதாரண சப்தங்கள் இருந்தாலும் பரமாத்ம பரத்வத்தைச் சாதிக்கும் விசேஷம் இருத்தலால்.

கருத்து:—பூர்வ பக்ஷிகள் கூறுவதுபோல வைசுவானரன் என்னும் பதம் மூன்று அர்த்தங்களுக்கு சாதாரணமாக இருந்தாலும், ஆத்மா என்னும் பதம் இரண்டர்த்தங்களுக்கு சாதாரணமாக இருந்தாலும், விஷய வாக்கியத்திற்கு பரமேசுவர பரத்துவத்தைத் தாபிக்கும் விசேஷம் சுருதியி லிருக்கின்றது. அந்த விசேஷம் எதுவென்றால், ஜாடராக்கினி, பூதாக்கினி, பூதாக்கினியி னபிமான தேவதை, பரமாத்மா இவைகளுக்கு ஒன்றுக்கு மாத்திரமே உரியதான ஆகாசம் சிரசு முதலிய லக்ஷணங்கள் இந்தப் பிரகரணத்தில் கூறப்பட்டுள்ள வைசுவானரனுக்குக் கூறப்பட்டன. இந்த லக்ஷணங்கள் பரமகாரணனுகிய பரமேசுவரனுக்கே பொருந்துமேயன்றி மற்றவர்களுக்குப் பொருந்தா.

மேலும், "ஏவம்ஹா அஸ்யஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" (இப்படி வைசுவானரனை உபாசிக்கிறவனுடைய எல்லாப் பாவங்களும் எரிந்து போகின்றன) என்று வைசுவானரனை உபாசிப்பவனுக்கு உண்டாகும் சகலபாவ நிவர்த்தி கூறப்பட்டது. சுருதியின் ஆரம்பத்தில் ஜீவன் யார்? பிரம்மம் எது? என்னும் கேள்விகளிருந்தாலும் முடிவில் பிரம்மலக்ஷணங்கள் மாத்திரமே காணப்படுவதால் இந்தப் பிரகரணத்தில் உபாசியனுகக் கூறப்பட்ட வைசுவானரன் பரமேசுவரனே என்பது நிச்சயிக்கப்படுகின்றது.

## புதிய ஜீவிய சந்தாதார்.

இலங்கை - கார்வெட்டி (மேற்கு) சந்தில் குளத்தடி-வண்ணுத்தியல்லி வாசியான ஸ்ரீமதி ஆறுமுகம் அம்மையார் நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகையின் ஜீவிய சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரித்திருக்கிறார்கள். இவ்வம்மையார் அவர்களுக்கு எம்முடைய நன்றியறிதலையும், வாழ்த்தையும் உரிமை செய்கின்றோம். இங்ஙனமே ஏனைய சகோதரி-சகோதரர்களும் ஜீவிய சந்தாதார்களாகச் சேர்ந்து ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பத்திராதிபர்.

# விமர்சனம்

(உடுமலை. கனகராஜன்.)

விமர்சனம் என்னும் வார்த்தை தான் ஆங்கிலத்தில் வழங்கப்படும் (Criticism) கிரிட்டிஸிசம் என்னும் சொல்லுக்கு ஏகதேசமான பொருளைத் தருவதாக விருக்கிறது. இந்த வார்த்தையை முதலில் எடுத்து வழங்கியவர்களுக்கு தமிழர்கள் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். விமர்சனம் என்றால், நடு நிலைமையிலிருந்து ஒரு விஷயத்தை ஆராய்ந்து அதிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைப் பற்றிய அபிப்ராயத்தை அப்படியே எழுதுவதோ அல்லது பேசுவதோ வாகும்.

விமர்சனக்காரர்கள் யாவரும் உண்மை யுள்ளவர்களாகவும், விருப்பு வெறுப்பின்றி ஒரு விஷயத்தைப்பற்றிய ஆராய்ச்சியி லிறங்குபவர்களாகவு மிருக்க வேண்டும். நடு நிலைமை வகிக்கும் ஒரு நியாயாதிபதியின் தூயமன சாட்சியுடன் ஆராய வேண்டும். இதைப் பற்றி இவ்வளவு தெளிவாகவும், அழுத்தமாகவும் விவரிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி நீங்கள் கேட்பீர்களாகில், சாதாரணமாகவுள்ள ஒருவன் குற்றம் செய்வதை விட ஒரு நியாயாதிபதி ஒரு தலைப் பட்சமாய் விசாரணைநடத்தினால் எவ்வளவு அநீதி ஜனசமூகத்திற்கு ஏற்படுமோ, அதைவிட பன்மடங்கு கேடு மனித சமூகத்திற்கு விமர்சனக் காரர்களால் விளைவது மன்றி, விமர்சனம் என்னும் அரிய கலைக்கே ஆபத்துண்டாகும்படி நேரக் கூடும். விமர்சனத்தைப் போல் மனிதனுக்கு ஒரு விஷயத்திலுள்ள உண்மையை அறிய உதவக் கூடியதும், உற்சாகத்தை ஊட்டக் கூடியதுமான கலைகள் சொற்பமே யாகும்.

இதில் இன்னொரு விஷயத்தையும் நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது விமர்சனக்காரர்கள் சொல்வதைக் கொண்டே நீங்கள் ஒரு விஷயத்தைப் பற்றி முடிவு செய்யக் கூடாது. ஒரே விஷயத்தைப் பற்றி விமர்சனக்காரர்கள் நேர்மாறான அபிப்ராயங்களை, அவர்களுக்கு தெரிந்த காரணங்களோடு விமர்சனம் செய்வார்கள். ஆகையால் எந்த விமாசனத்தையும் நீங்கள் அடிமையா யிருந்து வாசிக்கக் கூடாது. ஆகவே விமர்சனக்காரர்களும் நடு நிலைமையிலிருந்து களங்க மற்ற நோக்கத்தோடு விமர்சனம் செய்ய வேண்டுவது மன்றி, அதைப் படிப்பவர்களும் சுய அறிவுக்கு சுதந்தரமளித்து வாசிக்க வேண்டும்.

நம் அறிவைக் கொண்டு நாம் ஒரு விஷயத்தைப் படித்து, அதைப் பற்றிய உண்மையான அபிப்ராயத்தை அறிந்து கொள்வதே போதுமானது. விமர்சனங்களால் என்ன பிரயோஜனம் என்று சிலர் நினைத்திருக்கலாம். அது முற்றிலும் தவறு. நீங்கள் உங்களுக்குத் தெரிந்தவளவில், நடு நிலைமையாகவே ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். அப்படி நீங்கள் ஒரு முடிவிற்கு வந்ததற்கு சில காரணங்கள் உங்களுக்குத் தோன்றி யிருக்கலாம். ஆனால் அதிலுள்ள எத்தனையோ விஷயங்கள் உங்



கள் அறிவுக்குத் தென்படாமல் போவது இயற்கையே ஒரே நூலை அநேகர் வாசிக்கலாம்; ஒவ்வொருவரும் வெவ்வேறான அபிப்பிராயங்களுக்கு வருவது யாவரும் அறிந்ததே. அதற்குக் காரணம் என்ன வென்றால் அந்நூலிலுள்ள எல்லா விஷயங்களையும், அதைப்படித்த எல்லோராலும் ஒரே மாதிரியாக கிரகிக்கப் படாததோடு, அவரவர் மனப்பான்மையை பொறுத்தும் மாற்றமுண்டாவது முண்டு. ஏன்! ஒரே மனிதன், முதல் தடவை ஒரு நூலைப் படிக்கும்போது அறிய முடியாத சில விஷயங்களை, அதே மனிதன் மறு முறை படிக்கும்போது அறிகிறான். ஆகையால் ஒரு நூலைப் பற்றியோ, மற்று எதைப்பற்றியோ, அதிலுள்ள பல அம்சங்களையும் அறிய வேண்டுமானால், அதைப்பற்றிய விமர்சனங்களை வாசித்துத்தான் ஆகவேண்டும். ஒரு நூலின் உண்மையை உணர ஊன்று கோலாக விருப்பவைகளில் விமர்சனங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். விமர்சனங்களைப் பற்றி இவ்வளவு முக்கியமாய் நான் எழுதியதற்கு ஒரே ஒரு காரணம் தான் உண்டு. உண்மை நாடுவோர்களுக்கு விமர்சனங்கள் உண்மையை அறிய வசதி யளிப்பதேயாகும். மதம், கடவுள், வேதம் முதலியவைகளை விமர்சனங்களுக்கு அப்பாற் பட்டவை என்று சொல்லுவது, அதிலுள்ள உண்மைகளையும், தவறுகளையும் மக்கள் உணரக்கூடாது என்பதற்காகவே யிருக்கவேண்டும். ஆகையால் அவைகளிலுள்ள உண்மைகளை உணர்வதற்கு, அவைகளை ஆதரித்தும், கண்டித்தும் எழுதும் விமர்சனங்களை நீங்கள் அவசியம் வாசிக்க வேண்டும். ஆகவே அறியாமையினால் ஏற்படும் அந்தகாரத்தைப் போக்கி, அறிவுச்சுடர் பிரகாசிக்கச் செய்யும் விமர்சனம் என்னும் மேலான கலையை எல்லோரும் ஆதரித்து வளர்க்க வேண்டும் என்று வேண்டுகிறேன். விமர்சனத்தைப் பற்றிய ஒரு உதாரணம் கூறிவிட்டு இக்கட்டுரையை முடித்து விடுகிறேன்.

விமர்சனம் சர்வ சாதாரணமானது. ஒரு விஷயத்தைப் பார்த்தவுடன் பல மக்கள் அதைப்பற்றி விமர்சிப்பதை நீங்கள் கூர்ந்து கவனித்தால் விமர்சனம் எவ்வளவு சகஜமாக எல்லோராலும் கையாளப் படுகிறது என்பது தெரிய வரும்,

உதாரணமாக நான், T. P. ராஜலட்சுமி நடித்த 'கோவலன்' டாக்கிக்கு போய்விட்டு, ஆட்டம் கலைந்து வரும்பொழுது ஒவ்வொருவரும் என்ன பேசிக்கொண்டு வந்தார்கள் என்பதை சுருக்கமாகச் சொல்லி விடுகிறேன். ஆட்டம் கலைந்து வெளியே வந்தவுடன் நான் சில பெண்கள் விமர்சனம் செய்வதைக் கேட்டேன். ஒரு இளம்பெண் பக்கத்திலுள்ள பெண்களிடம் டி. பி. ராஜலட்சுமி வித விதமான புடவைகள் உடுத்தி யிருந்ததைப்பற்றி ஒன்றுவிடாமல் சொன்னாள். மற்றொரு பெண் டி. பி. ராஜலட்சுமி தரித்திருந்த நகைகளைப்பற்றி வெகு சாமர்த்தியமாகச் சொல்லிவிட்டு, அவைகளில் வித விதமான டோலக்குகள் அணிந்திருந்தவைகளில், கடியார ஸ்பிரிங் போல விருந்த டோலக் மிகவும் நாகரீகம் முதிர்ந்ததாக இருந்தது என்பதை எடுத்துக் காட்டினாள். மற்றொரு பெண் கோவலனாக நடித்தவர், "ராஜலட்சுமியின் அழகுக்கும், சைசுக்கும் தகுந்தவரல்ல" என்று அழகுப் பொருத்தத்தைப் பற்றி விமர்சனம் செய்தாள். இதற்குள் நான் கொஞ்சம் வேகமாக நடந்தபடியால் பெண்களுடைய மற்ற விமர்சனங்களைக் கேட்க எனது செவிகள் கொடுத்து வைக்கவில்லை. ஆனால் சில வைதீகர்கள் கூட்டத்திற்குப் பக்கத்தில் நடந்துவர நேரிட்டது.

அதில் ஒரு பச்சை வைதீகர் உச்சிக் குடுமி மடிசஞ்சியுட னிருந்தார். அவர், காலம் கெட்டுப் போனதாகவும், பக்தி குறைந்து போனதுதான் அதற்குக் காரணம் என்றும் சொன்னதோடு, முன் காலத்தில் பக்தியோடு இருந்தபடியால் கடவுள் பிரசன்ன மாகிக்கொண்டிருந்ததிற்கு காளிதேவியை உதாரணமாகக் கூறியபின், உண்மை பக்தியோடு இருந்தவர்களாகிய கோவலன் மாதவி ஆகியவர்கள் புஷ்ப விமானத்தில் தேவலோகம் போனதுபற்றி பக்தி ரசம் சொட்டச் சொட்ட மற்றவர்களுக்கு எடுத்துக் கூறினர். மற்ற வைதிகர்கள் யாவரும் ஏகமனதாக ஆமோதித்தார்கள். இதற்குள் அவர்களைக் கடந்து சில வாலிபர்கள் குழுவில் கலந்து கொண்டேன்.

அதில் ஒரு வாலிபன் கொஞ்சம் நவநாகரீக உடையுடன் இருந்தான். அவன் மற்றவர்களிடம் "கோவலன், ரொம்ப மோசம், தைரியமில்லை; பக்கத்திலிருந்து கொண்டே - மாதவியை ஒரு முத்தங்கொடு, முத்தங்கொடு என்று சும்மா கேட்டுக்கொண்டே இருந்தான்; இவனாக ஒரு முத்தம் கொடுத்தால் என் ஆகாது?" என்றான். அதற்கு, எல்லோரும் தங்களை மறந்து பெரிய தொனியில் சிரித்தார்கள். இது வாலிபர்களுடைய இயற்கைதானே. பிறகு ஒருவன் தற்கால தமிழ் டாக்கீஸில் புராணக் கதைகள் அதிகமாயிருப்பது பற்றி வருத்தப் பட்டதோடு, "ஏன் இந்த காளி, கூளிகளெல்லாம் இந்தக் காலத்தில் வந்து அயோக்கியர்களைத் தண்டிப்பதில்லை, ஒரு சாமியையாவது பார்க்க முடிவதில்லை," என்று கூறிவிட்டு, இம்மாதிரி அசாதாரணமான அற்புதங்களைக்கொண்ட கதைகளைக் காட்டுவது மனித சமூகத்திற்குக் கெடுதியை உண்டாக்குவதோடு, சினிமாவுக்குப் போவதற்கே வெறுப்பு உண்டாகிறது" என்றான். இதற்கு மற்றொரு வாலிபன் இவனைப்பார்த்து "நீங்க என்ன பிரதர்! சுயமரியாதைப் பித்துதான் எப்போது பார்த்தாலும்; சும்மா ஜாலியாக பிரண்ட்ஸ் ரிக்ரியேஷனுக்குப் போய் வரும்போது இந்த பாலிடிக்ஸ், சோஷியல் ரிபார்ம் ஒண்ணும் வேண்டாம் பிரதர்" என்றார். இவரைத்தான் எல்லோரும், ஈவி கோயிங் (துணிட புல் மேயும்) ஆசாமி என்பது. இந்த சமயத்தில் இந்த வாலிபர்கள் குழுவிலிருந்து பிரிந்து வீடு வந்து சேர்ந்தேன்.

ஒருவருடைய விமர்சனத்திலிருந்து அந்த மனிதருடைய மனப்பான்மையை, போட்டோ பிடித்தாற்போல் அறிந்து கொள்ளலாம் விமர்சனம் என்னும் கலை வளர்ச்சியடைந்தால், பல பேருடைய பற்பல விதமான மனோவெழுச்சிகளையும், கருத்துகளையும் அனைவரும் அறிய சந்தர்ப்பம் ஏற்படும். விமர்சனம் என்னும் கலைக்கு மேனாட்டார் அதிக மதிப்புக் கொடுத்திருப்பது மாதிரியே நாமும் அதை ஆதரித்தால் நற்பலன் விளையு மென்பதை மீண்டும் ஞாபக மூட்டுகிறேன்.





# கங்கை வேடனும் காளத்தி வேடனும்

:(o):

(சேலம்—வீ சுப்பையா.)

கங்கை வேடன் குகன். காளத்தி வேடன் கண்ணப்பன். வேடர் குலத்தினை விளக்கப் போந்தவர் இருவரும்; சிறந்த வீரர்கள்; தலைமைக்கேற்ற குணம் குறி யாவும் பொருந்தப் பெற்றவர்: தம் காதற் கிழவரிடத்துச் சளைக்கப் பெருப் பேரன்பு பூண்டவர். இவ்விருவரும் இவ்வளவு ஒன்று பட்டிருப்பது, இவர்களை நம் முன் சிருஷ்டித்துக் காட்டிய புலவர்களின் பெரு நாவன்மையினலா? அல்லது உண்மையாக வேடர் குலத்திற்கே உரித்தான ஒரு பெருந்தனிச் சிறப்பினலா?

'சூரிய குலோத்தாரண தசரதகுமார ராமன் கங்கைக்கரைக்கு வந்திருக்கிறான்' என்று கேட்டதுதான் தாமதம்; உடனே சிருங்கி பேரியர் கோனை குகன் தனது அண்ணலைக் காணக் காற்றினும் கடிது வருகிறான். ராமனைக் கண்ணாரக் கண்டு தான் பெற்ற பிறப்பின் பெரும்பயன் எய்தியதாக எண்ணி இறும்பூ தெய்துகிறான். மறுகணம் ராமனே அவனை 'யாதினு மினிய நண்ப' என்று விளிக்கிறான். கங்கை வேடன் இப்படி என்றால், காளத்தி வேடன் அவனினும் ஒரு 'படி' அதிகமாகவே இருக்கிறான். காளத்திமலைக் குடுமித் தேவரை (மலை யுச்சியிலுள்ள கடவுளை)க் குறித்து வேட்டையின் நிமித்தம் தன்னோடுகூட வந்திருந்த நாணன் பிரஸ்தாபித்தானோ இல்லையோ; உடனே கண்ணப்பன் 'அக் கோணமில் குடுமித் தேவர் இருப்பர் தும்பிட்டு தன் மீதிருக்கும் மாணவீகமான தொரு பெரும் பாரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்' என்னும் ஒரு பெருவிருப்பம் கொள்ளுகிறான். கொலை செய்தலையே பெருந் தொழிலாகக் கொண்டிருக்கும் இவ்வேடனுக்கு இவ்வித அளவிலா ஆர்வம் பொங்கக் காரணம் யாதா யிருக்கலாமெனத் தனது கதாநாயகனைக் குறித்து சேக்கிழாரும் ஒரு கணம் ஐயம் கொள்ளுகிறார். ஆனால் மறுகணமே 'முன்பு செய்தவத்தின் ஈட்டம் இது' என்று தேறுகிறார். அன்பு, பற்றி ஈர்க்க ஈர்க்க கண்ணப்பனது உள்ளம் நிலை கொள்ளா ஒரு பெருவிதத்தோடும் பொருள் சிவத்தைக் காணத் தத்துவப் படிகள் யாவற்றையும் தாவித் தாவிக் கடந்து செல்லுகிறது. காளத்தி நாதரைக் கண்டதுதான் தாமதம். பிரிந்த தாயைக் கண்ட சேயெனத் தாழாதோடி அப்பனைத் தழுவிக் கொள்ளுகிறான். அப்பனைக் கண்ட சந்தோஷம் போலும் நெடிது போதுயிர்த்து நிற்கிறான். காட்டில் கண்டெடுத்த பெரு இரத்தினம் என அப்பனை அவன் எண்ணி விட்டான் போலும்! 'அவன் சந்தோஷ வாரிதியில் முழுகி விட்டான்' என்றால் அது குறைபடக் கூறியதுதான் ஆகும். கண்ணப்பனது அப்பொழுதைய

உண்மை நிலை வேண்டு'மென்றால் சேக்கிழாரை நோக்குங்கள் அவர் சொல்லு வார்:—

நெடிது போதுயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவிபாய
"அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ" என்று
படியிலாப் பரிவுதானோர் படிவமாம் பரிசு தோன்ற

[உயிர்த்து—பெருமூச்சு விட்டு. படியிலாப்பரிவு............தோன்ற—உவமையில்லா அன்பே தானொரு வடிவங்கொண்டா லொப்ப.]

காளத்தி நாதன் கொடிய வனவிலங்குகள் சஞ்சரிக்கும் காட்டில் உண விடுவாரின்றித் தனித்திருப்பது கண்டு கண்ணப்பன் பெரிதும் வருத்தம் கொள்ளுகிறான். உடனே ஊனுணவு கொண்டு திரும்புகிறான். நாணனும் காடனும் தம் நண்பனுக்கு உண்மையில் பைத்தியம் பிடித்து விட்டதென்றே நினைக்கின்றனர்.

'அரும் பெறல் இறைச்சி காய்ச்சி அதுக்கி வேறுமிழா நின்றான்.
பெரும் பசி யுடையனேனும் பேச்சிலன் எமகரும் பேறு
தரும்பரி சுணரான் மற்றைத் தசைபுறத் தெறியா நின்றான்.'

இப்பேர்ப்பட்ட செய்கைகளைச் செய்யும் ஒருவனைப் பார்த்துப் பைத்தியக்காரன் என்று சொல்லாது பின் என்னென் றியம்புவது? ஆனால் கங்கை வேடனாகிய குகனாவது இப்பைத்தியத்தி னின்றும் தப்பினனா? அதுதான் இல்லை. அப்படியானால் இப்பேர்ப்பட்ட பைத்தியத்தில் இவர்களுக்கு ஒருகால் பெரு விருப்பம் இருக்குமோ?

ராமனைக் காணவந்த குகன் வெறுங்கையனாக வரவில்லை. பெரியோரைக் காணச் செல்லுபவர் வறிதே கையை ஆட்டிக்கொண்டு போகக் கூடாதல்லவா? குகன் ஆசிரமத்தில் புகுந்த மாதிரியைப் பார்த்தபோதே அங்கு சுற்றிலு மிருந்தோர்க்கு வந்த ஆசாமியின் மூளையில் ஏதாவது கொஞ்சம் கோளாறு இருக்குமா? என்று சந்தேகம் தட்டிற்று. ஆனால் குகன் அவர்களை அச் சந்தேக நிலைமையில் அதிகநேரம் இருக்கும்படி செய்யவில்லை. தான் கொண்டு வந்திருந்த பரிசிலைக் காட்டி,

'அருத்தியன் தேனுமீனு மமுதினுக் கமைவதாகத்
திருத்தினேன் கொணர்ந்தேன்...........'
[அருத்தியன்—அன்புடையவன். இங்கு குகன்.]

என்று கூறி அதனை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறான். இப்பொழுது அங்கு சுற்றியிருந்த முனிவர்கள் கூட அவனைப் பைத்தியம் என்றே எண்ணி விடுகின்றனர். இதுகண்டு ராமனும் புன் முறுவல் கொள்ளுகிறான். 'பைத்தியம்' என்று நம்பியா? அல்ல. தனது அன்பனது எல்லையற்ற அன்பின் பேரொழுக்கத்தைக் கண்டு. ஆகவே ராமன் அன்பின் முதிர்ந்த நிலையாகிய பக்திக்குத் தனிப்பட்ட ஒரு மதிப்புக் கொடுத்தே பேசுகிறான். பக்திதோன்ற மனவுவப்போடு கொண்டுவந்த எவையும் அமுதத்தினுஞ் சிறந்தன என்பது தான் ராமனின் எண்ணம். 'ஆகவே குகன் மீனும் தேனும் கொண்டு வந்தது அவனது பேரன்பினால்தான்' என்று முனிவர்களிடம் ராமன் கூறி மேலும்



அது அன்பின்பாற் பட்டதாகலின் அவை நன் தூயவைகளாகவே கொள்ளப் படும் என்றும் ஒப்புக் கொள்ளுகிறான். இத்துடன் நில்லாது பிறி தோரிடத்தில் தன்னைப் பின்பற்றி ஊழியனாக வருகிறேன் என்று கூறிய குகனைத் தேற்றுவான் வேண்டி ராமன் தனது அன்பினாலமைந்த காதலனை ஐந்தாவது சகோதரன் எனவே விளிக்கிறான்.

இப்படித்தாகவே காளத்தி நாதனும் கண்ணப்பனது பைத்தியத்தைக் குறித்து எள்ளி நகையாடாது தானே கண்ணப்ப னென்றும், கண்ணப்பனே தானென்றும் தோன்றும் படியாகக் கண்ணப்பன் பால் வெறுப்புக் கொண்ட சிவகோச னென்னும் வேதியனுடைய கனவில் தோன்றிக் கூறுகிறான்.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாம்என்றும்
அவனுடைய நிலை இவ்வாறறிநீ" என்றருள் செய்தார்.

உண்மையில் சேக்கிழார்கூட கண்ணப்பனது அன்பில் பெருஞ் சந்தேகம் கொள்ளுகிறார். கண்ணப்பனையும் அவனது அன்பையும் பிரித்துக் கூறவகை யறியாது தவித்து "கண்ணப்பனும் அவனது அன்பும் தனித்தனியல்ல. கண்ணப்பனே அன்பு. அன்பே கண்ணப்பன் காளத்தி நாதனைத் தரிசித்த பின்னர் அவன் வேடனே அல்ல. ஏதோ ஒரு ஒப்பற்ற அன்புருவம் தான்" என வியந்து கூறுகிறார். மேலும் அது போதாதென்று,

முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள் நோக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னானாற் போல் யாக்கைத்
தன்பரிசும் வினை இரண்டும் சாருமல மூன்றும் அற
அன்புபிழம் பாய்த்திரிவார் அவர் கருத்தின் அளவினரோ.

[வேதகம்—இரசகுளிகை; தன்னகப்பட்ட எவற்றையும் பொன்னாக மாற்றும் ஒருவித குளிகை. யாக்கைத் தன் பரிசும்—உடற்றன்மையும்]

என்று கூறி தம் உள்ளக்கிடக்கையை நமக்குத் திறந்து காட்டுகிறார்.

இரு வேடர்களும் தம் அன்பர்களைத் துன்பமணுகாது காப்பதில் மிக வல்லவர்கள் என்பதை அவர்களைத் தரிசித்த முதல் நாளே காட்டிவிடுகிறார்கள். உண்மையில் குகனும் கண்ணப்பனும் அக் காவற் கோலத்தில் இருக்கும் பொழுது உள்ளப் பான்மையிலும், உடற் பான்மையிலும் ஒன்றாகவே ஆகி விடுகின்றனர். கம்பராகட்டும் சேக்கிழாராகட்டும்; இத்தருணத்தில் அவர்களிருவரும் தம் கதா நாயகர்களை அத்திருக்கோலத்தில் படம் பிடித்து நம் முன் கொண்டுவந்து நிறுத்தக் கொஞ்சமும் தவறுவதில்லை. நாணேறிட்டு அம்புதொடுத்த வில்லுடன் கண்ணும் இமைப்பிலராகி வைகறை வரையில் இருவரும் தம் அன்பாருகே நேர்ந்து சுற்றி வருகின்றனர். ஆனால் இது அவர்களுடைய பிற்பட்ட செயல்களை—தம் அன்பர்க்குத் துன்பம் நேர்ந்த காலத்து, அல்லது துன்பம் நேர்ந்து விட்டதாக அவர்கள் எண்ணிய பொழுது செய்த செய்கைகளை—நோக்கும் பொழுது அவ்வளவு பெரிதாக நமக்குத் தோன்றவில்லை.

குகன், பரதனை மறுகரையில் கண்டதுதான் தாமதம்; உடனே தமயனைக் காட்டுக் கோட்டியதுமின்றி அங்கிருந்து பின்னும் அவனைத் துறத்த

பரதன் வந்திருப்பதாகக் குகன் எண்ணுகிறான். அப்பொழுது அவனுக்கு உண்டாகும் கோபத்தையும் தன்னைத் தோழன் என்று கூறிய ராமனைக் காக்க வேண்டும் என்று அவனுக்கிருக்கும் ஆவலையும் கொஞ்சம் நோக்குங்கள். உண்மையில் அப்பொழுது அவன் கோபத்தினால் பல்லைக் கடிக்கும் நெறு நெறு என்னும் சப்தமும் அவனுடைய கோபத்தைக் காட்டும் எளனச்சிரிப்பும் நமக்கு வெகு நன்றாகக் கேட்கிறது.

"அஞ்சன வண்ணன்என் ஆர்உயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அர(சு) எய்திய மன்னரும் வந்தாரே'
செஞ்சரம் என்பன தீ உழழ்கின்றன செல்லாவோ!
உஞ்(சு) இவர் போய்விடின் நாய்க்குகன் என்(று) என ஒநாரோ!"

[அஞ்சன வண்ணன்—கண்ணிற்கிடும் மையை யொத்த நிறத்தை உடையவன்; இங்கு ராமன். உஞ்சு—உயிர் பிழைத்து]

என்று அவன் கூறும் ஒவ்வொரு சொற்களிலும் அவனது எளனக்குறிப்பு தொனிக்கிறது. பரதனை 'மன்னரும் வந்தாரே' என்று 'அர்' விகுதி கூட்டி எதிர்நிலை இலக்கணை தோன்றக் கூறுகிறான்.

இவன்தான் இப்படி என்றால் கொஞ்சம் அவனைப் பாருங்கள். சந்தர்ப்பம் வேறுபட்டதாயினும் 'இச்சமயத்தில் தான் நமக்கும் கண்ணப்பன் உண்மையாகக் கண்ணை அப்பிக் காட்டப் போகிறான். தனது அன்பனது ஒரு கண்ணில் இரத்தம் சொரிவதைக் கண்டவுடன் பொறுக்க இயலாத துக்கம் அவனை மேற்கொள்ளுகிறது. மூர்ச்சித்துக் கீழே விழுந்து விடுகிறான். இவ்வளவு நேரமாகியும் இன்னும் அவன் ஏன் எழுந்திருக்கவில்லை? உண்மையாக மூச்சு நின்றுபோய் அப்படியே இறந்து விட்டானா? இல்லை. இதோ எழுகிறான். அய்யன் கண்ணினின்றும் ஒழுகும் இரத்தத்தைத் துடைக்கிறான். இரத்தம் ஒழுகுதலோ நின்ற பாடில்லை. மறுகணம் தன் அன்பனுக்கு இவ்விதத் துன்பம் செய்தாரைக்காண வில்லொடும் உன்மத்தன்போல் வெளியே ஓடுகிறான். எவரையும் காணப்பெறாது திகைக்கிறான். பல பச்சிலைகள் கொண்டு வந்து அய்யன் கண்களில் பிழிகிறான். இரத்தம் காலுதல் அப்பொழுதும் நின்ற பாடில்லை. சிறிதுநேரம் செய்வதறியாது மயங்குகிறான். 'ஊனுக்கு ஊனிடல் வேண்டும்' என்பது ஒரு பழமொழியல்லவா? உடனே தனது கண்களில் ஒன்றைப்பிடுங்கி அய்யன் திருக்கண்களில் அப்புகிறான். இரத்தம் ஒழுகுதல் நின்று விட்டது.........இப்பொழுது கொஞ்சம் கண்ணப்பனைப் பாருங்கள். குதித்துக் கூத்தாடுகிறான். களிப்பினால் உன்மத்தங் கொண்டவன் போலப் புரண்டு உருளுகிறான். எதற்கும் கீழிருக்கும் படத்தைப் பாருங்கள். அப்பொழுது அவனுடைய உண்மை நிலை தெரியும்.

நின்றசெங் குருதி கண்டார் நிலத்தினின் றேறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள் கொட்டினார் கூத்தும் ஆடி
நன்றுநான் செய்த இந்த மதி' என் நகையுந்தோன்ற
ஒன்றிய களிப்பினாலே உன்மத்தர் போல மிக்கார்

[குருதி—இரத்தம். மதி—அறிவான செயல், ஒன்றிய—பொருந்திய உன்மத்தர்—பித்துக் கொண்டவர்.]

இவ்விரு வேடர்களைக் குறித்து இவ்வளவு அறிந்த பின்னரும் கூடவா இவர்களை 'அன்பொரு வடிவம்' என்று கூறுதல் கூட.



# விசேஷ மஹாத்மிய ஸ்தலங்கள்

(வீ. சங்கரய்யர்.)

## 1. சுசீந்திரம்

நமது தென்னிந்தியாவில் சேர, சோழ, பாண்டிய, கேரள நாடுகளில் பல சிவ, விஷ்ணு ஆலயங்களிருக்கின்றன என்பது யாவரும் அறிந்த விஷயமாகும். இவைகளெல்லாம் மூர்த்தி, ஸ்தல, தீர்த்த விசேஷ முள்ளவைகளே. இவ்வாலயங்களிலிருக்கும் சிற்ப வேலைகளையும் கவனிக்க வேண்டியதும் அவசியமே. இருப்புப் பாதைகளில்லாத பல ஸ்தலங்கள் அதிவிசேஷ முள்ளவைகளாக யிருந்தும் நம்மில் பலர் அறிய ஹேதுவில்லாமலிருக்கிறது. அம்மாதிரி ஸ்தலங்களில் ஒன்றுதான் நான் எழுதப்போகும் சுசீந்திரமும். ஆவடையார் கோவில் தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் அதிக புராதனமும், பெருமை வாய்ந்ததுமான ஒரு மஹாஸ்தலம். அவ்வூருக்கு இருப்புப் பாதை யில்லாததால் அதிக யாத்திரீகர்கள் செல்ல முடியாமலிருக்கிறது. சென்ற வருஷம் சித்திரைமாதம் நடந்த லக்ஷார்ச்சனைக்கும், லக்ஷ தீபத்திற்கும் பலர் மிகக் கஷ்டப்பட்டு அவ்வூருக்கு வந்ததையும் அனேகர் வரமுடியாமலிருந்து வருத்தப்பட்டதையும் யான் அறிவேன். இவ்வாலயங்களையும் ஸ்தலங்களையும் சென்று தரிசிப்போரில் பலர் அங்கு தாங்கள் கண்டறியும் சிறப்புகளை பிறரும் கண்டுகளிக்க வேண்டுமென்ற எண்ணமின்றி இருந்து விடுகிறார்கள். அதனால் அவ்வாறு இருப்பது உசிதமல்ல எனக்கருதி நான் சில க்ஷேத்திரங்களின் குஹ்யமான விசேஷங்களைக் குறித்து எழுத உத்தேசித்தேன். முதலாவதாக சுசீந்திரத்தைக் குறித்து எழுதுகிறேன்.

கேரளத்தை 'பரசுராம க்ஷேத்திரம்' அல்லது 'பார்க்கவ க்ஷேத்திரம்' என்றும் கூறுவர். பரசுராமர் க்ஷத்திரிய குலத்தை வேரறச் செய்துவிட்டு பூமியைப் பூராவும் தானம் செய்தமையால் தனக்கு இருப்பதற்காக கோகர்ணத்தில் வந்து தன் பரசுவை எறிய அது கன்னியாக் குமரியில் வந்து விழுந்தது. அப்பரசு சென்ற வழிவரையிலும் உள்ள சமுத்திரம் விலகிவிட்டது என்று கூறப்படுகிறது. இவ்விடத்துக்குப் பிறகு பாண்டிய நாட்டிலும் சோழநாட்டிலுமுள்ள ஜனங்களில் சிலரை அழைத்துவந்து குடியிருக்கச் செய்தார். அவ்விடம் புதிதாக சமுத்திரம் நீங்கி ஏற்பட்டதால் எங்கும் பல ஜல ஜந்துக்களாலுள்ள உபத்திரவம் மிகவும் அதிகமாகயிருந்தது. ஆகையால் அவர்கள் அவ்விடத்தை விட்டு நீங்கி தம் பதிகளை அடைந்தனர். பிறகு

பரசுராமர் வேறு சிலரை அழைத்து வந்து அவர்களுக்கு புது பாஷை ஒன்றை கற்பித்து புது ஆசாரங்களையும் ஏற்படுத்திவிட்டார். ஆகையால் அவர்கள் அங்கேயே தங்கிவிட்டனர் என்று கூறப்படுகிறது. இவர்கள் பாஷை மலையாளம்; இவர்களே கேரளவாசிகளான நம்பூதிரிப் பிராமணர்கள், நாயர்கள் முதலியோராகும்.

இந்த கேரள தேசத்தின் தென்கோடியிலிருக்கும் கன்னியாக்குமரிக்கு வடக்கில் திருவனந்தபுரத்துக்குச் செல்லும் பாதையில் எட்டாவது மைலில் இருக்கிறது இச் சுசீந்திர க்ஷேத்திரம்.

கேரள தேசம் மிகச் செழிப்பானது. இது மலைக்கும் ஆழி (சமுத்திரத்திற்)க்கும் மத்தியிலிருப்பதால் இதற்கு 'மலையாழம்' என்று பெயர் வந்தது. இதிலிருக்கும் பல மலைகளின் காட்சியும், நெல் வயல்களும், பலா, மா, தென்னை முதலிய தோப்புகளும், ஜீவ நதிகளின் தோற்றமும் பார்ப்போர் நேத்திரங்களை களிப்புறச் செய்து அந்த தேசத்தினிடத்தில் ஒருவிதமான இயற்கைப் பிரியத்தை உண்டுபண்ணு மென்பதற்கு ஐயமேயில்லை. அதிலும் தென்காசியிலிருந்து கொட்டாரக் கரை செல்லும் இருப்புப்பாதை (Ghat Section) யிலுள்ள வனக் காக்ஷியின் மஹிமையை வர்ணிப்பது அசாத்தியம். ஒவ்வொருவரும் பார்த்து அனுபவித்தலே சிரேஷ்டமாகும்.

தற்சமயம் எங்கும் விரைந்து செல்வதற்கு இருப்புப் பாதை வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் குறைந்த கூலிக்குக் கிடைக்கின்றன. முன் காலத்தைப்போல திருடர் பயமும் அதிக கால விரயமும் இல்லை. அனேக சதமைல் தூரங்களை மணிக்கணக்கில் முடித்துவிடலாம். ஆகையால் பல ஸ்தலங்களை தரிசிப்பது அதிக சுலபம்,

திருநெல்வேலிக்கு தென்மேற்கில் சுமார் 50 மைல் தூரத்திலும் திருவாங்கூர் ராஜ்யத்தின் தலைநகரமான திருவனந்தபுரத்தின் தெற்கில் 45-வது மைல் தூரத்திலுமிருக்கிறது இத்தலம். திருநெல்வேலி ஜில்லாபோர்டாரும் திருவாங்கூர் ராஜ்யாதிகாரிகளும் கலந்து அதி சீக்கிரத்தில் திருநெல்வேலி கன்னியாகுமரி திருவனந்தபுரம் இருப்புப்பாதை போட்டுவிடுவார்கள் என்று நம்பப்படுகின்றது. அப்பொழுதுதான் இத்தலம் அதிக யாத்திரிகர்களை அழைத்துக்கொள்ளும்.

இங்குள்ள கோவிலின் அழகும், கோபுரத்தின் உயர்ந்த ஆடம்பரத் தோற்றமும், இத்தேவாலயத்திலுள்ள சிற்ப விசேஷங்களும், கண்டு களிப்புறவேண்டியது அவசியமே. இவ்வூரில் தங்குவதற்கு மூன்று சத்திரங்களிருக்கின்றன. இங்கு பிரவஹிக்கும் தந்தநதியானது தேவேந்திரனது ஐராவதமெனும் கஜேந்திரனால் சிருஷ்டிக்கப்பட்டதெனக் கூறப்படுகிறது. பரசுராமர் இக்ஷேத்திரத்திற்கு நித்திய நைமித்தியங்கள் நடைபெற ஏற்பாடு செய்ததாக கர்ணபரம்பரையாகக் கேள்வி. தற்சமயம் தேவாலய பரிபாலனம் திருவாங்கூர் தேவஸ்தானம் இலாகாவால் நிர்வகிக்கப்படுகிறது.

இவ்வாலயத்தின் பல பாகங்களிலுள்ள தூண்களிலும், மதில்களிலும் நூற்றுக்கணக்கான கல்வெட்டுக்கள் தமிழ், மலையாளம் முதலிய பாஷைகளில் வெட்டப்பட்டிருக்கின்றன. முன்காலத்தில் பல அரசர்கள் பலதானங்கள் அளித்த விவரங்களை இச்சாஸனங்கள் தெரிவிக்கின்றன. கி. பி. 940-ல்



ஆண்ட பரகேசரி அனேக தானங்கள் கொடுத்ததாகவும் கி. பி. 1000-ல் ராஜராஜவர்மன் என்ற சாளுக்கிய அரசன் இத் தேவாலயத்தை கட்டுவித்ததாகவும் சில சாஸனங்களால் நமக்குத் தெரியவருகிறது.

இத்தேவாலயத்திலுள்ள சிற்பக் காக்ஷிகளும் காணவேண்டியவைகளே. ஒவ்வொரு தூண்களிலும் வெட்டப்பட்டிருக்கும் விக்கிரகங்களையும், க்ஷேத்திரத்தில் பூஜார்ஹமான சிலர் விக்கிரகங்களையும் பார்த்தால் அக்காலத்தில் எத்தகைய சிற்பிகளிருந்தார்கள் என்பது நன்கு விளங்கும். இங்கிருக்கும் அனுமார் விக்கிரகம் சுமார் 12 அடி உயர மிருக்கிறது. இச்சிலையின் கமபீரத் தோற்றம் யாவருடைய மனதையும் ஆகர்ஷிக்கும் என்பதில் ஐயமேயில்லை. இதுபோல மிகப் பெரிய ஒரு விநாயகர் விக்கிரகமு மிருக்கிறது.

அலங்கார மண்டபத்திலுள்ள நான்கு பெருந் தூண்களை பார்க்கவேண்டியது அவசியமே. ஒவ்வொரு தூணும் 32 சிறு தூண்களை யுடையது. ஒரே தூணில் முப்பத்திரண்டு கிளைத் தூண்களை நன்றாக வழவழப்புடன் சித்திரித்திருக்கும் சிற்பியின் திறமைதான் என்ன! இத்தூண்கள் ஒவ்வொன்றிற்கும் நாதம் வெவ்வேறு என்று தட்டிப் பார்த்தால் தெரியவரும்.

கி. பி. 1410-ம் ஆண்டில் திருவாங்கூரின் தென் பாகத்தை ஆண்டு வந்த மார்த்தாண்ட வர்மாமஹாராஜா பல மண்டபங்கள் கட்டினதாக சாஸனங்கள் தெரிவிக்கின்றன. இங்குள்ள பால மார்த்தாண்ட வர்மா மஹாராஜாவின் சிலையை பார்க்கவேண்டியது அவசியம். ஒரு கையில் தன் உடைவாளும், மற்றொரு கையில் கேடயமும் ஏந்தி நிற்பதை கவனிக்கவும். இவரின் ஆக்ஷிகாலம் கி. பி. 1750 ஆகும். இவரே திருவாங்கூர் ராஜ்யத்தை தற்கால விஸ்தீரணமுள்ளதாகச் செய்தவர். இவ்வாலயத்தின் கோபுர வாசல் வழி உள் சென்றவுடன் முதல் காக்ஷி மன்மதனும் ரதிதேவியுமே. மன்மதன் தன் இக்ஷு சாபத்துடன் நிற்பதையும், ரதிதேவி ஹம்ஸ வாஹனத்தின் மீது வீற்றிருப்பதையும் பார்த்தாலே சிற்பிகளின் திறமை நன்கு விளங்கும்.

இந்த க்ஷேத்திரத்தின் முன் புறத்திலிருக்கும் கோபுரத்தின் வெளிப்புறத்தில் பல புராணக் கதைகளைக் காட்டும் சித்திரங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. உட்புறத்தில் ராமாயணம், தசாவதாரம், சுசீந்திரஸ்தல புராணம் முதலியவைகளை சிறு குழந்தைகளுக்குக் கூட நன்றாக விளங்கும்படி சித்திரங்களாக எழுதப் பட்டிருக்கின்றன. இவ்வூர் கோபுரம் ஆதியில் 1545-ல் விஜய நகர அரசர்களால் கட்டப் பட்ட தென்று தெரிய வருகிறது. பிறகு அதை 1887-ம் வருஷம் மறுபடியும் புதுப்பிக்கப் பட்டது. இக் கோபுரம் ஏழு தட்டுகளை (மாடிகளை) யுடையது.

இங்குள்ள ஸ்தாணு மாலயனை (தாணு=சிவன், மால்—விஷ்ணு, அயன்=பிரம்மன்) தினமும் தேவேந்திரன் பூஜித்து வருவதாக ஐதீஹம். இவ்வூரிலுள்ள மூர்த்தியை பூஜித்ததால் தேவேந்திரனது ஸஹஸ்ரயோனியும் ஸஹஸ்ர நேத்திரமாக மாறி இந்திரன் பரிசுத்தன் ஆனதால் இவ் வூருக்கு சுசி—இந்திரம் என்ற பெயர் வந்தது.

அத்ரி முனிவரும் அவர் மனைவி அனசூயா தேவியும் இங்கு வந்து தபஸ் செய்து கொண்டிருக்கையில் அவ் வம்மையாரின் கற்பைப் பரிசோதிக்க

எண்ணி திருமூர்த்திகள் சன்யாசி வேடத்துடன் அவள் முன் தோன்றி பிக்ஷையிட வேண்டினர். அத் தேவியாரும் அவ்வாறே பிக்ஷை அளிப்பதாகக் கூறினர். ஆனால் வந்தவர்கள் அவளை நக்னமாக அதாவது வஸ்திர மில்லாமல் பிக்ஷை யிடும்படி வேண்டியதால், தமது பாதிவிருத்திய மஹிமையால் அவர்களை சிறு சிசுக்களாக மாற்றி ஸ்தன்ய பானம் செய்வித்து தன் மொழியைக் காத்தனள். இக் குழந்தைகள் மூவருக்கும் தத்தர், ஆத்ரேயர் சந்திரன் என்று பெயரிட்டு சீராட்டி வந்தாள். பிறகு பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி இவர்கள் தங்கள் கணவர்களைப் பெற அனுசூயா தேவியிடம் வந்து யாசித்து பெற்றனர். அச் சமயம் திரிமூர்த்திகளில் ஸ்தாணு பார்வதீ சமேதராக விருஷபாரூடராகவும், மால் லக்ஷ்மி சமேதராக கருடா ரூடராகவும், அய்யன் வாணீ சமேதராக ஹம்ஸா ரூடராகவும் இத் தம்பதிகளுக்கு காக்ஷி கொடுத்து மோக்ஷத்தை அளித்தார்கள். அங்கு தாணு மாலயனாக ஒரு லிங்கத்தில் ஆவிர் பவித்தார்கள்.

ஆதிகாலத்தில் கௌதம மஹரிஷியின் பத்தினியான அஹல்யையை எவ்விதமாவது புணர வேண்டுமென்ற ஆவல் கொண்டு தேவராஜனான புருஹூதன் கௌதம மஹரிஷியின் ஆசிரமத்துக்கு ஒரு நாள் நள்ளிரவில் வந்து காக்கை மாதிரி 'கா, கா, கா' என்று கூவினான். இதைக் கேட்டதும் முனிவர் ஸ்னானத்துக்கு கங்கா நதிக்குப் புறப்பட்டார். அதற்குள் தேவேந்திரன் கௌதமரைப் போல் உருத் தரித்துக் கொண்டு அஹல்யைப் புணர்ந்தான். கௌதமர் கங்கா நதிக்குச் சென்றதும் தான் அர்த்த ராத்திரிக்கே அங்கு வந்ததை அறியலானார். உடனே தன் ஞான திருஷ்டியால் விஷயங்களைத் தெரிந்து திரும்பித் தமது ஆசிரமத்துக்கே வந்து சேர்ந்தார். அப்பொழுது புரந்தரன் தன்னுருவத்துடன் வெளியே வந்ததைக் கண்டு அவனை "நீ ஒரு மஹரிஷி மனைவியின் யோனியை விரும்பினமையால் உன் சரீரம் முழுதும் ஆயிரம் யோனிகளாகக் காணக் கடவது' என்று சபித்தார். தன் மனைவியையும் 'நீ கல்லாகக் கடவது' என்று சபித்தார். அவளுக்கு சாப விமோசனம் ஸ்ரீ ராமபிரான் பின்பு அவ் வழியே வரும் பொழுது ஏற்படும் என்று கூறினார். அஹல்யையின் சாபத்தை ஸ்ரீராமபிரான் போக்கிய விஷயம் நாம் யாவரும் இராமாயணத்திலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இந்திரன் சரீரத்திலுள்ள ஸஹஸ்ர யோனிகளும் எவ்வாறு ஸஹஸ்ர நேத்ரங்களாக மாறின என்பதை அறிய யாவரும் ஆவல் உள்ளவரர்களாக யிருப்பார்கள். பிறகு இந்திரன் தன் குலகுருவான பிரகஸ்பதிபகவானை வினவ அவர் கோளத்தின் தென் பாகத்தில் முன்னொரு காலத்தில் திரிமூர்த்திகளும் ஒன்று சேர்ந்து அத்ரிமஹரிஷிக்கும் அனசூயைக்கும் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அளித்த ஸ்தலமாகிய ஞானாரண்ணியத்தை அடைந்து அங்குள்ள ஸ்தாணுமாலயனை சேவித்தாலன்றி வழியில்லை என்று கூறினார். அவ்வாறே இந்திரன் இங்கு வந்து பிரஞ்ஞான தீர்த்தத்தில் ஸ்னானம் செய்து பகவானை திருப்தி செய்து குருநாதனுடைய அருளாலும், தாணுமாலயனுடைய அனுக்கிரகத்தாலும் ஸஹஸ்ர நேத்திரனானான். அது முதல் இவ் வூருக்கு சுசீந்திரம் எனப் பெயரும் உண்டாயிற்று.

இங்கு முக்கியமாய் 10 நாள்கள் நடைபெறும் உத்ஸவங்கள் இரண்டும் ஒன்று மார்கழி மாதம் திருவாதிரை யன்று 10-ம் திருநாளாகவும் மற்றொன்று சித்திரை மாதம் பரணி நக்ஷத்திரத்தில் ஆரம்பிக்கிறதாகவும் இருக்கின்றன.



முதல் கூறின உத்ஸவத்தில் பெரிய ரதத்தின் காக்ஷியும், இரண்டாவது உத்ஸவத்தில் தெப்ப உற்சவமும் மிகவும் சிலாக்கிய மானவை. ஆனால் இரண்டிலும் 5-ம் நாளும், 7-ம் நாளும் உத்ஸவங்கள் மிகவும் விசேஷமாக யிருக்கும். சுமார் ஆறடி உயரமுள்ள வெள்ளியில் செய்யப் பட்டுள்ள ஒரு விருஷப வாஹனமும், கருட வாஹனமும், ஹம்ஸ வாஹனமும், பூத வாஹனமும், தசமுகி ராவணனோடு கூடிய கைலாச பர்வத வாஹனமும் சுமார் 10 அடி உயரமுள்ள வெள்ளி பத்ம வாஹனமும், 12 அடி உயரமுள்ள வெள்ளி ஆதிசேஷ வாஹனமும் இன்னும் பல வாஹனங்களும் இவ்வுத்ஸவங்களில் பார்க்கலாம்.

அன்னதானத்தில் திருவாங்கூர் ராஜ்யம்போல் பெயர்பெற்றது எதுவுமே இல்லை. இந்த உற்சவ காலங்களில் எவ்வளவு அந்தணர்கள் வந்த போதிலும் குறைவின்றி அறுசுவையுடன் கூடிய உணவளித்து உபசரிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு வருஷமும் மார்கழி மாதம் 4-ம் திருநாளன்று சுமார் 20 பவுன் விலையுள்ள ஒரு சந்திரக் கலையும் ஒரு விலையுயர்ந்தபட்டும் திருவனந்த புரத்திலிருந்து மஹாராஜாவால் அனுப்பப்படும். இப் பெரிய ரதம் நிலை சேர்ந்த பிறகே மஹாராஜா அன்றைய உணவு அருந்துவார்—அன்ன தானத்திலும் பக்தியிலும் திருவாங்கூர் மன்னர்கள் மிகப் பிரசித்தி பெற்றவர்களாகையால் அந்த நாடும் ஒரு குறைவு மின்றி செழிப்பாக இருக்கிறது.

இவ்வளவு விசேஷ ஸ்தலத்தை யாவரும் சென்று பார்த்து தாணுமாலயன் அருள் பெற்று நீடூழி க்ஷேமமாக வாழ்வீர்களாக.

---


# "Funny" Magzin of India

**(Bi-monthly) Published on the 5th & 20th.**

*GIVES THE BEST OF EVERYTHING*

**Jokes, Stories, Serials, Humorous articles, Cartoons of great events and Competitions.**

**LUCKY NUMBER SCHEME & FREE PUZZLE PRIZE OUR ADDITIONAL FEATURES.**

**Price As. 1-6.**

**AVAILABLE AT ALL STALLS & NEWS AGENCIES.**

*or Apply to:—*

**The "Funny Magzin" Office,**

*No. 6, Lawyer Chinnathambi Mudali St.,*

**Sowcarpet, MADRAS.**

# மொழி யாராய்ச்சி

(தமிழ்ப்பண்டிதர்-டி. எம். மூகையதீன் சாயபு.)

## 1. பாஷையின் தோற்றம்.

உயிர்கள் தம் உணர்ச்சிகளை யாதேனும் ஓராற்றான் வெளியிட முயல்கின்றன. அவ்வுயிர்கள் நினைத்தற் சக்தி வாய்ந்தனவா யிருப்பின் அவை தம் உணர்ச்சிகளை மட்டுமன்று, தாம் நினைக்கும் நினைவுகளையும் எவ்வாற்றானும் வெளியிட முயல்கின்றன.

தாவர சாஸ்திர ஆராய்ச்சியில் வல்லவர்கள் ஓரறிவுயிர்களாகிய செடி கொடி மர முதலிய தாவரப் பொருள்களுக்கும் உணர்ச்சி யுண்டு என்றும் அவை தம் உணர்ச்சியை நமது ஊனக்கண்ணுக்குப் புலனாகாத ஓர் முறையில் வெளியிடுகின்றன என்றும் கூறுகின்றனர்.

"புல் மாமுதல வுற்றறியுமோ ரறிவுயிர்"
"முரண் நந்தாதி நாவறிவொடீ ரறிவுயிர்"
"சிதலெறும் பாதிமூக்க றிவின்மூ வறிவுயிர்"
"தும்பிவண் டாதிகண் ணறிவினா லறிவுயிர்."

(நன். சூ. 445–448.)

எனக் கூறப்பெற்ற ஓரறிவுயிர் முதல் நாலறிவுயிர் வரையுள்ள எல்லா வுயிர்களும் இவ்வாறே ஏதோ ஓர் வழியால் தம் உணர்ச்சிகளை வெளியிடுகின்றன. சில வுயிர்கள் வெளியிடும் உணர்ச்சிகள் நம் கண்ணுக்குப் புலனாகின்றன. சில வெளியிடுபவை நம் கண்ணுக்குப் புலனாகா. சிறுபான்மை நினைப்பு என்பது ஐயறிவுடைய புட்களிடத்தும் விலங்குகளிடத்தும் காணப்படினும் பெரும்பான்மை இஃது ஆறறிவுடைய மக்கள் முதலிய உணர்திணைப் பொருள்களிடத்தே காணப்படும் ஓர் தத்துவமாகும். ஐயறிவுயிர்களினும் ஆறறிவுடைய மனிதர்களிடத்துத்தான் நினைத்தல் தத்துவம் நிறைந்து நிலவும்.

மனிதனிடத்து எப்பொழுது நினைத்தற் றத்துவம் நிறைந்து நிலவுமோ அப்பொழுதே அவன் தன் நினைவை—தன் எண்ணத்தை—தன் கருத்தை—எப்படியேனும் வெளியிட முயல்வான் என்பது நிச்சயம். இம்முயற்சியில் மனிதன் தன் எண்ணங்களை வெளியிடும் பொருட்டுக் கையாடிய முறைகள் பல. இம்முறைகளெல்லாம் ஒருவர் கற்பிக்கக் கற்றுப் பழகியவை யல்ல. 'அவசியமே' (necessity) கருவியாகக் கொண்டெழுந்த இயற்கை நெறிகளாகும்.

உலகாரம்பத்தில் மனிதன் தோன்றியபோது மேற்கூறிய இயற்கை நெறியை யொட்டி அவன் தன் கருத்தை எங்ஙனம் வெளியிட முயன்றான்?



அவன் தன் இன்பத்தைச் சிரிப்பாலும் துன்பத்தை அழுகையாலும் இவ்விரண்டுமற்ற தன்மையை அமைதியாலும் வெளியிட்டான்.

பின்பு மனிதன் அறிவில் வளர வளர அச்சிரிப்பும் அழுகையும் அமைதியும் அவனது கருத்தை வெளியிடுதற்குப் போதாத காலம் வந்தது. அதாவது அவை அவன் மனதில் தோன்றிய நினைவுகளை யெல்லாம் வெளியிடுதற்கு ஆற்றலற்றவையாயின. பின்னர் அவன் தன் கருத்துக்களை யெல்லாம் சைகைகளின் வாயிலாய் வெளியிடத் தொடங்கினான் ('அசைகை' 'சைகை' என மருவிற் றென்பர்.)

(தற்காலத்து வழக்கத்திலுள்ள சைகைகளை ஒருவாறு மானஸமாக இடை வெளிகளில் அமைத்துக்கொண்டு பின்வரும் வாக்கியத்தைப் படிக்குமாறு அன்பரை வேண்டிக்கொள்கிறேன்.)

இம்முறைபால் போ என்பதை—என்றும் வா என்பதை-என்றும் எடு என்பதை—என்றும் வை என்பதை—என்றும் போடு என்பதை-என்றும் அடி என்பதை-என்றும் எறிஎன்பதை-என்றும் உட்கார் என்பதை—என்றும் எழுந்திரு என்பதை—என்றும் கையை அசைத்துக்காட்டி வெளியிடலாயினான். பிறவும் அன்ன.

இவைகளெல்லாம் கண் முன் நிற்கும் மக்களையும் பொருள்களையும் சுட்டிப் பேசுங்கால் கையாளப்படுங் குறிகளாதலின் 'சுட்டுக்குறி' அல்லது சுட்டுச் சைகை' எனப்படும். கண் முன் உள்ள—பொருள்களைப்பற்றியே மனிதன் எப்போதும் பேசுவதா யிருந்தால் அவனது கருத்து வெளியாதற்கு இச்சைகைகளே சாலும். ஆயின் கண்முன் இல்லாத பொருள்களைப்பற்றிய எண்ணங்களையும் வெளியிட அவனுக்கு அவசியம் ஏற்படுகின்றது. இவ்வவசியம் ஏற்படுங்கால் இச்சுட்டுச் சைகைகள் அதற்குப் போதிய சாதனமா யமைந்தில. ஆதலின் கண்முன் இல்லாத சில பொருள்களைப்பற்றிப் பேசுங்கால் அவற்றை உவமை வகையால் கையசைத்துச் சுட்டிக்காட்டத் தொடங்கினான்.

(ஈண்டும் இடைவெளிகளில் ஒவ்வொரு பொருளையும் குறிப்பதற்கேற்ற சைகைகளை மானஸமாய் யூகித் தமைத்துக்கொண்டு பின்வரும் வாக்கியத்தைப் படிக்க.)

இம்முறையில் சந்திரனை—என்றும் சாதத்தை—என்றும் தண்ணீரை—என்றும் மாங்காயை—என்றும் பாம்பை—என்றும் குடையை—என்றும் குழந்தையை—என்றும் கையைப் பல்வேறு வகையாக ஆட்டியும் அசைத்தும் விரித்தும் சுழற்றியும் காட்டத் தொடங்கினான். பிறவும் அன்ன.

இவை பெரும்பாலும் பொருள்களின் வடிவுவமை பற்றியும் பொருள்களோடியைபுற்ற செயலுவமை பற்றியும் எழுந்த குறிகளாதலின் இவற்றிற்கு 'உவமைக்குறி' அல்லது 'உவமைச் சைகை' எனப்பெயர். முற்கூறிய சுட்டுக்குறி ஈண்டுக்கூறிய உவமைக்குறி ஆகிய இவைகளால் கருத்தை வெளியிட்ட நிலை 'மூங்கைநிலை' எனப்படும். இம்மூங்கை நிலையின் பாற்பட்ட சுட்டு உவமைக்குறிகளின் வாயிலாயும் மனிதன் தன் கருத்தைப் பூர்ணமாயும் தெளிவாயும் வெளியிடும் ஆற்றல் பெற்றிலன்.

மனிதன் அண்ணாந்து ஆகாயத்தைச் சுட்டித் தன் கைவிரலால் வட்டமிட்டுக்காட்ட சந்திரனாயிருந்தாலு மிருக்கலாம், சூரியனாயிருந்தாலு மிருக்கலாம். விரல்களைக் குவித்து வாயில் வைத்துக் காட்டியது சாதமாயிருந்தாலு மிருக்கலாம்; வேறு தின்பண்டங்களாயிருந்தாலு மிருக்கலாம். மற்ற விரல்களை மடக்கிப் பெருவிரலை வாயில் வைத்துக்காட்டியது தண்ணீராயு மிருக்கலாம்; கள்ளாயு மிருக்கலாம். (அன்றித் தண்ணீராயு மிருக்கலாம்; வெந்நீராயு மிருக்கலாம்) மாங்காய்க்குக் காட்டிய குறி தேங்காயையும் குறிக்கலாம். கையை நெளித்து நெளித்துக் காட்டியது பாம்பாயு. மிருக்கலாம் பாம்பாணையாயு மிருக்கலாம். கையை நிமிர்த்து மேலே தூக்கிக்காட்டியது குடையாயு மிருக்கலாம். கோலாயு மிருக்கலாம். ஒரு கையைக் கீழே தாழ்த்தி அதற்குமேல் ஒரு கையைச் சிறிது தூரத்தில் உயர்த்திக்காட்டியது குழந்தையாயு மிருக்கலாம், நாய்க்குட்டியாயு மிருக்கலாம்.

ஆகவே இப்போறற் குறிகள் (உவமைக் குறிகள்) தன் கருத்தைத் தெளிவற விளக்காமையானும் தான் கருதிய கருத்துக்கு மாறான பொருளைப் பிறர்க்குக் குறிப்பதானும் மனிதன் அடுத்த படியில் இவற்றினும் ஒரு சிறிது மேலான முறையைக் கைக்கொள்ள முயன்றான். முன்னர் வழங்கி வந்த கைக்குறிகளாகிய சுட்டுக்குறிகளையும் உவமைக் குறிகளையும் விட்டுவிடாமல் அவற்றோடு இப்போது குரற்குறியையும் துணைக்கருவியாகக் கொண்டான்.

இந்நிலையில் நாயைக் குறிப்பான் விரும்பியவன் கையை உயர்த்தியும் தாழ்த்தியும் காட்டுதலோடு வாயாலும் குரைத்துக் காட்டினான். மாட்டைக் குறிப்பான் கொம்பையும் காலையும் வாலையும் சைகையாற் காட்டுதலோடு ஒலியாலும் 'மா' அல்லது 'மே' என்றான். இவ்வாறே ஒவ்வொன்றிற்கும் ஏற்ற சைகையோடு சிங்கத்தை உறுமியும் கழுதையைக் கத்தியும் குதிரையைக் கனைத்துங் காட்டலாயினான்.

இவ்வாறு சைகையும் குரலும் இணைந்து நிற்கப் பொருள்களைக் குறித்து வந்தது 'ஒலிக்குறி நிலை' எனப்படும். இவ்வொலித்துணையும் மனிதனது கருத்தை யெல்லாம் விளக்குதற்குப் போதியதன்று.

மாட்டைக் குறிக்கக்காட்டிய ஒலியும் சைகையுமே ஆட்டையும் குறிக்கலாம். அல்லது மாட்டையே குறிப்பினும் அஃது எருமைமாடாயு மிருக்கலாம்; பசுமாடாயு மிருக்கலாம். (வரையறுத்து இன்னது இன்னது எனக் குறிக்கும் தன்மை இவ்வொலியினிடத்தும் அதனோடுகூடிய சைகையினிடத்தும் இல்லை என்றபடி) உறுமிக்காட்டிய ஒலியும் அதனோடியைந்த சைகைகளும் புலியையும் குறிக்கலாம்; சிங்கத்தையும் குறிக்கலாம். நாய்க்குக் காட்டிய குரலும் சைகையும் ஓநாயையும் குறிக்கலாம்.

ஆகவே இவை யெல்லாம் கருதுவோன் கருத்துக்கு மாறாக ஒன்றை மற்றொன்றாகக் கொள்ளும் திரிபுணர்ச்சிக்கு ஏதுவா யமைந்துள்ளன. அன்றியும் இந்நிலையிலும் கல்மண் மரம் செடி வீடு வீட்டுப் பொருள்கள் காடு காட்டுப் பொருள்கள் கடல் மலை வானம் முதலிய எல்லாவற்றையும் குறிக்கும் ஆற்றலை மனிதன் பெற்றிலன். இப்பொருள்களை யெல்லாம் எந்தச் செய்கையானும் ('செய்கை' என்பதே 'சைகை' என மருவிற்றென்பது சிலர் கொள்கை) எந்த ஒலியானும் காட்டவல்லன்? மேலும் இச்சைகை யொலிகளால் வினைகளில் போ, வா, உண், வெட்டு, குத்து, படு என்பனவாதிய மிகச் சில ஏவல்வினைகளையே யன்றிப் பறி, விழு, குதி, விடு முதலியவைகளைப் பறி, விழு, குதி, விடு முதலியவைகளைப் பொருட் பிறழ்ச்சிக்கும் பிறழ்வுணர்ச்சிக்கும் இடமின்றி எங்ஙனம் வெளியிடுவான்? அன்றியும் போய், வந்து முதலிய வினை யெச்சங்களையும் போனான் வந்தான் முதலிய வினைமுற்றுக்களையும் ஒருமை பன்மை ஆண் பெண் முதலிய பாற்பகுப்புக்களையும் எவ்வித ஒலிச்சைகையால் வெளியிட வல்லான்.



தன் வெளியீட்டுக்கு இவ்வொலிக்குறியும் சிறந்த கருவியாகாமை கண்டு மனிதன் தான் காணும் பொருள்களை யெல்லாம் அவ்வப் பொருள்களுக்கேற்ப அச்சத்தாலோ அதிசயத்தாலோ விருப்பாலோ வெறுப்பாலோ உணர்ச்சி மென்மையாலோ உணர்ச்சி வன்மையாலோ பெயரிட்டுச் சில விடங்களில் தன் கருத்தை வெளியிடுதற்குரிய காரணத்தோடும் சிலவிடங்களில் அக்காரணமின்றியும் மொழிகளால் குறிக்கத் தொடங்கினான்.

இவைகளும் ஆரம்பத்தில் குழவிமொழிபோல் குறை மொழிகளாகவேயிருந்தன. பின்புதான் நிறை மொழிகளாயின. நெருப்பைப் பார்த்தவன் அச்சத்தால் 'திக், திக்தி' என்று குழறிய மொழியே பிற்காலத்தில் 'தீ' என்றாயிற்று. புலியைக் கண்டவன் 'புப்,பு புப்,பு' என்று அச்சத்தால் குழறிய மொழியே பின்னர்ப் 'புலி' யென்றாயிற்று. ஆகாயத்தின் விரிவைக் கண்டவன் முதலில் அதிசயித்தால் 'வாஅ வாஅ' என்று ஒலித்த ஒலியே பின்னர் 'வானம்' என்றாயிற்று. விருப்ப மிகுதியால் 'பாஅ-பாஅ' என்று ஆவாவியுரைத்த மொழியே பின்னர்ப் 'பால்' என்றாயிற்று. வெறுப்பு மிகுதியால் 'சூ' என்றெழுந்த ஒலி பின்னர்ச் 'சூடு' என்றாயிற்று மெல்லுணர்ச்சி காரணமாக எழுந்த 'ம——ல' என்னும் ஒலிகள் 'மலர்' என்றாகிப் பூவைக் குறித்தன. வல்லுணர்ச்சி காரணமாக எழுந்த 'க——ட்' என்னும் ஒலிகள் 'கட்டை' யென்றாகி வலிய மரத்துண்டை உணர்த்தின. இவ்வாறு மொழிகள் பெருகின. 'அவசியம்' காரணமாகப் பெருகின இம்மொழிகளெல்லாம் இன்னின்ன காரணத்தால் இன்னின்ன பொருளைக் குறித்தன என இப்போது எடுத்தியம்புதல் அரிது. சிலவற்றிற்கே ஒருவாறு காரணங்கள் யூகிக்கலாம். இங்ஙனம் தோன்றிய மொழிகளும் ஆரம்பத்தில் குறைமொழிகளாயிருந்ததுதான். பின்பு நிறைமொழிகளாயின என்பது முன்னரே கூறப்பட்டது. அதாவது 'பாம்பு' என்பது முன்னர்ப் 'பா' என்றிருந்ததுதான் பின்னர்ப் 'பாம்' என்றாகி அதன் பின்னர்ப் 'பாம்பு' என்றாகியிருத்தல் வேண்டும். 'தே' என்று முதலாவது இருந்தே பின்னர்த் 'தேள்' என்றாகியிருத்தல் வேண்டும், ஒலியின் தன்மையாற் பெயர் பெற்றவைகளாகிய 'காகம்' 'கிளி' கூகைபோன்றவைகள் முதலாவது 'கா' என்றும் 'கி' என்றும் 'கூ' என்றும் இருந்தே பின்னர் அந்நிலையை அடைந்திருத்தல் வேண்டும்; அங்ஙனமே பல்லைக் காட்டுவானொருவன் வாயைத்திறத்தலோடு 'ஈ' என்றொலித்துக் காட்டிய அவ்வொலியே இன்று 'எயிறு' என வழங்குவது. இப்படியே உண், தின், வா, போ, என்பனவும் முதலில் ஒலி நிலையில் குறைமொழிகளாயிருந்தே பின்னர்ப் பகுதிகளாயும் வினை யெச்சங்களாயும் பெயரெச்சங்களாயும் முற்றுக்களாயும் வளர்ந்தன. இங்ஙனமே வீடு கடல் முதலிய பிறமொழிகளையுங் கூறிக் கொள்க.

ஆரம்பதசையில் அரைகுறையாயிருந்த அம்மொழிகள் குறைமொழிகள் எனப் பெயர் பெறும். காலக் கிரமத்தில் அவை வளர்ச்சியுற்று நிறைந்த பின்னரே 'மொழிகள்' எனப்படுவனவாயின. 'மூலமொழி' எனின் அது 'பகுதி' எனப் பொருள்பட்டு நிறைந்த அல்லது நிரம்பிய மொழிகளின்பாற்பட்ட உண், தின், இரு, நட முதலியவற்றையும் குறிக்கக்கூடும் என்றறிகயே அங்ஙனம் கூறாது 'குறைமொழி' என்றும். 'குறைமொழி' குறித்த பொருளைக் காட்டும் ஆற்றலும் தன்மையுமற்ற 'நிரம்பாமொழி' என்றும் 'மூலமொழி' நிரம்பியதன்மையடைந்த 'பகுதிகள்' என்றும் அறிக. அங்ஙனமே 'நிறைமொழி' என்னுங்கால் 'முற்றுச்சொல்' எனப்படும் வினை முற்றுக்களைமட்டும் கொள்ளாது அவற்றோடு பொருளையும் கருத்தையும் தெளிவுற விளக்கும் ஆற்றல் சான்ற பகுதிகளையும் எச்சங்களையும் சுருங்கச்சொல்லின் 'மொழிகள்' எனப்படும் யாவற்றையும் கொள்க.

இங்ஙனம் சைகையாய் ஒலியாய்க் குறைமொழியாய் நிறைமொழியாய் வெவ்வேறு நிலைகளையடைந்து மேலோங்கிச் செல்லுந்தன்மை வளருமியல்புள்ள எம்மொழிக்குமுரியதாகும். பாஷையின் சைகைநிலை ஒலிநிலை குறைமொழிநிலை ஆகிய இவற்றை இன்னும் நம் சிறாரிடத்துக் காணலாம். நம் சிறாரது மழலையும் குதலையும் நிரம்பா மென் சொல்லும் குறைமொழி நிலைக்குரியனவே. இக்குறை மொழிகளெல்லாம் 'ஊமைக்கு உளறுவாயன் சண்டப் பிரசண்டன்' என்றவாறு சைகை, உவமைச் சைகை, ஒலிச்சைகை வெளியீட்டினும் ஒரு சிறிது சிறந்ததாமெனினும் நிறைவாயும் தெளிவாயும் மனிதனது கருத்தை வெளிப்படுத்தும் தன்மை இவற்றிற்கு இல்லை. இவைகள் நிரம்பி மொழி அல்லது வார்த்தை ஆயபின்னரே மனிதன் தன் கருத்தைப் பிறவுணர்ச்சிக் கிடமின்றி வெளியிடும் வன்மை பெற்றான்.

எனவே மனிதனது உட்கருத்துத் தவற்றுணர்ச்சிக் கிடமின்றி விளக்குவது சுட்டுச் சைகைக்குறி வகையானுமன்று, உவமைக்குறிச் சைகை வகையானுமன்று, ஒலிக்குறிச்சைகை வகையானுமன்று, அவ்வொலியின் அம்லமாகிய குறைமொழி வகையானுமன்று, ஆயின் வளர்ந்து முதிர்ந்து நிறைவடைந்த மொழிக்குறியானே யாம். இம்மொழியே சொல் எனவும் வார்த்தை எனவும் வாக்கு எனவும் பதம் எனவும் படும். இவையெல்லாம் ஒருபொருட் கிளவிகள் இம்மொழிகளாலாகிய தொகுதியே 'பேச்சு' அல்லது 'பாஷை' எனப்படும்.

## 2. பேச்சும் சைகையும் திருவருளும் வாசனையும்.

மொழிகளாலாய தொகுதியே பேச்சு அல்லது பாஷை எனப்படும் என முன்னர்க் கூறப்பட்டது.

ஆதியில் உலக மக்கள் யாவரும் ஓரிடத்தே வாழ்ந்து வந்தனர் என்பதும் ஆதலின் அவர்கட்குப் பாஷை ஒன்றாகவே யிருந்ததென்பதும் பின்னர் அவர்கள் பல காரணங்களால் அம்முதலுறைவிடத்தை நீங்கிப் பற்பல பிரிவினராய் வெவ்வேறிடங்கட்குச் சென்று குடி புக்கனர் என்பதும் மொழி நூல்வல்லார் யாவர்க்கும் ஒப்பமுடிந்த கொள்கையாகும். எனின் இம்மக்கள் ஆதியிலிருந்த இடம் இன்னதென்பதும் ஆதியிற் பேசி வந்த மொழி இன்னதென்பதும் இன்னும் ஆராய்ச்சிக்கிடனாகவே யிருந்துகொண்டு வருகின்றன.



இவர்களது ஆதியுறைவிடத்தையும் இவர்கள் பேசிவந்த மொழியிலிருந்து கிளைத்த பல்வேறு கிளைமொழிகளையும் பற்றி பிரிதோரிடத்திற் பேசுவாம்:

முற்கூறிய மொழி அல்லது வார்த்தை என்பது மனிதனது உட்கருத்தை ஐயந்திரிபற உணர்த்தும் ஆற்றல்சான்றதே யெனினும், தன்னைக் கூறுவோனது முன்னிலையில் ஆண்மையுள்ள ஒருவனுக்கே செவிப்புலனாந் தன்மையது. ஒரே ஊரில் அல்லது ஒரே இடத்தில் தன்னினின்றும் ஒரு சிறிது சேய்மையில் அல்லது கூப்பிடு தூரத்தில் நிற்போருக்கு உரக்கக் கூவியாதல் பலக்கப் பேசியாதல் ஒருவன் தன் கருத்தை வெளியிடல் சாத்தியமேயாயினும் ஓசை வெளிப்படாததும் உருக் கண்ணுக்குத் தோன்றாததுமாகிய ஓர் இடத்தில் அல்லது ஓர் அயலூரில் இருப்போரது செவிக்கட் சென்று தன் கருத்தாவின் கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் அவ்வாய்மொழிக்கிலதாதலின் அம்மொழிக்கு முன்னரே யுளதாய செவிப் புலனும் ஒலி வடிவோடமையாது கட்புலனும் வரிவடிவொன்றும் கண்டுபிடிக்கலாயினர் பூர்வமக்கள். இம் முயற்சியில் அவர்கள் எடுபடைத்ததும் எழுதுகோல் படைத்ததும் தம் கருத்தைச் சித்திர ரூபமாய் வரைந்தனுப்பிய முதல் நிலையும் எழுத்துருவாய் வரைந்தனுப்பிய இறுதி நிலையும் இவை முதலிய பிற பல நிகழ்ச்சிகளும் அவற்றின் வரலாறுகளும் பின்னர்க் கூறப்படும்,

இனி, முற்கூறியாங்கு மக்கட் கருத்தானது முதலில் உண்மையாய்ச் சுட்டுக் குறியிலும் உவமைக் குறியிலும் வெளிப்பட்டுப் பின்னர் ஒலியுவமைக் குறியாய் அதன் பின்னர்க் குறைமொழியாய் முடிவில் நிறைமொழியாய் வெளிப்படத் தொடங்கியவுடனே முன்னர் அதன் வெளிப்பாட்டுக்கும் விளக்கத்துக்கும் போலிச் சாதனங்களாயிருந்து வந்த சைகைக் குறிகளெல்லாம் சிறிது சிறிதாய் வழக்காறற்று மறைந்தொழியத் தலைப்பட்டன. ஆயினும் அவை அடியோடொழியவில்லை. எத்தனையோ நூறாயிர ஆண்டுகளாக பாஷை வளர்ந்து மொழியுருவாய் எவ்வளவோ சீரிய நிலையை யடைந்துள்ள இன்றைக்கும் அப்பண்டைச் சைகைகளும் பிறவும் ஒன்றைப் பேசும்போதெல்லாம் தலையை யசைத்தல் உடலை வளைத்தல் கையை நீட்டல் முதலிய பல அறிகுறியுருவாயும் ஊம் (ஆம்) ஊம்ஹூம் (-இல்லை,) (அல்ல ஹூம் ஹூம் (-அப்படியா ?) முதலிய பல தொனியுருவாயும் 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பது வாசனா தோஷமாயும் உடன்வந்துலாவுகின்றன.

'ஆம் அதுதான் விஷயம்' என்பவன் கை விரலை நீட்டி ஓர் ஆட்டு ஆட்டித் தலையை ஓர் அசைப்பு அசைத்து ஆம் அதுதான் விஷயம்' என்று வாயாலும் (வார்த்தையாலும்) சொல்கின்றான். இங்ஙனமே 'இல்லை' என்பான் கையை அகல ஆட்டி 'இல்லை' என்கின்றான். 'மழை வந்தது, குளிர் அடித்தது. உடலை இறுக்கி மூடினான். குடையைப் பிடித்தான் விரைந்து நடந்தான்' என்பதை ஒருவன் ஆத்திரத்தோடு சொல்வதாக நினைத்துப் பாருங்கள். அவனது அபிநயத்தையும் உடனெண்ணிப் பாருங்கள். என்னே மானுடரியற்கை!

குரு தரிசனமும் அருட்பேறும் முதல்வன் காட்சியும் அறிவதறியும் அறிவும் தக்கது இது தகாதது இது நன்மை இது தீமை இது இஃது ஒளி இஃது இருள் எனப் பாகுபடுத்துணரும் ஆற்றலும் கைவந்த பின்னரும் ஒரு

கால் அஞ்ஞான நிலையில் ஒழுகிவந்த பொய்யொழுக்கத்தையும் அப்போது செய்துவந்த போலிச் செய்கைகளையும் தம் பண்டை வாசனையால் பன்முறையும் நாடிப்பற்றிநிற்பர் சின்னாட் பக்பிணிச் சிற்றறிவினர். சில்வழி அவற்றைத் தம் புத்தொழுக்கத்தோடும் புதுச் செயல்களோடும் கலக்கக்கொண்டு நிற்பர். இடையீடின்றி முதல்வனைச் சிந்தையிலிருத்தி அவன் கருத்தையறிந்தொழுகும் பேறு பெற்றோர்க்கன்றி ஆணவமல முதலியவற்றின் வாசனை நீக்கம் எங்ஙனம் எய்தும். மொழிக்கும் அதனோடுடன் நிலவி வரும் சைகைக்குமுள்ள இயைபு இறைவன் அருள் பெற்ற உயிர்க்கும் அதனோடு கலந்து நிற்கும் வாசனைக்குமுள்ள இயைபேயாகும்.

கிறிஸ்துவின் சரித்திரமெழுதிய நூலாசிரியரொருவர் கிறிஸ்துவை 'வார்த்தை' என்றனர். கிறிஸ்து இங்ஙனம் கூறப்படுதற்குரிய காரணமும் வரலாறும் கிறிஸ்து சமய சித்தாந்தத்தைத் தழுவிக் கிறிஸ்தவர்கட்கும் கிறிஸ்வரல்லாதவர்கட்கும் பயன்படும்படி இக்கட்டுரையின் தொடர்ச்சியாகவே அடுத்த வெளியீட்டில் எழுதப்படும்.

அதன் பின்னர்க் கிறிஸ்து சமயத்தில் கூறப்படும் வார்த்தை என்னும் தத்துவத்துக்கும் சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் 'வாக்கு' அல்லது 'நாதம்' என்னும் தத்துவத்துக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றியதோர் ஆராய்ச்சிக் கட்டுரை வெளிவரும்.


## ஒரு சிறந்த நாவல் சஞ்சிகை

'மனமோகினி' என்னும் நமது இனிய நாவல் சஞ்சிகைக்கு இப்போது பிப்ரவரி முதல் பதின்மூன்றாவது ஆண்டு நடந்து வருகிறது. இதில் 'நாகபுரியின் நாகரிகம்' என்னும் புதிய நாவல் ஆரம்பிக்கப்பட்டு வெளியாகிவருகிறது. இந்நவீனகம் படிக்கப் படிக்கத் தெவிட்டாத அமுதமாகும். இதுவே ஆங்கில நாவலாசிரியராகிய ரெயினால்ட்ஸின் கடைசி கதையாகையால் மிக்க ருசிகரமாக இருக்கும். சுமார் நான்கு ரூபாய் விலையுள்ள நாவல் ஒரு வருஷத்தில் கிடைக்கும். பிரதி மாதமும் கிரௌன் 1-க்கு 16 சைசில் 80 பக்கங்கள் வெளியாகின்றன. இதன்,

வருஷ சந்தா ரூபா 2—8—0 தான்.
அன்னிய நாடுகளுக்கு ரூபா 3—0—0.
உடனே முன்பணம் அனுப்புங்கள்.

மானேஜர் :—'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.





## ஔவையார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

"அழகலாதன செயேல்" என்பது இனி அடுத்து வருவது. இதற்கு நீ துன்பப்பட வந்தகாலத்தும்; இழிவான செயல்களைச் செய்யாதே என்பது பொருள். தங்கள் தகுதிக்கும் புகழுக்கும் தகுதியல்லாத செயலை வருத்தம் காரணமாகச் செய்ய அறிஞர் துணியார். நளச்சக்கரவர்த்தி சூதாட்டத்தினால் நாடிழந்து காடுழன்று அல்லல் உற்ற காலத்திலும் தன்பால் தலையன்புடைய மாதுலனின் நகர்க்குச் செல்ல இசைந்தானில்லை. தருமன் வனவாசத்திலும் பன்னீராயிரம் வேதியர்களுடன் அமைதியாகக் காலங் கழித்ததோடு துருவாசமுனி போன்ற அதிதிகளையும் பூஜித்து அருள்பெற்றான். கௌஸல்யாதேவி, மாற்றாளுக்கு கட்டுப்பட்டுத் தன் தவப் புதல்வனை கானனச் செய்தான் தனது நாயகன் என்று வன்மம் பாராட்டித் தசரதனை வெறுக்கவில்லை.

பெரிய புராணத்தில் காணப்படும் இளையான்குடி மாறநாயனாரும் அவர் மனைவியாரும் நள்ளிரவில் அடைமழையில் தமக்கே உணவின்றிச் சோர்ந்து நின்ற நிலையில் விருந்தேற்று முகமலர்ந்து அகம்நெகிழ்ந்து பகலில் விதைத்து வந்த வயலில் காலால் வழி தடவிச்சென்று நென் முளைகளை வடிகால் வழியைத் தடுத்து வாரிவந்து அமுதமைத்து வந்த முதியாருக்கு அமுதூட்ட முற்பட்டதைவிட வேறு உதாரணமும் வேண்டுமோ?

துரியோதனன் தனது வெற்றிக்கு உரிய நாளைக் குறிப்பிட்டுத் தரும்படி தனது எதிரிகளாகிய பாண்டவரில் சகாதேவனை நாடிக் கேட்டது எதனைக் குறிக்கின்றது? கொள்கை பிறழாத உறுதி உடையவர்களே அழகல்லாத காரியங்களைச் செய்ய ஒரு போதும் துணிவுகொள்ள மாட்டார். இவைபோல் வலைகளின்றிக் காண்பவர் யாது நினைவார் என்றும் கருதாது அவிவேகத்தின் மிடுக்கினால் தனக்கு ஒவ்வாச் செயல்களைச் செய்வதும் அழகாகாது. உதாரணமாக தற்கால யுவர் சிலர் பிஞ்சிற் பழுத்ததுபோல பிர்மசரியம் பேணாமல் சுக சம்பிரம முகூர்த்தங்களாகக் காட்சியளிக்கின்றனர். பின்னும் சிலர் தனது தந்தையைப் போன்றவர்களிடமும் பாட்டன் போன்றவர்களிடமும் கூடக் கூசாமல் சிட்டு ஆடவும் சொக்கட்டான் ஆடவும் தொடங்குகின்றனர். லாகிரி வஸ்துக்களின் உபயோகம் கவுரவத்தின் சின்னமாகக் கொள்ளப்பட்டிருப்பதை உணராதார் இல்லை. நாகரிகங்களென மதிக்கப்பட்டு உபயோகத்தில் உச்சநிலை பெற்றிருக்கும் அலங்காரப் பொருள்களைப் பற்றிக் கேள்வியில்லை. எந்த சபைகளிலும் அவைகளுக்கு வரி விதிக்கும்படி பிரஸ்தாபிப்பவர்களும்

காணோம். பிரஸ்தாபித்தாலும் ராஜப் பிரதிநிதி யவர்களின் விசேஷ அதிகாரம் நிராகரியாமல் கைகட்டிக் கொண்டா பார்த்திருக்கும்? அழகென்பது சமூகத்தில் தக்கோர் எவரும் விரும்பும் செய்கைகள், கொள்கைகள், கோலங்கள் முதலியவைகள் என்பதையே குறிக்கும். இத்துறையில் பெண்களும் வாலிபர் கோஷ்டிக்குப் பின் வாங்கினவர்கள் இல்லை. காலின் சுண்டு விரலைக் கூட ஸில்ப்பர் உபயோகிக்கும் போது மயக்கம் கொடுத்து வெட்டிக் கொள்ளும் நவீன நாகரிக மோகமும் தலைதூக்கியது. வயித்தியக் கல்லூரி மாணவிகளிற் சிலர் தலை மயிரைக்கூட கத்தரித்துக் கொள்ளத் துணியும் நிலைமையும் ஏற்படாமல் இல்லை.

இவைகளை அழகென அன்னார் மதித்தாலும் பெரியோர்கள் ஒப்பத் துணியார். "அழகலாதன செயேல்" என்ற மூதாட்டியாரின் குறிப்புக்கு மேலே சுட்டிய யாவும் உதாரணங்களே யாகும்.

"இனி இளமையிற்கல்" என்றனர் பெருமாட்டியார். இளவயதிலேயே நீ கற்கத்தொடங்கு என்பது பொருள். இளமையில் கல் என்றமையால் மனதை அகழ்ந்துகொள் என்று கூறினர் எனக் கொள்ளல் வேண்டும். உலக எண்ணங்கள் உள்ளத்திற் குடிபுக முடியாத காலம் இளமைப் பருவந்தான்.

அப்பருவத்தில் மனமாகிய கற்பலகையில் செதுக்கப்பட்ட எழுத்துக்கள் எண்பதாண்டுகள் சென்றாலும் அழிந்துபடா. இதன் அவசியத்தினைப் பற்றி நாயனாரும், கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு 'புண்ணுடையர் கல்லாதவர்' என்று உறுத்திக் கூறினார். இக்கருத்தேயன்றி படிப்பின் கருத்தையோ பொருளையோ உணரும் தன்மை இளமையில் இல்லை. அந்தக் காலத்தில் அசட்டை செய்து கல்லா தொழியின் வயது வந்தபின் ஒன்றையும் உணர முடியாதவர்களாக இடர்ப்படுவர்.

நீதிநூலுரைக்கவந்த அறிஞர் எழுத்தறிவு இல்லாதவரை மாக்கள் என்றும் கூற விழையாமல் மரம் என்றிகழ்ந்தனர்.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்—என்றருளியதே சாலும்.

மக்கட்கு அறியாமை யென்னும் இருளை நீக்கி ஞானமென்னும் ஒளியைத் தருவதே கல்வி எனப்படும். ஆதலின் அத்தகைய கல்வியை இளமையிலேயே கற்றல் வேண்டுமென் றருளினார். கவலையின்றிக் களங்கமின்றி வளர்ச்சிக்கிடமான இளமையில் கற்கும் கல்விபோலப் பின்னர் வயது முதிர்ந்தபின்பு கற்கும் கல்வி உள்ளத்தில் உரம்பெறாது.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" எனவும்
"உளர்என்னு மாத்திரையர் அல்லாற் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்" எனவும்

வரும் திருவாக்குகளால் மனிதராய்ப் பிறந்தும் மக்களெனக் கூறவும் கண்ணுடையவர் எனப் புகலவும் கல்லாதவர் தகுதியற்றவர் என ஒதுக்கினமை யுணரலாம்.



திருமந்திரக் காரரும்,

வல்லார்க ளென்றும் வழியொன்றி வாழ்கின்றார்
அல்லா தவர்கள் அறிவுபல வென்பர்
எல்லாவிடத்து முளன் எங்கள் தம்மிறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே.

என்றருளினார்.

இத்தகைய நீதிகள் நிரம்பிக் கிடக்கும் இந்தியாவில்தான் நூற்றுக்கு ஆறு பெயர் படித்தவர்கள் என்று கணக்கு எடுக்கப்பட் டிருக்கிறது. இளைஞர் கற்பிக்கப்படாத குற்றம் பெற்றோரையே சாரும். பெற்றோர் என் செய்வர்?

"மானங்குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானந்தவ முயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்பாற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்துபோம்".

என்றபடி வறுமை குடிகொண்ட இந்நாட்டில் கல்விகற்பவர் தொகை எவ்வாறு பெருகும். இந்தியநாடு மூவேந்தர் ஆளுகையின் கீழ் இயற்கை வளம் பொங்கி இந்நாட்டிலேயே பயன்பட்ட காலை பிச்சையேற்றுண்டு வந்த வறியர்களும், மனையறம் ஓம்பிய மாதர்களும் சாதாரணமாகக் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்று தெரிகிறது. தற்கால யுவர்கள் கவி பாடுவோர்கள் கர்நாடகப் பேர்வழிகள் என்று இகழ்வது சாதாரண சம்பவம், இளமையிற்கல் என்ற ஔவையார் நீதிகளையும் அதுபோன்ற அறிவுரைகளையும் தற்காலப் பாடசாலைகளில் பாலபோதமாகக்கூட வைக்கப்பட வில்லையெனின் போதனாமுறையைப் பற்றிக் குறை கூறுவதேன்? இத்தகைய பாடசாலைகளில் படித்து ஒப்பேறும் நவயுவர்கள் கவிஞர்களைக் கண்டு இகழ்வதில் வியப்புண்டோ? இளமையில் எதை விதைத்தாலும் அது உரம்பெற்று விளங்கும். இளமையில் திருத்த முடியாத தொன்றில்லை இது பற்றியே,

"விளைத்தவளையே யரசர்மா முடியின் மேலாம்
விளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல்லாம் திரிந்து
தாழுமவர் தம்மடிக் கீழ்தான்."

எனவும் அறிஞர் கூறினார். நன்றாகப் பேசும் உறுப்புகள் நன்கமைந்துள்ள பாலர்கள் மட்டில் இளமையிற் கற்கவேண்டும் என்பதல்ல. உண்ணுக்கும் செவிப்புலனு மிழந்து ஊமைகளாகப் பிறக்கும் குழந்தைகளுக்கும் இளமையிற் கற்பிக்க முடிகின்ற தென்னும் அதிசயம் திருநெல்வேலி ஜில்லா பாளையங் கோட்டையில் ஓர் வெளியிடத்தில் மேல் நாட்டுக் கிறிஸ்தவ மதபோதகர்களால் ஏற்று நடத்தப்படும் கல்விச்சாலையில் சென்று காண நேர்ந்தவர்களுக்கு இளமை ஒன்றே எதனையும் செய்விக்கவல்ல தென்பது இனிது புலனாகும். பிறவிக் குருடர்களுக்கும் பிறவி ஊமைகளுக்கும் அது கல்விகற்பிக்கும் சாலை. குருடர்க்கான கல்விக் கூடங்கள் வேறு இடங்களிலும் உள. அதில் சிரமம் அதிகமில்லை, பிறவி யூமைகட்குப் பயிற்றுவதுதான் அதிற் சிறந்தது. ஊமை

களுக்குக் காதுகளும் செவிடென்பது யாவர்க்கும் தெரிந்ததே. பிறர் பேசும் ஒலியே இன்னதென உணரமுடியாத ஊமைகளுக்கு உணர்த்தும் முயற்சியையும் போதகிமாரின் பொறுமையையும் வார்த்தைகளால் அளவிட முடியாது. ஐந்துவயதுள்ள சிறுவர்களை மார்போடணைத்து அக்குழந்தைகளின் வலக்கரத்தை போதிக்கும் உபாத்தியாயினி தன் கழுத்தில் அழுத்திவைத்து 'ஓ' என்னும் எழுத்தைத் தான் பலகாலும் உச்சரித்து உச்சரிப்பினால் கழுத்தின் பிரதான நரம்புகள் எழும்புவதையும் இதழ்கள் குவிதலையும் அக்குழந்தை உணரும்படி பல நாள் செய்கின்றனர். பின்னர் அப்பிள்ளைகளும் அவ்வாறே முயற்சிக்கும்படி செய்கின்றனர். ஆறுமாத அநுபவத்தில் 'ஓ' என்னும் ஓங்காரத்தின் முதலெழுத்தைத் தாமாகவே சொல்லத் தொடங்குகின்றன. அடுத்த படியாக உகரத்தையும் பிறவெழுத்துக்களையும் முன் சொன்ன முறையாகவே பயில்கின்றனர். அவ்வகையான விசேஷ முயற்சியும் இளமை 5, 6, வயதுள்ள பிள்ளைகள் விஷயத்தில் கைகூடுவதேயல்லாது 7, 8, வயதுள்ள சிறுவர்களிடம் கூட போதிய பயன் தோன்றவில்லை என ஆங்கு போதிப்போர் வாயிலாக அறியலாம். இதை நோக்குங்கால் இளமையிற்கல் என்று மூதாட்டியார் உணர்த்திய தன் பெருமை நன்கு புலப்படும்.

இதன்பின் அறனை மறவேல் என்பது. அறன் என்பது தருமம் என்று பொருள்படும். தருமம் என்பது எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமையே என்பது வேதத்தின் துணிபு. இக்கருத்தை யுட்கொண்டே தருமம் என்பது நேர்மை அல்லது ஒழுங்கு என்பதை உணர்த்தி நிற்கின்றது. இதன் அடியாக அவரவர்களின் சொந்த தர்மம் என்பது சிறப்புவகையால் கொள்ளப்படுகின்றது. ஈண்டு மூதாட்டியார் அறனை மறவேல் என்றருளினர். அறனைச்செய் என்றாவது அறனை உரை என்றாவது கூறினாரில்லை. மறவேல் என்ற நுட்பத்தால் அறனை விளக்கிக் கூறிய விதி நூல்களை யுணர்ந்து அவைகளை எப்போதும் மறவாமல் இரு என்று கட்டளையிட்டார். அறம் உணர்ந்த பெரியாரும் ஒவ்வோர் காலங்களில் ஆசைவயப்பட்டு தவறு செய்கின்றனர். அது தவறு. உதாரணமாக, நகுஷன் என்னும் சந்திர வமிசத்தரசன் நூறு அசுவமேத யாகம் புரிந்து இந்திரபட்டத்தை அடைந்தான். அங்கு சென்றதும் இந்திராணி போகத்தைப் பெற மிக விரைந்தான். இந்திர பதவியை சென்றடையக் கூடிய அரசனுக்கு பிறன் மனைவி தாய் என்று கொள்ளத் தெரியாமல் இராது. இருந்தாலும் அவன் உணர்ந்திருந்த நீதி ஆசை மிகுதியினால் அவன் உள்ளத்தில் இடம் பெறவில்லை. அறனை அறவே மறந்தான். அம்மட்டோ தான்பெற்ற பதவிச் செருக்கினால் இருடியர் எழுவரை விரைக விரைக என்று அதட்டினான். இவன் செயல் கண்ட குறுமுனி வெகுண்டு மலைப்பாம்பாகக் கடவதெனச் சபித்தனர்.

உடனே தான் ஆரோகணித்திருந்த சிவிகையி லிருந்தே மலைப்பாம்பாகக் கீழே விழுந்தான். இதனை,

"சுகுடஞ்சேர் பரிமக நூறியற்றி வானரசு கன்னற் சுவைபோற் பெற்றான்
சகுடஞ்சேர் அவன் மனத்திற்சசி காமம் பிடித்தலைப்பத் தலைகீழாக [பாத
மகுடம்போய் வானகம்போய் வாழ்வும்போய் வையமும்போய் மலைப்பாம்
நகுடன்போய் பட்டகதை யறியாயோ சிறியாயோ நளினத் தாரோய்"

என்ற செய்யுளால் நன்குணரலாம். அறனை மறந்ததனால் வந்த கேடு இது



வெளியில் இதைவிட வேறு உதாரணம் வேண்டுமோ? சுயநலம் நாடி அறனைக் கைவிடுவாரும் உண்டு. அவ்வாறு கைவிடாமல் உறுதி குன்றாமல் தன் உயிர்க் கிறுதிவரும் என்பது உன்னியும் அஞ்சாது மூன்றடிமண் தானம் கொடுத்த மாபலி, அசுரன் எனினும் அழியாப் புகழ்பெற்றான். இவ்வுதாரணம் அறனை மறவாதவர்களின் பெருமை விளங்குகின்றது. மூதாட்டியார் மறவேல் என்றதனால் வாழ்க்கைத்துறையில் அறனை மறக்கும்படியான பல சந்தர்ப்பங்கள் குறுக்கிடும், அவ்வமையங்களில்தான் நீ மறவாமல் அறனை நினைந்து குற்றங்களைக் கடத்தல் வேண்டும் என்று குறிப்பால் உணர்த்தியதாகக் கொள்ளல் வேண்டும். அர்த்தம் காமம் மோட்சம் எனும் மூன்றனையும் மக்களுக்குத் தரவல்லது அறமே யாதலினால் தர்மார்த்த காமமோட்சம் என்பதாக சதுர்வித புருஷார்த்தங்களுக்கு முதலாக அறத்தை வைத்தனர் அறநூலோர். நூற் பரப்புக்களை யெல்லாம் கரையின்றிக் கற்றாலும் அந்நூற் பரப்புகளின் முடிந்த பொருள் அறம், பொருள், இன்பம், வீடு இவைகளை அடைதலேயாகும் என்றறிவுறுத்தினார். மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் அறம் செய்க என்றருளினர் ஆன்றோர். அதுபற்றியே, "அறத்தினூங் காக்கமு மில்லை அதனை, மறதலி னூங்கில்லை கேடு" அறத்தினை மறத்தல் கூடாது என்றருளினர்.

மறத்தல் மனத்தின் காரியம். மறத்தல் உண்டாயின் வாக்குக்கு இடமில்லை. அஃதின்றேல் செயலுமில்லை. செய்கைக்கும் சொல்லுக்கும் காரணம் மனமேயாதலின் அம்மனத்தில் மறவாதே என மூதாட்டியார் மொழிந்தனர். பொருளும் இன்பமும் இம்மைப் பயன் ஒன்றனையும் வீடு மறுமைப்பயன் ஒன்றனையும் கொடுக்கும் அறமோ இம்மை, மறுமை தொடர்ந்துவரும் எழுமைப் பயன்களையும் அளிக்கும். ஆகவே அறமே ஆக்கம். அதுவே இம்மை மறுமை வாழ்வுகளின் உயிர்நிலை. அதைக் குறித்தே 'அறத்தினூங் காக்கமுமில்லை அதனை மறத்தலினூங் கில்லைகே டென்றனர். துன்பம்வரின் சிலர் ஐயோ இக்கலியில் தர்மம் செய்தல் கூடாது; இது கற்பத்தின் தோஷம். மறம் செய்' தலே நலம் தரும் என்று புகல்வதுண்டு

உதாரணமாக இரு வாலிபர்களைப் பற்றிய கதை ஒன்றுண்டு. அதாவது சன்மார்க்கத்தில் நம்பிக்கை கொண்டு நல்லாற்றில் ஒழுகுவோன் ஒருவன். மற்றொருவன் துன்மார்க்கமே செய்பவன். இருவரும் ஓர்நாள் வழி நடக்கையில் உத்தமன் காலில் ஒரு முள் தைத்தது. துன்மார்க்கன் காலடியில் ஒரு வெள்ளிப்பணம் அகப்பட்டது. அதுகண்ட பின்னவன் முன்னவனை நோக்கி நகைத்து நீ கைக்கொண்ட சன்மார்க்கத்தின் பயனைக் கண்டுகொள். நான் அதை எதிர்த்து மதியாமல் நடப்பதற்குக் கிடைத்த வெகுமதியையும் பார் என்று புகன்றான். உத்தமன் மனம் ஊசலாடியது. இவன் சொல்கிறபடி நான் வருந்தவும் இவன் மகிழவும் நேர்ந்த காரணமென்ன? இதைத் தக்கோரிடம் சென்று கேட்டறிதல் வேண்டுமென விரைந்து சென்று ஒரு பெரியாரை அடுத்துத் தங்களுக்கு நேர்ந்தவைகளைக் கூறிக் காரணம் கேட்டனர்.

அவர் நிதானித்து சன்மார்க்கனை நோக்கி உனது நல்ல நடைக்காக எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் ஒரு கிருஷ்ண சர்ப்பம் தீண்டவேண்டிய விதியை மாற்றி அற்பமான ஓர் சிறு முள்ளாக்கியது. துன்மார்க்கனுக்கு அவனது பூர்வ புண்ணியத்தின்படி கிடைக்க வேண்டியிருந்த ஒரு புதையல் மறைந்து ஒரு வெள்ளிப்பணமாக மாறியது. ஆதலினால் அறத்தாறொழுகுவதே கடமையாகுமன்றி மறத்தாறொழுகுவது நலந்தராது. அறத்தை மறத்

தலே குற்றமாகுமெனின் அறத்திற்கு மாறுபட்ட செய்கைகளையும் செய்வது எங்ஙனம் நலந்தரும் என உணர்த்தினர். இது கேட்ட உத்தமன் பின்னும் தனது கடமையில் ஊக்கங் கொண்டான். தீயவனும் திருந்தி நல்வழி பயிலத் தொடங்கினன் என்பதே கதைச்சுருக்கம்.

இதனால் அறனை மறக்கவும் கூடாதென்பது மூதாட்டியாரின் கட்டளை. இனி "அனந்தல் ஆடேல்" என்பது, இது நீ நித்திரையை அதிகமாகச் செய்யாதே என்றுரைத்ததாகும்.

நித்திரை பங்கமும் கூடாது. பங்கப்பட்டாலும் மனத்தெளி வின்மை, மெலிவு, ஊக்கக்குறைவு இவைகள் ஏற்படும். அதிகம் தூங்கும் பழக்கத்தை ஒருவன் கைக்கொண்டாலும் அவன் நிரந்தமான சோம்பேறி யாவான். மூதேவி அவனிடம் குடியேறிக் கணமும் பிரியாமல் இருப்பாள். அவன் தோற்றத்தால் நரம்புஎன்பு குருதிதோல்போர்த்த வடிவினனே ஆயினும் புல்லாடவன் என்று வயல்களில் காவலுக்காக நாட்டப்படும் வைக்கோல் மனிதனைவிட எவ்வளவோ தாழ்வானவனே யாவன். அப்புல்லாடவன் நிறுத்தியபடி நிமிர்ந்து நிற்பான். இவ்வித நித்திரை செய்வோன் சவம்போலக் கீழே வீழ்ந்துண்ணுறங்குவதேயன்றி கணப்போதும் நிற்கமாட்டான். புல்லாடவன் நிற்பதால் பட்சிகள் மிருகங்களுக்கு ஒரு அச்சம் ஏற்படும். இவன் படுத்திருப்பதால் ஒருவித நன்மையும் இல்லை. தவிர அதிகத்தூக்கம் உள்ளவனுக்கு புத்தி விளக்கமே அணைந்து விடுகிறது. ஆயுளும் அற்பமாகு மென்பது அறிஞர் துணிவு. இது பற்றியே விவேகக் களஞ்சியமாகிய வேதநாயகம் பிள்ளையவர்கள்,

> "வானுலாம் அருணன்என்னும் மக்கள்ஆயுளின் கணக்கன்
> தான்எழு முன்னெழாரைச் சாஸ்திரக் காத்தாற் றட்டும்
> என்என எழார்வாழ்நாளை எண்குறைத் தெழுதிக் கொள்வான்
> ஆனது கண்டு காலன் அவரிடம் அணுகுவானே"

என்று தனது நீதிநூலிற் கூறியிருக்கின்றார்.

இக்கவியினால் அருணோதயத்திற்கு முன்னதாகவே துயிலைவிட்டு எழுந்திருக்க வேண்டும். அப்படி எழுந்திராதவர்களை தனது செங்கதிர்களாகிற ஆயிரங்கைகளாலும் எழுந்திருக்கும்படி தட்டுவதுபோல் கிரணங்களைப் பரப்புகின்றானும். அதன் பிறகாவது துணுக்குற்று எழாவிட்டால் அவர்கள் ஆயுளைக் குறைத்து எழுதிக் கொள்ளுவானும். நமது வாழ்நாளைக் கணக்கிடும் கணக்கன் தினகரனே யாதலால் அவனால் எழுதப்பட்ட கணிதப் புள்ளியைக் கொண்டே காலன் வாழ்நாளைக் கவர்ந்து கொள்ள வருகின்றான் என்று விளங்குகிறது.

இதனால் விடிந்து தூங்குவது ஆயுள் விருத்திக்கே ஏற்றதல்ல வென்பது தெளிவு. சிறுவர்களை அதிகாலையில் விழிக்கச் செய்ய வேண்டியது பெற்றோர்களின் இன்றியமையாக் கடமையாகும். பிள்ளைகளின் தூக்கத்தைக் கலைக்க பல பெற்றோர் விரும்புவதில்லை. அதைவிடத் தீங்கு வேறு வேண்டாம். தமது மக்கள் வாழ்வைக்காண விரும்பும் பெற்றோர் மக்களை விடிந்தும் துயிலவிடக் கூடாது. இளமையில் இப்பழக்கம் ஏற்பட்டால் தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது போல அது தொடர்ந்துவரும்.

## நெப்போலியன் தினசரி வாழ்க்கையில் ஒரு பகுதி.

(தே. வீராகவ ஐயங்கார், தமிழ்ப்பண்டிதர்.)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பிரான்சு தேசத்திற்குச் சர்வாதிகாரியா யிருந்து, மற்றைய ஐரோப்பிய நாடுகளைத் தனது வல்லமையினால் நடுங்கச் செய்த மகா வீரனாகிய நெப்போலியனை மக்களிற் பெரும்பாலோர் ஓர் முரட்டுப் போர் வீரனாக மட்டும் அறிவார்களே யன்றி அவனது ஏனைய குண நலங்களைச் செவ்விதி னறியா ராகையால், அவனது தினசரி வாழ்க்கையினின்றும் சில அரிய குறிப்புகளைத் திரட்டிக் கீழே வெளியிடுகின்றனம்.

1840-ம் ஆண்டு டிசம்பர்மீ 2-ம் தேதியில் நெப்போலியன் பிரான்சு தேசத்துச் சர்வாதிகாரியாக முடி சூட்டப் பட்டான். அது முதல் பத்தாண்டுகள், எதிரியற்றுப் பிரான்சு தேசத்தை அவன் ஆண்டு வந்தான். நெப்போலியன் ஒரு பெரும் போர் வீரனாக விருந்ததுடன், சட்ட நிபுணனாகவும், ஒரு சிறந்த அறிவாளியாகவு மிருந்து வந்தான். ஒருவரது யோசனையையும் கேட்காது தானே தனது தேசத்தை எவ்வெவ் வழிகளிற் சீர் பெறச் செய்ய வேண்டுமோ அவ்வவ் வழிகளிற் சீர் செய்து வந்தான். எவ்வித கடின வேலையையும் அவன் அலக்ஷியமாக மேற் கொள்வான். அவன் பிரான்சு தேசத்தின் சர்வாதிகாரியா யிருந்த காலத்தில் பெரும் வறியனது வேண்டுகோளைக் கூடக் கேட்டு அதற்குத் தக்க பரிகாரம் செய்வான். மிகச் சிறு விஷயங்களும் அவனது பார்வையி னின்றும் தப்பியது கிடையாது.

நெப்போலியன் ஐந்தடி மூன்றங்குலம் உயரம் உள்ளவன். குதிரை மீது அவன் ஏறிச் செல்லும் தோற்றம் பார்ப்போர்களது மனதில் ஓர் வித அச்சத்தை உண்டு பண்ணும். சற்றுப் பெருத்த மண்டை அவனுக் கிருந்ததேனும், அது அவனது பெருந் தன்மையை நன்கு விளக்கிற்று. உறுதியையும், பார்ப்போர்களுக்கு ஒரு வித பயத்தையும் ஊட்ட வல்லனவாக, அவனது அழகிய சாம்பல் நிறமான கண்கள் அமைந்திருந்தன. போர் மீது செல்லுங் காலத்தில் தான் பலவித ஆடைகளாற் றன்னை அவன் அலங்கரித்துக் கொள்வானேயன்றி ஏனைய காலங்களிற் சாதாரண உடைகளையே நெப்போலியன் அணிந்திருப்பான்.

சமாதான காலங்களில் தினந்தோறும் நெப்போலியனது அந்தரங்கக் காரியதரிசி, காலை ஆறு மணிக்கு அவனது படுக்கை யறைக்குட் சென்று அவனை எழுப்புவது வழக்கம். உடனே நெப்போலியன், "அறையின் ஜன்னல்களைத் திற; நான் கடவுளின் காற்றைக் கொஞ்சம் சுவாசிக்கின்றேன்."

என்று சொல்லிக் கொண்டே படுக்கையினின்றும் எழுந்திருப்பான். படுக்கையினின்றும் எழுந்த வுடனே, அந்தரங்க காரியதரிசி நெப்போலியனுக்கு வந்துள்ள தபாற் கடிதங்களை அவனிடம் கொடுப்பான். அவைகளை யெல்லாம் நெப்போலியன் வெகு விரைவிற் படித்துப் பார்த்து விட்டு, அவைகளில் முக்கியமானவற்றைப் பின்னால் யோசித்தற் பொருட்டு ஒரு புறத்தில் வைப்பான். கடிதங்களைப் பார்வை யிட்டவுடன் தினசரிப் பத்திரிகைகளைப் படிப்பான். அவைகளைப் படித்த பிறகு தன்னைக் காண்பதற்காக வந்துள்ளார்கள் யாரெனக் கேட்டறிந்து கொள்வான்.

வாரத்திற்கு இரு முறைகள் நெப்போலியனது உடல் நிலையைப் பரிசோதிப்பதற்கு வைத்தியர் வருவார். சாதாரணமாக வைத்தியர்களிடமும் அவர்களது மருந்துகளிடமும் நெப்போலியனுக்கு நம்பிக்கை இல்லை. வைத்தியர் தம்மிடம் வந்த வுடனே "என்ன! போலி வைத்தியரே! இன்று எத்தனை பேரைக் கொன்றீர்?" என்று அவரை வேடிக்கையாகக் கேட்டுக் கொண்டே அவரது காதுகளைப் பிடித் திழுப்பான். அவனுக்கு யார் மீது விருப்பம் உண்டோ அவர்களது காதுகளை யெல்லாம் பிடித் திழுப்பது நெப்போலியனது வழக்கம். வைத்தியருடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே சமையற்காரன் தேயிலைப் பானமோ அல்லது ஆரஞ்சு பழத்தின் ரசத்தையோ கொண்டு வந்து வைப்பான். நெப்போலியன் அதைப் பருகுவான்.

கொஞ்ச நேரமான பிறகு ஸ்நானம் செய்யச் செல்வான். குளிப்பதென்றால் நெப்போலியனுக்கு மிகுந்த பிரியம். சிற்சில சமயங்களில் வெந்நீர்க் குழாயினடியில் ஒரு மணி நேரத்திற்கு மேலும் உட்கார்ந்து கொண்டு குளிப்பான். ஸ்நானம் செய்து கொண்ட பிறகே க்ஷவரம் செய்து கொள்வது அவனது வழக்கம். நெப்போலியன் வேறொருவரது உதவியைக் கொண்டு க்ஷவரஞ் செய்து கொள்வதில்லை. ஏனெனில் பிறர் க்ஷவரஞ் செய்வதாயிருப்பின், அவர் என்ன ஆபத்தைத் தனக்கு விளைவித்து விடுவாரோ என்ற சந்தேகம் அவனிடம் இருந்து வந்தது. அதனால் தான், இக் காலத்து நாகரிகம் வாய்ந்த கனவான்களைப் போன்று சுமார் நூறாண்டுகட்கு முன்னரே, நெப்போலியன் தனக்குத் தானே க்ஷவரனும் இருந்து வந்தான். இவன் க்ஷவரஞ் செய்து கொள்ளும் பொழுது ஒருவன் வெந்நீரையும் சவுக்காரத்தையும் ஏந்தி நிற்பான். மற்றொருவன் கண்ணாடியைக் காட்டிக் கொண்டே நிற்பான். க்ஷவரஞ் செய்து கொண்ட பிறகு, பன்முறைகள் தன் தலையைத் தண்ணீரில் அமிழ்த்துச் சுத்தஞ் செய்து கொள்வான். அதன் பிறகு, தனது சரீரத்தை முரட்டுத் தூரிகை (Brush) யினால் தேய்த்துக் கொண்டு வெண் பட்டினால் செய்த எளிய ஆடையை அணிந்து கொள்வான். இதற்குள் மணி ஒன்பதாகி விடும்.

மணி ஒன்பதானவுடன், நெப்போலியன் தனது சொந்த அறையினின்றும் வெளியே வந்து தன்னைக் காண விரும்புவோர்களுடன் கலந்து கொண்டு அவர்களது வேலைகளை வெகு விரைவில் முடித் தனுப்புவான். அவனைக் காண வருகின்றவர்கள் காலந் தவறாது வந்தாற்றான் நெப்போலியனைக் கண்டு பேசலாம். இன்றேல் வறிதே திரும்பிச் செல்ல வேண்டியது தான்.

ஒன்பதரை மணிக் கெல்லாம் காலை போஜனத்திற்கு நெப்போலியன் செல்வான். சிற்சில சமயங்களில், வேலையின் மிகுதியால் குறித்த வேளை



யில் போஜனம் கொள்ளாது இருக்கும்படி ஏற்பட்டு விடும். நெப்போலியனுக்கு வேலை தான் பிரதானமே தவிர ஆகாரம் பிரதான மில்லை. காலை போஜனத்தை ஏழு அல்லது எட்டு நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்வான். சாப்பிடும் பொழுது மிகவும் ஆபாசமாகச் சாப்பிடுவான். தேத் தண்ணீர்க் கோப்பையிலே தனது விரல்களை விட்டு விடுவான். தன் ஆடைகள் மீது ஆகாரத்தை யெல்லாம் கொட்டிக் கொள்வது இவனிடம் காணப்பட்ட சாதாரண வழக்க மாகும். இவனுடன் வேறொருவரும் சாப்பிடுவது கிடையாது.

காலைச் சாப்பாடு முடிந்ததும், தன் மனைவி ஜோஸப்பைனிருக்கு மிடம் சென்று அவளிடம் சிறிது நேரம் பேசுவான். அவளுடன் பேசி வருங் காலையில், அவன் அவள் மீது சீறி விழுவது முண்டு. அவள் உயர்ந்த குணங்களுடன் எழில் நலமும் வாய்க்கப் பெற்றவளாயினும், ஒரு தீக் குணத்திற்கு மட்டும் அடிமையாக இருந்து வந்தாள். அத் தீக் குணத்தை நெப்போலியனால் தாங்க முடிய வில்லை. அது தான் அவளிடம் திருத்த முடியாதபடி குடி கொண்டிருந்த வீண் செலவு செய்யும் குணம்.

மனைவியுடன் பேசி முடிந்ததும் தன் படிப்பறைக்குச் செல்வான். அங்குள்ள புத்தகங்களைப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது அவனது அந்தரங்கக் காரியதரிசி தபாலுக்குச் செல்ல வேண்டிய கடிதங்களில் இவனது கையெழுத்தை வாங்க வருவான். நெப்போலியனது கையெழுத்து மிகவும் ஆபாசமாய் இருக்கும். எழுதும் காலையில் பல எழுத்துக்களை எழுதாது விட்டு விடுவான். அவன் எழுதியவற்றைத் திருப்பிப் படிப்பதற்கு அவனுக்கே சிற்சில சமயங்களில் முடியாதாம். அதற்குக் காரணம் அவனது பேனாவைக் காட்டிலும் அவனது எண்ணங்கள் முன்னால் வேகமாக ஓடியதேயாம். சொந்தக் கடிதங்கள் தவிர மற்றைக் கடிதங்களை அவன் சொல்ல, அவனது அந்தரங்கக் காரியதரிசி எழுதி வருவான். கடிதங்களுக்கு விஷயங்களைச் சொல்லிக் கொண்டு வருங்கால் அறையைச் சுற்றிச் சுற்றிப் பன்முறை வருவான். சும்மா விருப்ப தென்பது நெப்போலியனின் இயற்கைக்கு விரோதமாகும்.

நெப்போலியனால் எழுதப்படும் கடிதங்களும், சொல்லப் படும் கடிதங்களும் பலதிறப்பட்டவைகளாகும். அவற்றுள் சில தளகர்த்தர்களுக்கும், சில கல்வி இலாகா தலைவர்களுக்கும், பின்னும் சில பொது ஜனங்களுக்குமாம். பல விஷயங்களைப் பற்றியும் நெப்போலியன் அடிக்கடி சிந்தை செய்து வருவான்.

கடிதங்களைச் சொல்லியான பிறகு அரச சபைக்குச் செல்வான். இங்குத்தான் தேசத்தைப் பற்றிய பல அரிய விஷயங்கள் பேசப் படும். தினமும் இரண்டு மணி நேரங்களுக்குக் குறையாது நெப்போலியன் அவையை நடத்துவான். சில காலங்களில் ஏழு அல்லது எட்டு மணி நேரங்கள் கூட நடத்துவான். இன்னும் சில காலங்களில் இராப் போஜனத்தின் பொருட்டு அடிக்கப் படும் மணி அடிக்கப் பட்டிருந்தாலும், நெப்போலியன் அதைக் கருதாது தன் காரியத்தின் மீதே கருத்தா யிருப்பான். உழைப்பதற்கே அரசன் இருப்பதாக அவன் எண்ணி வந்தான். அதனால் தான் ஓர் சமயத்தில் அவன், "நான் எனது கண்களின் வல்லமையையும் அவயவங்களின் வல்லமையையும் அறிந்து கொண்டேன். ஆனால் வேலை செய்வதற்கு வேண்

207615

டிய திறமை என்னிடம் இவ்வளவு தானிருக்கின்றது என்று என்னால் அறியக் கூட வில்லை" என்றான். தான் எவ்வாறு ஓய்வில்லாது உழைத்து வந்தானோ அவ்வாறே தனது பணியாட்களும், தளகர்த்தர்களும், சிப்பாய்களும் உழைக்கவேண்டு மென்பது அவனது எண்ணம். ஒரு சமயத்தில் ஒரு போர் வீரன் அவனது வேலையை முடிக்காது நெப்போலியன் முன் வந்து "இன்று பகல் முழுதும் நான் ஓயாது வேலை செய்தும்.........." என்று மேலே சொல்லப் போகும் சமயத்தில், நெப்போலியன் "பகல் முழுதும் வேலை செய்து முடிய வில்லை என்றால் இரவு எங்குப் போயிற்று?" என்றான். பல காலங்களில் நெப்போலியனும் அவனது காரிய தரிசிகளும் ஓயாது மூன்று பகல் இரவுகள் தொடர்ச்சியாக வேலை செய்து வந்துள்ளார்கள். அவசியமாக கவனிப்பதற்கு ஒரு வேலையும் இல்லா விட்டால், நெப்போலியன் வேட்டை மேற் செல்வான். எப்பொழுதும் தலை தெறிக்கும் வேகத்தில் குதிரைமேல் வேட்டையாடச் செல்வானே யன்றி, மெல்ல வேட்டையாடுவ தென்பதே நெப்போலியனுக்குத் தெரியாது.

ஒரு வேலையும் செய்யாது சும்மா உட்கார்ந் திருப்ப தென்பது நெப்போலியனது இயற்கைக்கு முற்றும் விரோதமானது. அரச அவையி லுட்கார்ந்திருக்குங் காலையில் அடிக்கடி மூக்குத்தூள் போட்டுக் கொண்டிருப்பான். இல்லாவிடில் கத்தியால் மேஜையை யாவது நாற்காலியை யாவது வெட்டிக்கொண்டே யிருப்பான். அதுவுமில்லாவிடில் பேனாவால் தன் ஆடைகள்மீது அடிக்கடி யிழுத்துக்கொண்டே யிருப்பான். இதனாற்றான் நெப்போலியனது உடுப்பு அடிக்கடி மாற்ற வேண்டியதா யிருந்தது.

வழக்கமாக நெப்போலியன் மாலை ஆறுமணிக்கே இராப் போஜனத்திற்குச் செல்வான். வேலை மிகுதியாய் இருக்குங் காலங்களில் இந்த நேரம் தவறி விடுவது முண்டு. நெப்போலியனுக்குக் கோழியின் மீது அதிகப் பிரிய முண்டு. எப்பொழுது நெப்போலியன் சாப்பிட வந்தாலும் அப்பொழுது ஆகாரம் சூடாயிருக்க வேண்டும். இவனால் இவனது சமையற்காரர்களுக்குப் பெருந் தொல்லையே ஏற்படும். ஒரு நாள் நெப்போலியன் அரச சபையினின்றும் இராப் போஜனத்திற்கு வரும் பொழுது மணி பன்னிரண்டேக்குச் சமீபமாய் விட்டது. அன்று இரவு நெப்போலியன் வருங்காலையில் சூடாக வைத்தற் பொருட்டு இருபத்தைந்து கோழிகள் கொன்று சுடப் பட்டனவாம்.

நெப்போலியனுக்கு இரவு போஜனத்தை உட்கொள்வதற்கு குறைந்தது பதினைந்து நிமிடங்கட்கு மேலாவதில்லை. அச் சிறு காலத்தையும் அவன் வீணாக்காது பிறரைக் கொண்டு தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கச் சொல்லிக் கேட்பான். அது காலையில் அரண்மனையிலுள்ள பெண்கள் அவனுடன் பேச வருவதுண்டு. அவர்களுள் ஒருத்தியைக் கண்டு, "உனது உடைகள் இன்று நல்லனவாக இல்லை" யென்பான். மற்றொருத்தியைப் பார்த்து "நீ மிகவும் வயது சென்றவளாகக் காணப்படுகிறாய்" என்பான். தன்னிடம் வரும் ஸ்திரீகள் புதியவர்களா யிருப்பின், அவர்களை அநேகமாக "உங்களுக் கெத்தனை குழந்தைக ளிருக்கின்றன?" "உங்களுக்கு என்ன வயது?" என்ற இரு கேள்விகளையே கேட்பான். இரவு பன்னிரண்டு மணியான பிறகே படுக்கைக்குச் செல்வான். அங்கும்—படுக்கை யறையிலும்—அவன் மனைவி அவன் நன்றாகத் தூங்கும் பொருட்டு ஏதேனும் அவனுக்காகப் படிப்பான்.



பெரும்பாலும் நெப்போலியன் மூன்று மணி நேரங்கட்கு மேல் தூங்குவது கிடையாது. தூங்கி எழுந்த வுடனே தன் படிப்பறைக்குட் சென்று ஏதேனும் எழுதுவான். இன்றேல் தனது அந்தரங்க காரியதரிசியை அழைத்து வரச் சொல்லி விடுவான். நெப்போலியனது படுக்கை யறைக்குள் அவனது மனைவியும்—அந்தரங்கக் காரியதரிசியுமே உத்தரவின்றிச் செல்லலாம்—தன் அந்தரங்கக் காரியதரிசிக்கு நெப்போலியன் ஓர் உத்தர விட்டிருந்தான். அதாவது, "நல்ல விஷயங்களைச் சொல்வதற்காக என்னைத் தூக்கத்தினின்றும் எழுப்பாதே; ஏனெனில் அவைகளை நான் காலந் தாமதித்தும் அறிந்து கொள்ளலாம். கெட்ட விஷயங்கள் ஏதேனு மிருப்பின் என்னை உடனே எழுப்புவாயாக. ஏனெனில் அங்குத் தாமதம் செய்தல் பெருந் தவறாகும்." என்பதாம். சில வேளைகளில் அரை மணி, அல்லது ஒரு மணி நேரம் நித்திரை செய்தாலே அவன் திருப்தி யடைந்து விடுவான். மேற் சொன்னவைகள் தான் நெப்போலியனது தினசரி வாழ்க்கையில் சாதாரண நாட்களில் நடந்து வந்த விஷயங்கள் பலர் அவனைப் பற்றிப் பல விதமாக சொல்லலாம். சிலர் அவனைப் பேராசைப் பேயென்றும், வேறு சிலர் கர்வியென்றும், மற்றும் சிலர் சண்டை மேலே கருத்துள்ளவனென்றும் சொல்வார்கள். ஆனால் அவனது கொடிய விரோதி கூட அவன் சோம்பேறியா யிருந்தான் என்று சொல்லத் துணியான்.

இடை விடாது உழைத்து வந்ததினால் சொந்தத்திற்கு யாது லாபத்தை அவன் அடைந்தான். அவன் அநுபவித்து வந்த இன்பங்கள் மிக மிகச் சிலவே. அவைகளும் மிகச் சாதாரணமானவைகளே. பிரான்சு தேசத்தின் நன்மைகள் மட்டும் அவனது மனதை விட்டு என்றும் நீங்கில. மற்றைய நாடுகளிலும் அது சிறந்து விளங்க வேண்டு மென்பதே அவனது ஒரு விருப்பம். இத்தகைய உயர் குணங்களையுடைய ஒருவனிடம் காணப் பட்ட இரண்டொரு குற்றங்களை நாம் மன்னித்து விடலாமல்லவா?

**ஏஜண்டுகள் தேவை.**

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாதம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்

மானேஜர்.

# மக்கட்பேற்றின் மாண்பு.

(L. G. வேணுகோபால நாயுடு, தமிழாசிரியர், சேலம்.)

பௌவ முடுத்த இப் பயங்கெழு மாநிலத்தில் மானிடராய்ப் பிறந்தார் எய்தும் பேறுகள், புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் எனப் பதினாறு ஆகும் என்று நூல்கள் கூறும். இப்பதினாறு பேறுகளுள்,

"பெறு மவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"

என்று ஆசிரியர் வள்ளுவர் கூறியாங்கே மக்கட்பேறே மாண்புடைப் பேறும்.

பால்மணங் கமழும் வாயினையுடைய மக்களில்லாத வாழ்க்கை, கண்ணில்லாத உடம்பும், சந்திரனில்லாத இரவும், நல்லமைச்சனில்லாத அரசும், அருளில்லாத நெஞ்சம், புலவரில்லாத அவைக்களமும் பொலிவிழந்தமை போல சிறப்பற்றதாகும். சேறுபடிந்த தளிரையொத்த சிறிய அடிகளோடும், பாலன்னம் படிந்த செந்தாமரை மலரை யொத்த கைகளோடும் பாலொடு தேன் கலந்தன்ன உமிழ் நீர் ஒழுகின மார்போடும் ஓடிவந்து மக்கள் ஏறுகிற உடலே இன்பமெய்திய உடலென்று உரைப்பர் சான்றோர். மாறனலங்காரம் என்னும் அணி இலக்கண நூலாசிரியரும்,

மைந்தர் மூரல்வாய் முத்தமுண்ணாத வாய் வாயோ
மைந்தர் சொற் கேளாச் செவியுமோர் செவிகொலோ மழலை
மைந்தர் சீறடிச் சுவடுழா மார்புமோர் மார்போ
மைந்தர் காட்சிகண் டின்புறாக் கண்கள் கண் மலரோ

எனச் சாற்றுகின்றனர். சிவப்பிரகாச சுவாமிகள்,

அரிகொள் பொன்புனைக் கிண்கிணி தண்டையோ டணிந்த
தருண மென்றளிர்ச் சீறடித்தளர் நடைச்சிறுவர்
மருவறாத செவ்வாம்பல் வாய் மழலை யாரமுதம்
பருகிலாச் செவி பாவையின் செவியெனப் படுமால்

என்று செப்பியவண்ணம், சிறுவரது பால்மணம் அறாத வாயிலுண்டாகின்ற அமுதத்தையொத்த மழலைச் சொற்களைக் கேளாத செவி சித்திரப் பாவையின் செவியென்று சொல்லப்படும். உள்ளே புகுந்து இனிய சோற்றைத் துழாவுகின்ற மலர்போன்ற கைகளையும், மலர் மணங்கமழும் செவ்வாயையு



முடைய குழந்தைகளைப் பெறாதார், செல்வமுடையவரா யிருப்பினும், புகழுடையவரா யிருப்பினும், இன்னும் என்னுடையரா யிருப்பினும் அவை யாவும் உடையவராகார் எனப் புகழேந்தியும் புகல்கின்றனர்.

நாம் உணவுகொள்ளும்பொழுது, நம்மக்கள் குறுகக் குறுக நடந்து வந்து சிறிய கைகளை நீட்டிக் கலத்திலுள்ள சோற்றைத் தரையி லிடுகின்றனர்; பிசைந்து தோண்டுகின்றனர்; வாயால் கவ்வி எச்சில் செய்கின்றனர்; கைகளினால் கிண்டுகின்றனர். இவைமட்டுமோ? நெய் கலந்த அன்னத்தை நம் உடல்மீது வாரி வீசுகின்றனர். மக்களை யன்றிப் பிறர் இவ்வனம் செய்யின் நாம் வாளா இருப்போமா? உடனே நமக்குச் சினம் மூள நாம் அவரைப் புடைத்துவிடுவோ மன்றோ? ஆயின், அருமருந்தன்ன நம்மகார் இச்செயல்களால் நம்மறிவை மயக்கி விடுகின்றனர். அப்பொழுது நாம் பேரின்பக் கடலில் திளைக்கின்றோமன்றோ? இத்திறத்த இன்பம் ஈயவல்ல இளங் குழவிகளைப் பெற்றவரே, இவ்வுலகில் தாம் பிறந்தமையாற் பெறவேண்டிய இன்றியமையாப் பொருளை எய்தியவராவர். படைப்புப் பல படைத்துப் பலரோடுண்ணும் உடைப் பெருஞ் செல்வராயினும், மக்கட்செல்வ மின்றேல் இறையும் உண்மை இன்பம் எய்தியவ ராகார்" என்பதைப் பாண்டிய மன்னன் அறிவுடை நம்பி, தன் வாழ்க்கையில் கண்டுணர்ந்து,

"படைப்புப்பல படைத்துப் பலரோடுண்ணும்
உடைப் பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களையில் லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழுநாளே"

என்ற சிறந்த புறப்பாட்டை அருளிச்செய்திருக்கின்றான்.

வள்ளுவரும்,

அமிழ்தினு மாற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

என்பர்.

நம் உடற்கு இன்பம் பயக்கும் பொருள்கள் யாவையென வினவின், கொழு நீரிலஞ்சி சூழ் குளிர்பூங்காவிலே, தளவேயும் மல்லிகைப்பூம் பந்தர்க்கீழ் சந்திரகாந்த மேடையிலே, அரமிய அணையிலே, மாசில் வீணை இசையிலே, தென்றல் வீசும் இளவேனிலொடு ஏற்ற நிலாக்காலத்திலே, கந்தமிகு சந்தமாதிய கலவையணிந்து, களவே கலந்த வெண்ணகைச் செவ்வாய்க் கரிய பானலார் கண்ணுடைக் கொங்கை தளரா மங்கையரை மருவுதலே மாண்புடை இன்பமாம் என்றும், உயரிய உண்டியை உண்ணுதலே உண்மை இன்பமாம் என்றும், மதுவுண்டு மயங்குதலே மற்றொரு இன்பமாம் என்றும் பலவாறு பகர்வர். இவை யாவும் சீரிய இன்பமாமோ? அன்றேல், பிறிது எதுவாகும்? நம்மக்கள் தத்தித் தத்தி ஓடிவந்து நம் உடல்மேல் விழுந்து

குலாவி விளையாடுங்கால், நம் உடற்கு இன்பம் உண்டாக வில்லையா? இவ்வின்பம் அன்றி, உடற்கு உயரிய இன்பம் பிற பயக்கின்றனவென்று பகர்தல் புல்லறிவேயாம். இனி, நம் செவிக்கு இன்பம் பயப்பன யாவை? அவை, யாழ், குழல் முதலிய இன்னியங்களேயாகும் என்பர். இவ்வியங்களின் இசையை மாந்தி, மக்களேயன்றி மாக்களும் மனங்குழைந்து மரமென நிற்பது உண்மையே. "காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல், யாழ்வரைத் தங்கி யாங்கு" எனக் கலித்தொகையில் சொல்லப்படுவதுபோல், மதங்கொண்ட யானையொன்று அங்குசத்தின் வலிமைக்கு அடங்காது, யாழோசையைச் செவிமடுத்த அளவிலே மதம் அடங்கி அசைவற்று நிற்கிறது. ஆதலினன்றோ, யாழோசை இனியது, குழலோசை இனிது என்று இயம்புகின்றனர். இவற்றினும் செவிக்கு இன்பம் பயக்கவல்லதாய் உள ஓசை ஒன்றை இவர் செவி மடுத்து நுகர்ந்திலர்போலும், அவ்வோசைதான் யாதோவெனின், தேனினும் அமுதினும் குழைத்து, யாழ்க்கும் இன்குழற்கு மின்பம் அளித்தன இவையாமென்னக் கேட்கும், நம்மகாரது மழலைச் சொற்களே யாகுமென்று கூறுவதில் குற்றம் யாதுளது? இப் பொருளையே,

> மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
> சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

என்றும்,

> குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்
> மழலைச் சொற் கேளாதவர்

என்றும் தமிழ் மறை சாற்றும். சுருங்கக் கூறின், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பங்களும், வேறு வேறு காலத்தில் வேறு வேறு பொருள்களிடத்துத்தான் நுகரப்படும். ஆயின், இவ்வைம்புல இன்பங்களையும் ஒரே காலத்தில் மழலை மொழி மக்கள்பால் நாம் ஆரத் துய்க்கலாம்.

இன்னும், மக்களிடத்து இறும்பூது பயப்பனவாய ஆற்றல்கள் பல அமைந்துள. எவ்வாற்றானும் நீப்பரும் நம் அவலம், கவலை, கையாறு, அழுங்கல் முதலியன மக்களைக் காண்டலும் தணிகின்றன என்பதை நாம் நம் வாழ்க்கையில் கண்டறிந்திருக்கின்றோம். நம் புற்றடங் கரவிற் செற்றம் யாவும் மகார் மதிமுகம் நோக்கவே ஆறுகின்றதென்பதும் கண்கூடே. நாம் வெளியே சென்று இல்லம் மீண்ட காலை, மக்கள் வாயிலின்கண் நின்று புன்னகை புரிந்தும், அப்பா! வென்று அழைத்தும், உடையினை இழுத்தும், குடையினைப் பிடுங்கியும் விளையாடுங்கால், நாம் எய்தும் இன்பத்துக்கு எவ்வின்பத்தை இணையாகக் கூற இயலும்? சோற்றைச் சோச்சி சோச்சியென்றும், பாலைப் பாச்சி பாச்சியென்றும் பகர்ந்து தத்தித்தத்தி நம்மக்கள் ஓடுவதைக் காணும் காட்சியே கண் பெற்ற பயனாகும். இங்ஙனம் பல சிறந்த இன்பங்களை மக்கள்பால் நாம் துய்ப்பதினால்தான், எப்பற்றை மறப்பினும், துறப்பினும். இல்வாழ்வாரேயன்றி தாவரும் இருவினை செற்றுத் தன்னரும் மூவகைப் பகையரண் முருக்கி வெம்பவக்கடல் தொலையக் கடந்த ஞானியரும் மக்கள் மேல் காதல் கடந்தாரில்லை. ஒரு அகத்தின்கண் எத்துணை மாந்தரிருப்பினும் ஒரு குழந்தை இல்லை யெனின், அவ்வில்லம் பொலிவிழந்து தோன்று



வதை நாம் பார்க்கவில்லையா? விளக்கில்லா வீடு இரவில் எத் தோற்றத்தை அளிக்குமோ, அத்தோற்றத்தையே மக்களில்லா மனையும் அளிக்குமென்பது தேற்றம். ஆகவே, மனைக்கு விளக்கம் மழலை மொழி மக்களேயாவர். மக்களில்லா வீடு மாந்தரில்லாக் காடெனவே கூறலாம்.

மக்கள் என்னும் சொல் ஆண்மக்கள் பெண்மக்கள் இருபாலாரையும் பொதுவாகக் குறிப்பதாகும். மக்கட்பேறு என்பதற்கு ஆண்மகவு பெண்மகவினைப் பெறுதல் என்று பொருள் கொள்ளாது, புதல்வரைப் பெறுதல் என்று கூறுதல் பொருத்தமன்று. ஏனெனில், "அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற", "தம்மக்கள் சிறுகை யளாவிய கூழ்", "மக்கள், மெய்தீண்டல் உடற்கின்பம்;" "குழலினிது யாழினிது என்ப தம்மக்கள் மழலைச் சொற் கேளாதவர்" என்ற இடங்களிலெல்லாம், திருவள்ளுவர் இருவகை மக்களையும் பொதுவாகக் கொண்டாரேயன்றி ஆண் மக்களையே சிறப்பாகக் கொள்ளவில்லை. பிற ஆசிரியர்களும் ஆங்காங்கு இங்ஙனமே கொண்டுள்ளார். ஆண் மக்கள் என்று கொண்டிருப்பின், புதல்வரென்றே திருவள்ளுவர் தெற்றெனக் கூறி யிருப்பரன்றோ? திருக்குறளில், மக்களைப்பற்றிக் கூறும் அதிகாரத்துக்கு "மக்கட்பேறு" என்ற தலைப்பினைத் தான் வள்ளுவர் வகுத்திருக்க வேண்டும். எற்றெனில், இதற்கு முன்னுள்ள "வாழ்க்கைத் துணைநலம்" என்ற அதிகாரத்தில் "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன், நன்கல நன் மக்கட் பேறு" என்ற கடைசி குறளில் மக்கட்பேறு என்று கூறி யிருப்பதனால், மக்களைக் குறித்துக் கூறும் அடுத்த அதிகாரத்துக்கு இத்தலைப்பினையே தோற்றுவாயாக வள்ளுவர் கொண்டிருக்க வேண்டுமென்பது வெள்ளிடைமலை.

மக்கட்பேறு என்றிருந்த தலைப்பினைப் "புதல்வர்ப் பேறு" என்று திருக்குறளின் உரையாசிரியர்களுள் யாரேனும் மாற்றியிருத்தல் கூடும். அன்றியும், இவ்வதிகாரத்தில் மேற்குறித்தவாறு மக்கள் என்றிருக்கும் இடங்களுக்கெல்லாம் புதல்வர் என்று பரிமேலழகர்தான் உரைகொண்டாரேயன்றி, வள்ளுவர் கருத்து அதுவன்று. பரிமேலழகர் உரைகண்டவண்ணம் புதல்வர் என்று கொள்ளின், ஆண்மக்கள் தீண்டுதல்தான் உடற்கின்பம், ஆண்மக்கள் சொற்கள்தான் குழலினும் யாழினும் இனிது; பெண் குழந்தைகள் தீண்டுதல் உடற்கு இன்பம் இல்லை, பெண் குழந்தைகள் சொற்கள் கர்ணகடூரமானதென்று இவ்வாறு கொள்ளக் கிடக்கின்றதன்றோ? இது பொருத்தமாமோ? ஊன்றி நோக்கின், ஆண் குழந்தைகளைவிடப் பெண் குழந்தைகளின் மொழிகளும் செயல்களுமே மிக்க களிப்பை ஊட்டுவனவாகும். மக்கட் பிறப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உயர்வு தாழ்வு இல்லை. இருபாலாரும் ஒத்த அறிவினரே, ஒத்த நிலையினரே, ஒத்த உரிமையினரே. இதனைக் குறித்துப் பின்னர்க் கூறுவாம்.






# 28. குடியரசு நீங்கி முடியரசு மீளுதல்.

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

முடியரசை மண்ணாக்கி குடியரசைக் கிளப்பிய ஆலிவர் கிராம்வெல் காலத்தில் குடிஜனங்கள் கண்ட அனுபவமானது, "புலியூருக்குப் பயந்து நரியூருக்குச் சென்றபோது நரியூரும் புலியூரானது" போலவும், "திருடப்போய் தலையாரி வீட்டில் ஒளிந்தது" போலவும் ஆயிற்றென்றால் மிகையாகாது. முடிமன்னன் சார்ல்ஸ் செய்தது போலவே குடியரசு ரக்ஷகன் கிராம்வெல்லும் பல பிரதிநிதி சபைகளை வெருட்டியடித்து, தன்னிஷ்டம் போல் ஆண்டு எதிர்த்தவர்களை சேனை பலத்தைக் கொண்டும், சேனைத் தலைவர்களைக் கொண்டும், ராணுவ ஆட்சி நடத்துபவனாக மாறிவிட்டான். மேலும் கிராம்வெல்லும் அவனைச் சேர்ந்தவர்களும் "தீவிர பரிசுத்தவாதிகள்" (Puritans) என்பது அவர்கள் போப் மதச் சின்னங்களையே ஒழித்துவிட "வேருடன் களைதல் மசோதா" (The root and branch bill) கொண்டு வந்ததிலிருந்து புலனாகியிருக்கலாம். அந்த முறையில், "வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்" எனவும், "காயமே இது பொய்யடா, சிவ காற்றடைத்த பையடா, மாயனார் குயவன் செய்த மண்ணு பாண்டம் ஓடடா" எனவும் "உலக வாழ்க்கை யின்பங்கள் நிலையற்றன. வாழ்நாளை, களிக்கூத்திலும் குடியிலும், கூத்தாடித் தனத்திலும் வீணாக்காமல், கடவுளை ஒருமனப்பட்டுத் துதி செய்யவேண்டும்" எனவும் போன்ற போக்குடையவர்களான குடியரசு கோஷ்டியினர், நாட்டில் மதச்சின்னங்களும், சந்தோஷப் பொழுது போக்கு, விநோதக் களியாட்டங்களும், கூடாதெனத் தடை செய்தனராம். பொதுவாக உத்ஸாகப் போக்குள்ள பெருவாரியான ஆங்கிளிகன் மத ஆங்கில மக்கள் அதிகக் கஷ்டப் பட்டனர். அது காரணத்தினாலும் ஜனங்களுக்கு குடியரசு முறையில் அதிருப்தியும் குரோதமும் ஏற்பட்டது சகஜம். ஆனாலும் அந்நியநாட்டு விஷயங்கள் சம்பந்தமாக கிராம்வெல் ஸ்டூவர்ட் அரசர்கள் இங்கிலந்துக்குத் தேடிக் கொடுத்த அகௌரவநிலையை மாற்றி இங்கிலந்தின் பூர்வ கௌரவ நிலையை ஸ்தாபித்தா னென்பதும், கிராம்வெல் மனதாரத் தன்னரசு நடத்த விரும்பவில்லை யென்பதற்கு அவன் நடத்திய பல பரிசோதனைகளே தக்க சான்றுகள் எனவும், அத்தகைய ஆட்சிமுறைக்கு தேசமக்கள் சரியான பரிபக்குவத்தில் இல்லையெனவும் ஒரு சாரார் கிராம்வெல்லைப் பற்றிப் புகழ்ச்சியாகச் சொல்லுவதும் ஆழ்ந்து கவனிக்க வேண்டிய விஷயமேயாகும்.

"நெருப்புத் தெரிந்து சுட்டாலும், தெரியாமல் சுட்டாலும், வெந்து புண்ணாவ"தைப் போல் எக்காரணம் பற்றியேனும் இங்கிலந்து ஜனங்களுக்கு



கஷ்டம் தான். கிராம்வெல் இறந்ததும், கடைசிகாலத்தில் அவருக்குக் கொடுக்கப்பட்ட உரிமைப்படி, தன் புத்திரனே ரக்ஷகன் ஆகவேண்டும் என்பதும் நடந்தேறியது. ஆனாலும் கிராம்வெல்லின் திறமை கிராம்வெல்லின் மகனுக்கில்லை. சேனைத்தலைவர் சச்சரவிட்டுக் கொண்டிருந்ததை அவனால் தடுக்கவும் அவர்களை அடக்கவும் முடியவில்லை. அவனுக்கும் அந்த நிலையில் அரசாள வேண்டுமென்ற ஆசையும் இல்லை. ஆகவே தன் பாட்டில் விலகிவிட்டான. இந்த சமயத்தில் கிராம்வெல்லின் பிரதிநிதியாக ஸ்காட்லந்தை ஆண்டுவந்த மாங்க் என்ற தளகர்த்தன் சீக்கிரமாக லண்டனுக்கு சேனையுடன் வந்தான். வரும் வழியிலேயே பொதுஜனங்களின் மனப்போக்கை விசாரித்து அறிந்தவளவில், ஜனங்களுக்குப் பழைய அரசன் பழையபடியும் ஆளுவதில் அபிப்பிராயம் என்றுணர்ந்தான். அதேநிலையில் அந்நிய நாடுகளில் அல்லல்பட்டு அலைந்து கொண்டிருந்த அரசகுமாரன், இங்கிலாந்தின் நிலவரத்தை ஆவலுடன் அறிந்து வந்தவனுடன் கடிதப்போக்கு வைத்துக்கொண்டும் இருந்தான். தளகர்த்தன், மாங்க் ஆகவே லண்டனில் ஒரு பார்லிமெண்ட் போன்ற சபையைக் கூட்டி அதற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகளை வரவழைத்தான். கூடினவரையில் பழைய நீடித்தகால பார்லிமெண்ட் அங்கத்தினர்களாக உள்ளவர்களில் பலரையும் வரும்படி செய்திருந்தான். அவர்கள் ஏகோபித்து முடியரசு ஆட்சிக்கு மீள விரும்பி தீர்மானம் செய்தனர். அந்த சமயத்தில் நெதர்லண்ட்ஸில் உள்ளப்ரெடா (Breda) விலிருந்த ராஜகுமாரன் சார்ல்ஸுக்கு இத் தீர்மானம் அனுப்பப்பட்ட போது, அவனும் மனமுவந்து ஏற்றுக் கொண்டு, "தன் தகப்பனாருடைய மரணத்தில் நேரில் கலந்துகொண்டவர்களைத் தவிர மற்றவர்களை மன்னித்து விடுவதாகவும் இங்கிலாந்தின் மதத் திட்டத்திற்கு மாறாக நடப்பதில்லை" யெனவும் உள்ள ப்ரெடா விளம்பரத்தை (The Declarations of Breda) வெளியிட்டான். அதற்கடுத்து அவனுடைய பிறந்த நாளான தினத்தில் 1660-ம் வருஷத்தில் தேசத்திற்குள் வந்து சேர்ந்த சம்பவத்திற்குத் தான் ஆங்கில சரித்திரத்தில் முடியரசின் "மீட்சி" என்ற பொருளுள்ள (The Restoration) என்ற பெயர். உடனே பார்லிமெண்ட் கூட்டப்பட்டு முந்தின காரியங்கள் ஒப்புக்கொள்ளப் பட்டன. இந்தக் காரியத்தையும், பின் சில காரியங்களையும் செய்த அந்தப் பார்லிமெண்டுக்கு "மீட்சி கால பார்லிமெண்ட்" (The Restoration Parliament) என்றது சரித்திரத்தில் வழங்கும் பெயராகும்.

ஆரம்பத்தில் குறிக்கப் பட்டபடி இந்த 'மீட்சி" பார்லிமெண்ட் தான் மூன்றாவது ஸ்டூவர்ட் அரசனான சார்ல்ஸ் II னிடம் "தான" உபாயத்தைக் கையாண்டு பார்த்ததும் பலனில்லாமல் போனதும் ஏற்பட்டது. "ஓடிப் போய் திரும்பிவந்த செல்லப் பிள்ளை" யின் விஷயம் போல, ஆங்கிலேயா தங்கள் அரசனுக்குப் பல விதங்களிலும் சௌகரியங்களைச் செய்து கொடுத்தனர் முதலில் சார்ல்ஸ் I ஐ மரண தண்டனைக் குள்ளாக்கியவர்களின் மேல் பழி வாங்கினர். உயிருடன் இருந்த பலரைச் சிறையிலிட்டும், மரண தண்டனைக் குள்ளாக்கியும் தேசப்பிரஷ்டம் செய்தும் தண்டித்தனர். இறந்தவர்களிலும் கூட, 'கிராம்வெல், ப்ராட்ஷா, ஐர்ட்டன் என்ற மூவருடைய கல்லறைகள் இடிக்கப்பட்டு அவைகளிலிருந்த எலும்புகள் டைபர்ன் (Tyburn) என்ற விடத்தில் தூக்கிலிடப் பட்டு' அவர்களுடைய ஆத்திரம் வேலை செய்ததாம். ஆகவே முக்கியமான பரிசுத்தவாதிகள் அதிக தொந்

தாவக் குள்ளானார்கள். அரசனுக்கு வரிப் பணங்கள் ஆயுள் பூராவுக்கும் அனுமதிக்கப் பட்டன. அரசனுக்கு மிகுந்த இஷ்டமானவனும், தான் கஷ்டப் பட்ட காலத்தில் தன்னுடன், "............அக் குளத்தில், கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டி யுறுவார் உறவு" என்ற புனித வாக்குப்படி ஓடியுழன்று கஷ்டப் பட்டவனுமான எட்வர்ட் ஹைட் (Edward Hyde) என்பவனை மந்திரியாக்கிக் கொடுத்தார்கள். அரசனையும் அவன் தகப்பனையும் அதிகமான கஷ்டங்களுக் குள்ளாக்கியவர்களான பரிசுத்த வாதிகளை மனதில் வைத்து, ஆனால் பொதுப் படையாக இங்கிலந்து ஆங்கிளிகன் மதத்திற்கு இணங்காதவர்களுக்கென சட்டங்களைச் செய்வித்து தங்களுடைய ராஜ பக்தியைக் காட்டினார்கள். அவைகள் பின்வருவன வாகும்.

(Five Mile Act) ஐந்து மைல் சட்டம். இங்கிலந்து மதத்திற்குப் புறம்பானவர்கள் எந்த பட்டணத்தின் ஐந்துமைல் தூரத்திற்கு வெளியே தான் இருக்க வேண்டும். பட்டணங்களுக்குள் வரவோ, பேசவோ, ஜீவனம் நடத்தவோ கூடாது.

(The Conventicle Act) சங்கச் சட்டம். அதாவது, அவர்களில் ஐந்து பேர்களுக்கு மேல் ஒரு இடத்தில் கூடி யிருக்கக் கூடாது. இருந்தால் தண்டனைக் குள்ளாவார்கள் என்பதே.

(The Corporation Act) நகர சபைச் சட்டம். என்பதினால் அவர்கள் பஞ்சாயத்து சபைகள் நகர பரிபாலன சபை முதலியவற்றில் அங்கத்தினர்களாக ஸ்தானங்கள் வகிக்கக்கூடா தென்று தடை செய்யப் பட்டார்கள்.

இந்தச் சட்டங்கள் இங்கிலாந்து மதத்திற்குப் புறம்பான கதோலிகர். ப்யூரிடன்கள் என்ற இருதிறத்தாரையும் உத்தேசித்தன போல் இருந்தாலும், விசேஷமாக ப்யூரிடன்களையே பாதித்தது என்பது அரசனுக்குத் திருப்தியாக செய்யப் பட்டதாகும். இதைக் கண்ட அரசன் தன்னிஷ்டம் போல் குடித்து, உண்டு, உறங்கிக் களித்து, மயங்கி, வெகு கோலாகலனாக, தன் கஷ்டகாலத்தை மறந்து, தன்னிஷ்டப் பட்ட மந்திரி, சகாக்களுடன் இருந்து வந்தான். மந்திரி எட்வர்ட் ஹைட் கிளாரண்டன் பிரபுவும் (The Duke of Clarendon) ஆக்கப்பட்டான். ஆக அரசசபை ஆனந்த சாகரத்தில் அழுந்திக் கிடந்தது. "மன்னன் எவ்வழி, மன்னுயி ரவ்வழி" என்றதற் கிணங்க நாகரீகத்தை நாடிய பலரும் தாங்கள் குடியரசு காலத்தில் தடையினால் அனுபவிக்க முடியாமற் போன பல போகங்களையும் அனுபவிக்கத் தொடங்கி, எங்கும் குடியும், கூத்தும், ஆனந்தமும் ஆக இருந்த தெனவும் நடத்தை முறைகளிலும் வரம்பு கெட்டு இருந்ததை அறிவாளிகள் வெறுக்கத் தொடங்கியதும் சரித்திர பூர்வமானது. அதைப் பற்றிப் பொதுவாகக் கூறும்போது பாமரரிடையில் பழக்கத்திலுள்ள "காய்ந்த மாடு கம்பங் கொல்லையில் புகுந்தது போல" என்ற பழமொழிக்கு உதாரணமாக மன்னனும் மன்னனைச் சார்ந்த மற்றவர்களும், பெரும்பாலான ஜனங்களும் இருந்தார்கள் என்று துணிந்து கூறலாம். இந்த மெய்ம்மறந்த சுகானுபவ நிலையில் தான் ஆங்கில சரித்திரத்தில் முக்கியமாக மூன்று சம்பவங்கள் நிகழ்ந்தன.

அவற்றுள் முதலாவதாக, ஆங்கிலேயருக்கு அப்போது இருந்த குறையை நீக்கி சிறந்த வியாபாரிகளாக அவர்கள் ஆகவேண்டும் என்ற நோக்



கத்துடன் ஆலிவர் கிராம்வெல் காலத்தில் செய்யப்பட்ட, "கப்பல் போக்குவரத்துச் சட்டம்' (Navigation Act) என்பதை மறுபடியும் "மீட்சிப் பார்லிமெண்டு அமலுக்குக் கொண்டு வந்தது. அதன் விசேஷ நிபந்தனை," "இங்கிலந்துக்கு வரும் வியாபாரப் பொருள்கள் இங்கிலந்து கப்பல்களில் வரவேண்டும். அல்லது அந்தந்த சாமான்கள் எந்தெந்த தேசத்தியனவோ அந்தந்த தேச கப்பல்களில் வரவேண்டும். அல்லாத வகையில் இங்கிலந்திற்கு சுங்கவரி செலுத்தவேண்டும்" என்பதாகும். இந்தச் சட்டத்தினால் அப்போதைய உலக வியாபாரப் பொருள்களை ஏற்றிச் சென்று விற்று ஏராளமான லாபம் அடைந்த டச்சுக்காரர்களுக்கு இது பெரிய கஷ்டமாயிற்று. அதனால் கிராம்வெல் காலத்திலும் சண்டை ஏற்பட்ட போது கிராம்வெல் இங்கிலந்தின் கௌரவத்தை நிலை நிறுத்தினான். ஆனால் இப்போதோ சட்டம் மாத்திரம் அமுலுக்கு வந்ததே யொழிய அதற்கு ஏற்பட்ட ஜாக்கிரதை இல்லை ஆகவே டச்சக்காரர்கள் யுத்தம் செய்ய மறுபடியும் வந்த போது, ஆங்கிலேயர்கள் ஆனந்த அனுபவத்தில் அமுங்கிக் கிடந்தனர் டச்சு கப்பல் படை தேம்ஸ் நதியின் வழியாய் இங்கிலந்து கப்பல் படை தங்குமிடமான சாதாம் (Chatham) வரையில் சென்று அங்குள்ள யுத்தக் கப்பல்களைத் தீக்கிரையாக்கிச் சென்றது! (காடீஸ் துறை முகத்தில் ட்ரேக் துரை 'ஸ்பெயின் அரசன் தாடியைக் கொளுத்தினேன்" என்ற வீர காரியத்தின் பிரதி பலனோ யாதோ? என்றும் நினைப்பது மிகையாகாது.) எதிர்ப்பார் எவரு மிலர் அல்லது இருந்தும் உணர்ச்சி யிலர் போலும்! "அளவுக்கு மிஞ்சுதல் அமுதமும் நஞ்சன்றோ?" இந்தப் பெருமையை காட்டிக் கொள்ள "இங்கிலீஷ் கால்வாயிலேயே இங்கிலீஷ் யுத்தக் கப்பல்கள் இல்லாமல், துடைத்து விட்டேன்" என்று சொல்லிக் கொள்வது போன்று, பாய் மரத்தின் நுனியில் கொடியின் பக்கத்தில் துடைப்பத்தைக் கட்டிக் கொண்டு சென்றார்களாம் டச்சுக்காரர்கள்! ஸ்பெயின் கப்பல் படையை சிதறடித்துச், சிறப்புப் பெற்ற ஆங்கிலேயரின் நிலைமை எவ்வா றிருந்திருக்கும் என்பது ஊகித்துக்கொள்ளக் கூடியதே.

இரண்டாவதாக, லண்டன்மா நகரத்தில் ஒரு பெரிய கொள்ளை நோய் தோன்றி அநேகம் ஏழை மக்களைக் கொன்று சென்றது! ஐயோ பாவம் அளவு கடந்த ஆனந்த அனுபவத்திற்கு ஒரு மாற்றம் போலும். இதுவே சரித்திரத்தில் 1665-ம் வருஷத்திய பெருங் கொள்ளை நோய் என்னும் பொருளுள்ள (Tha Great Plague of London 1665) என்பதாகும்.

மூன்றாவதாக "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பதற் கிணங்க, திடீரென ஒரு ரொட்டிக் கிடங்கின் அஜாக்ரதை யாதாரமாக ஒரு தீ ஏற்பட்டு பெரும் பாகமான பட்டணத்தை பொசுக்கிச் சாம்பலாக்கியது. இதற்கும் "லண்டன் நகரத்திய பெருந்தீ" என்ற பொருளுள்ள (The Great Fire of London 1666) என்ற குறிப்புப் பெயருண்டு. "எல்லாம் ஈசன் செயல். எதுவும் ஒரு நன்மைக்கே" என்றவாறு ப்ளேக் கிருமிகள் நாச மடைந்ததுடன் அப்போது குறுகலாகவும் சூரிய ரஸ்மியே படாதபடி அழுக்கு பிடித்து ஆபாசமாகக் கிடந்த லண்டன், புதிய சுகாதார முறைகளில், முன்பிருந்த மா வீடுகளை யொழித்து, கல்வீடுகளுள்ளதாக நிர்மாணிக்கப் பட்டது லண்டன்மா நகரம்! பிறகு டச்சுக்காரர்களுக்கும் சரியான பாடம் கற்பிக்கப் பட்ட தெனவும் அவர்களுக்கு அமெரிக்காவில் சொந்தமாக

இருந்த நியூ ஆம்ஸ்டர்டாம் (Nem Amsterdam) பிடிபட்டது. அதைப் பிடித்த அரசனுடைய தம்பி யார்க் கோமகன் ஜேம்ஸின் ஞாபகார்த்தமாக (James Duke of York) அதற்கு இன்றும் நியூயார்க் (New York) என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

மேல்சொன்ன மூன்று சம்பவங்களை ப்யூரிடன் மதத்தினர், தங்களை வதைத்ததில் கோபங் கொண்ட கடவுள் ஆங்கிலேயர்மேல் அனுப்பிய தண்டனைகள் என்று சொல்லிக் கொண்டார்களாம்! தங்களுக்கு உபத்திரவம் விளைவித்த அந்த மூன்று சட்டங்களுக்கும், எரிச்சல் காரணமாக "கிளாரண்டன் சட்டமுறை" (The Clarendon code) என்ற பெயரையும் சூட்டினார்களாம்! ஆக ஆத்திரம் கொண்ட பொது ஜனங்கள் கிளாரண்டனைக் குற்றஞ் சாட்ட விரும்பியபோது கிளாரண்டன் தப்பியோடி ஐரோப்பாக் கண்டத்தில் மறைந்தாராம். அதற்கடுத்தபடி கிளிப்போர்டு, ஆர்லிங்டன், பக்கிங்ஹாம், ஆஷ்லி, லாடர்டேல் (Clifford, Arlin-gon, Buckinghem, Ashley, Lauder dale) என்ற ஐவர் சேர்ந்து மந்திரிசபையை அமைத்தனர். அதில் முதல் இருவர் கதோலிகர். ஆக கதோலிகரிடம் கொண்ட ஆத்திரத்தையும் மறந்து, அரசனுக்கு திருப்தியானால் சரி என்ற நினைப்பில் பொதுஜனப் பிரதிநிதிகள் இருந்தனர். ஆனாலும் மந்திரி சபையிலிருந்த இரு கதோலிக்கரும் தங்கள் ஜன்மவாஸனையை மறவாதிருந்தனர் போலும். அச்சமயம் மேலே சொன்ன வியாபாரப் போட்டியை யொட்டியும் மதவேற்றுமையைக் காரணமாகக் கொண்டும் பிரான்ஸ் அரசன் XIV என்பவன், ஹாலந்து தேசத்தினருடன் (டச்சுக்காரர்) சண்டை நடத்த முஸ்தீபுகள் நடத்தினான். ப்ராடெஸ்டெண்ட் வாஸனையில் இங்கிலாந்து உதவிசெய்ய, டச்சுக்காரருக்கு முன் வரலாமோ என்ற நினைப்பில் ஒரு தந்திரகாரியம் செய்தான் லூயி. அந்த லூயி, சார்ல்ஸ் II-ன் தாய்மாமன் பாந்தவ்யத்தை யொட்டி, அரசனுக்கும் அந்தரங்கத்தில் கதோலிக்கரிடத்தில் அன்பு காட்டி ஆதரிக்க அதிக ஆசைதான். ஆனால் தன் தகப்பனார் சாதாரணமாக ஆர்மீனிய மதத்தை ஆதரித்ததற்கே ஆவி துறக்க நேர்ந்தும், தானும் ஒன்பது வருஷங்களுக்கு அக்ஞாதவாஸம் அனுபவித்து அல்லல் பட்டதும் ஞாபகம் வந்து, "நான் மறுபடியும் யாத்திரை போக விரும்பவில்லை" (I don't like to go on my travels again) என்று யாத்திரையின் பயனை அறிவு அவனை நிதானப் படுத்தியது. அவ்வளவும் அறிந்த அம்மான் லூயி, மந்திரி சபையி லிருந்த அந்த இரு கதோலிக்கரின் மூலமாக ஒரு அந்தரங்க உடன்படிக்கை சார்ல்ஸுடன் நிறைவேற்றினான். அது இரகசியமாக டோவர் என்ற விடத்தில் நடந்ததால் அதற்கு "டோவர் இரகசிய உடன்படிக்கை" (The Secret treaty of Dover) என்று பெயர்.

அதன் ஷரத்துக்களைக் கொண்டு, இரகசியத்தின் அவசியம் அனுமானித்துக் கொள்ளலாம். பிரான்ஸ், ஹாலந்துடன் நடத்தும் யுத்தத்தில், இங்கிலந்து பிரான்ஸுக்கு உதவவேண்டும். இங்கிலாந்தில் கதோலிக்க மதத்தை எப்படியும் ஸ்தாபிக்க வேண்டும். அதற்கு யாரும் ஆக்ஷேபனை செய்து கலகம் செய்தால் அவர்களை யடக்க ஒரு பெருஞ்சேனை பிரஞ்சு அரசன் அனுப்பவேண்டும். இதுகளுக்கு இணங்கிய இங்கிலந்து அரசனுக்கு ஏராளமான பணம் வெகுமதி கொடுக்க வேண்டும் என்பதேயாகும். இதைக் கொண்டு ப்ரான்ஸ் அரசன் ஹாலந்தின் மீது போர் தொடுத்தபோது விசேஷ வெற்றியடையாததில் ஆத்திரங் கொண்டு இங்கிலந்தும் உதவி செய்யாததால், விஷமத்தனமாக இரகசியச் சங்கதிகளை காற்று வாக்கில் பறக்கவிட்டு இங்கிலந்து ஜனங்களுக்கு ஆத்திரமூட்டி குழப்பஞ்செய்ய நினைத்து விட்டான்.



இங்கிலாந்து ஜனங்கள் ஆத்திரப்பட்டன ராயினும், அந்த மந்திரிகளை அடித்துத்துரத்தி கதோலிக்க ரிருவருமே உயிர்தப்பி, ஓடும்படியும் செய்து, டான்பி பிரபுவை மந்திரியாகக் கொள்ளும்படி செய்தனர். இதனால் இந்த துர்த்த மந்திரி சபைக்கு, அவர்கள் பெயர்களின் முதலெழுத்துகளைச் சேர்த்து (Cabal) கபால் சதிகாரர்களின் கூட்டம் என்ற இழிபெயரும் உண்டாயிற்று.

இவ்வளவு வரையில் தானம் செய்த ஆங்கிலேயரின் மனதை அரசன் எவ்வாறு புண்படுத்தினான் என்பதும் அதன் பலன்களும் அடுத்து எழுதப்படும்.

## வீணையின் சிறப்பு.

வாத்தியங்களில் சிறந்தது வீணை ஒன்றுதான் என்பதை "சிலப்பதிகாரம்" மிக நன்றாகச் சொல்கிறது. மனுஷ்யனைப்போலப் பாடுவது வீணை ஒன்றுதான். சரீரத்தைக் காத்ரவீணை யென்றும், வீணையைத் தாருவீணை யென்றும் சொல்வதுண்டு. இரண்டுக்கும் சாம்யம் இருக்கிறது. உடம்பே வீணைபோல அமைந்திருக்கிறது. மனுஷ்யனுடைய தலையிலிருந்து இடுப்பு வரையிலுள்ள பாகம் வீணையை ஒத்ததாக இருக்கிறது. வீணையின் குடம் போன்றது தலை. கண்ணிருக்கும் ஸ்தானத்தில் வீணையிலும் இரண்டு கண்கள் இருக்கின்றன. வாய், தந்தி மீட்டும் இடம். உடம்பிலுள்ள முதுகெலும்பை வீணாதண்ட மென்பார்கள். அந்த எலும்பு சிரசிலிருந்து பின்புறம் வரையில் வந்து வளைந்து இருக்கின்றது. அது இருபத்துநாலு எலும்புகளின் சேர்க்கை என்பார்கள். வீணையிலும் இருபத்துநாலு மெட்டுக்கள் இருக்கின்றன. வாதம் பித்தம் சிலேஷ்மம் என்ற மூன்று நாடிகள் உடம்பில் இருக்கின்றன. வீணையிலும் பஞ்சமம் மத்யமம் சாரணி என மூன்று தந்திகள் இருக்கின்றன. இந்த மூன்றோடு மந்திரத்துக்காக ஒரு தந்தியும், தாளத்துக்காக மூன்று தந்திகளும் சேர்ந்து ஏழு தந்திகள் இருக்கின்றன. இந்த ஏழு தந்திகளும் தேகத்திலுள்ள சப்த தாதுக்களைப்போல அமைந்திருக்கின்றன.

மந்திரத்துக்காக ஒரு தந்தி ஏற்பட்டிருக்கின்றது? நான்கு வேதங்களுக்கு நாலு தந்திகள் ஏற்பட்டிருக்கின்றன. ரிக்வேதத்துக்காகப் பஞ்சமம் ஏற்பட்டிருக்கிறது. யஜுர் வேதத்துக்காக சாரணியும் சாமவேதத்துக்கு மத்தியமமும் ஏற்பட்டிருக்கின்றன. பாக்கி உள்ள அதர்வணத்திற்கு ஒன்று வேண்டுமல்லவா? அதர்வண மந்திரங்களுக்காக மந்திரம் என்ற தந்தி ஏற்பட்டது. அது மிகவும் கீழே உள்ள ஸ்வரங்களைப் பேசும். சிலப்பதிகாரத்தில் வீணையின் லக்ஷணம், வீணை வாசிக்கவேண்டிய முறை, வைணிகனுடைய லக்ஷணம் முதலியவை நன்றாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

காயகசிகாமணி-முத்தையா பாகவதர்.

# கண்ணன்-என் அரசன்.

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்" என்பது நம்மாழ்வார் அருள்மொழி. உலகங்கள் பலவற்றிற்கும் ஒருபெருந் தலைவனாயிருந்து எவ்வுயிரையும் காத்தருளும் தனிப்பெரும் இறைவனாகிய திருமாலின் அம்சம், அறநெறி வளர்க்கும் செங்கோல் மன்னன் ஒவ்வொருவனிடமும் அமைந்து விளங்குமென்பது முன்னோர் துணிபு. தனது ஆட்சிக்குட்பட்ட ஆருயிர்களுக்கு நேரும் இடையூறுகளை நீக்கி அன்பும் அறமுமே எங்கணும் பரவும்படி செங்கோல் நடத்தும் சீரிய மன்னன, அவ்வுயிர்களைத் தாங்கும் ஒரு பெரும் உடலை ஒப்பவனாவான். "வையம் மன்னுயிர் ஆக, அம் மன்னுயிர் உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னவன்"—என்ற கம்பர் பொன்மொழியின் உண்மை நன்கு சிந்தித்து உணரத்தக்கது. மக்களின் பல நலங்களுக்கும் இடையூறு நேராவாறு ஒழுங்குபடக் காக்கும் மகத்தான பொறுப்பை வகிக்கும் மன்னன், தன்னை மக்களுக்குப் பணிபுரியும் ஊழியனாகக் கருதவேண்டுமேயன்றி, அதிகாரப் பித்துக்கேனும் சுயநலப் பற்றுக்கேனும் தனது நெஞ்சில் சிறிதும் இடங்கொடுத்தல் கூடாது.




எவ்வுயிரையும் காத்தருளும் தனிப்பெருந் தலைவனாகிய திருமால், இந்நிலவுலகில் யாதவ மன்னர் குலத்தில் கண்ணபிரானாக அவதரித்தருளிய



காலத்தில் எவ்வண்ணம் நடந்துகொண்டாரென்பதை கவியரசராகிய-திரு சுப்பிரமணிய பாரதியார் வருணித்துப் பாடியுள்ள பாடல்களின் அற்புத நயங்களை, ஈண்டு சிறிது ஆராயக் கடவோம்.

'அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்'—என்பது ஒரு முதுமொழி. தீவினை செய்வோரை தக்கபடி தண்டித்துத் திருத்த வேண்டுவது, அரசனது இன்றியமையாத கடமைகளுள் ஒன்றாகும். ஆயினும், அம் மன்னன் பிழை இழைத்தோரை நன்கு விசாரித்தும் சாட்சிகள் முதலியவர்களின் துணைகொண்டும் மந்திரிகளின் உதவிகொண்டும் நீர்க்காலோசனை செய்தும் உண்மை உணர்ந்த பின்னரே, தண்டித்தல் வேண்டும். அவ்வாறின்றி, அதிகாரத் திமிரினாலோ அசிரத்தையினாலோ போதிய பொறுமையின்மையினாலோ அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்துவிடுவோர், பின்னால் மாறாத கொடும் பழிக்கும் பெரும் பாவத்திற்கும் ஆளாக நேரும். ஆதலின், அறிவிலும் நடுநிலையிலும் வீரத்திலும் சிறந்த அரசன், பொறுமையிலும் சிறந்தவனாக இருக்கவேண்டுவது அத்தியாவசியம். இவ்வுண்மையை கண்ணனாகிய மன்னன் நன்கு உணர்த்தியிருப்பது கவனித்தற்குரியதாகும். ஆணவமிகுதியினாலும் அஞ்ஞான மிகுதியினாலும் ராஜஸச் செருக்கினாலும் தன்னைப் பகைத்துப் பலவாறு பழித்த கயவர்களிடம் கண்ணபிரான் கடுஞ்சினங்கொண்டு உடனே அவர்களை அழிக்க முனைந்து நிற்காமல், அவர்கள் மேல் இரக்கங்கொண்டு 'என்றேனும் அவர்கள் சீர்திருந்தாரோ' என்னும் எண்ணத்துடன் நெடுங்காலம் மிகுந்த பொறுமையுடன் காத்துக்கொண்டிருந்து, 'திருந்தக்கூடும்' என்னும் நம்பிக்கைக்குச் சிறிதும் இடமில்லாமற் போகும் கடைசி சமயத்திலேயே அவர்களைத் தண்டிக்கத் துணிவானாம். தீயோரின் தீவினைகளை ஒருமுறைக்குப் பன்முறை பொறுத்துப் பொறுத்து எவ்வளவு காலம் காத்திருக்கக்கூடுமோ, அதுவரையில் காத்திருக்கக் கண்ண மன்னனின் திருவுள்ளம் சிறிதும் சலிப்படைவதில்லையாம். இவ்வுண்மையையே,

> "பகைமை முற்றி முதிர்ந்திடு மட்டிலும்
> பார்த்திருப்ப தல்லால் ஒன்றும் செய்திடான்;
> நகைபுரிந்து பொறுத்துப் பொறுத் ததையோ,
> நாட்கள்-மாதங்கள்-ஆண்டுகள் போக்குவான்!"—

என்று நமது பாரதியாரும் உணர்த்தலானார்.

கண்ண மன்னனின் திருவுள்ளத்தில் பகைவர்களிடத்திலும் பெருங் கருணையே நிரம்பி நிற்பதால், அவர்களை உடனுக்குடன் தண்டிக்க அப் பெருமானது திருவுள்ளம் எளிதில் ஒருப்படுவதில்லை. அப் பெருமானது மகத்தான பொறுமையைச் சிந்திக்குந்தோறும், 'வீரநாயகனாகிய கண்ணபிரான் பகைவர்களைச் செருக்கடக்கி வெற்றி முழக்கம் செய்யும் வீரக் காட்சியைக் கண்ணாரக் கண்டு களிக்கும் பேறு நமக்கு வாய்க்குமோ' என்றுகூட சில அன்பர்கள் சந்தேகித்தனராம். கொடியவர்களின் பயங்கரமான நாசக்காட்சிகளையும் அடியவர்களின் உற்சாகமான ஆரவாரக் காட்சிகளையும் மனத்திற்குள்ளேயே நினைத்து நினைத்து, அக்காட்சிகளைக் கண்ணாரக் கண்டு களிக்கும் நாள் கிட்டாததன்பயனாக, பற்பல அன்பர்கள் பெரிதும் மனம் சலித்து நின்றனராம். தீயோரைத் தண்டித்துத் தூயோரை ஆதரிக்கவேண்டியதற்குப் பதிலாக தூயோரைத் துன்புறுத்தித் தீயோரை ஆதரிக்கும் மன்னனின்

கொடுங்கோலாட்சியை, குடிமக்கள் அனைவரும் பெரிதும் வெறுப்பது இயல்பே. 'அக் கொடுங்கோல் மன்னனை எதிர்த்துப் போர்புரிந்து தோற்கடித்து, அவனை அரியணையினின்றும் அகற்ற வேண்டும்' என்னும் பேரார்வமும், தேசபக்தி உடைய ஒவ்வொருவன் மனத்திலும் பொங்கி நிற்பதும் இயல்பே.

அவை யனைத்தையும் கண்ணபிரான் நன்கு உணர்ந்திருந்துங்கூட, கொடுங்கோன் மன்னனாகிய வஞ்ச நெஞ்சக் கஞ்சனை எதிர்த்துப் போர் புரியும் நோக்குடன், நாட்டிலுள்ள வீரர்களைத் திரட்டிப் படை அமைக்கவோ பணம் திரட்டவோ மற்ற முயற்சிகளைச் செய்யவோ கருதினானில்லை. நல்லவர்கட்கு அல்லல் விளைவிக்கும் கொடுங்கோன் மன்னனின் செருக்கை அடக்கவேண்டியது தனது கடமை என்பதை மறந்துவிட்டவனைப்போல, கண்ணபிரான் கோகுலத்தில் விளையாடிக்கொண்டிருந்ததை எண்ணி எண்ணி, வடமதுரையிலிருந்த அன்பர்களிற் சிலர் அப் பெருமானைப் பலவாறு பழிக்கவும் துணிந்தனராம். வீரமன்னனாகிய வசுதேவன் மகனாகப் பிறந்தும், போர்த்திறமில்லாத இடையர்களிடையில் வளர்ந்ததன் பயனாக பிறவிக் குணமாக அமைந்த சீரிய வீர உணர்ச்சியையும் கண்ணபிரான் இழந்துவிட்டானோ'—என்று சில அன்பர்கள் சந்தேகித்தனராம். கண்ணபிரானது திருவுள்ளத்தில் இருந்த பெரும் பொறுமையை உணராத பேதைகள் சிலர், படைவலியும் பொருள்வலியும் மிகுந்த கஞ்சனை எதிர்த்துப் போர் செய்ய அஞ்சியே கண்ணபிரான் கோகுலத்தில் மறைந்து விளையாடிக் கொண்டிருந்ததாகப் பழித்துப் பேசவும் துணிந்தனராம். அவ் வண்ணம் வடமதுரையில் பலரும் பேசிக்கொண்டிருந்த பழிப்புரைகளை, அங்கிருந்து கோகுலத்திற்குச் சென்ற சிலர் கண்ணபிரானிடம் தெரிவித்தனராம். அத்தகைய கேவலமான வசைமொழிகளைக் கேட்ட பின்னரேனும், கண்ணபிரானது திருவுள்ளத்தில் வெட்கமேனும் வெஞ்சினமேனும் தோன்றினவோ? கண்ணபிரான்




சிரித்த முகத்துடன் அவர்களை நோக்கி,



"கொல்லப் பூதம் அனுப்பிய மாமனே,
கோல் உயர்த்(து) உல(து) ஆண்டு களிக்கட்டும் !'

என்று பதிலிறுத்து நின்றானும்.

தமது ஹிருதயமாகிய சீரிய சிங்காசனத்திலே தன்னை வீற்றிருக்கச் செய்து ஹிருதய பூர்வமான ஆழ்ந்த பெருங்காதலுடன் வழிபட்ட ஆய்ச்சிமாரின் அன்பு வலையிற் கட்டுண்டு நின்ற கண்ணபிரான், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அவர்களது கள்ளமற்ற மோகன முல்லைச் சிரிப்பிலே ஈடுபட்டும்; உள்ளத்தினின்றும் கிளர்ந்தெழும் இன்ப உணர்ச்சிகளை வெளியிடும் இன்பப் பாட்டுகளில் மோகங் கொண்டும் பொழுது போக்குவானாயினன். அப்பொழுது, கஞ்சனின் கொடுமையைச் சகிக்க முடியாமல் வடமதுரையினின்றும் கோகுலத்திற்கு வந்த சில வீரர்கள், கண்ணபிரானை அடுத்து "வசுதேவரின் பெருந்தவப் பயனாகப் பிறந்து இங்கு விளையாடிக் கொண்டிருக்கும் பெருமானே! உனது மாமனின் கொடுமையை எங்களால் சகிக்க முடியவில்லை; வானமழையை எதிர்பார்த்து வெய்யிலின் கொடுமையால் பெரிதும் வாடி நிற்கும் இளம் பயிரைப் போல், கஞ்சனின் கொடுமையால் நெஞ்சு குமுறி நிற்கும் மான உணர்ச்சி மிகுந்த வீரர்கள் பலர், தங்களுக்குத் தலைமை வகித்து போர் நடத்தக் கூடிய சீரிய தலைவன் ஒருவனை எதிர்பார்த்து எதிர்பார்த்துத் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்! கருணை கூர்ந்து, இப்பொழுதே புறப்பட்டு வட மதுரைக்கு எழுந்தருளத் திருவுள்ளம் இரங்கியருள வேண்டும்."—என்று விண்ணப்பித்து நிற்பாராயினர். அவ் விண்ணப்பத்தைக் கேட்ட பின்னருங் கூட, கண்ணபிரான் வடமதுரைக்குப் புறப்பட இசையவில்லை. என்? கருணையின்மையினாலோ? இல்லை, இல்லை! உரிய காலம் நெருங்க வில்லை என்னும் காரணத்தினால்தான்! கொடுங்கோன்மன்னனாகிய கஞ்சனது கொடுஞ்செயல்களைக் கேட்குந்தோறும் கண்ணபிரானது திருவுள்ளத்தில் வெஞ்சினமும் வெறுப்பும் ஆத்திரமும் பொங்கிப் பெருகாமலில்லை; எனினும் அவையனைத்தையும் அப் பெருமானிடம் இயல்பில் அமைந்த மகத்தான பொறுமையும் மட்டற்ற கருணையும் தடுத்து நிறுத்துவன ஆயின. ஒருபுறம் கடமையினாலும் மற்றொரு புறம் பொறுமையினாலும் அலைக்கப் பட்டு அமைதி இழந்த தனது திருவுள்ளத்திலே பொங்கிப்




பெருகும் துன்பத்தை ஆற்றிக் கொள்ளக் கருதிய கண்ணபிரான், இராகதானங்களோடு கூடிய இன்ப கீதங்களிலும் உற்சாக மூட்டக் கூடிய கூத்து

களிலும் ஈடுபடலாயினன்; அவற்றினாலும் ஆறுதல் பெற முடியாமற் போகவே, தனது சிந்தைக் கினிய சீரிய புல்லாங்குழலை எடுத்துக் கொண்டு மனித சஞ்சாரமற்ற வனத்தை அடுத்து—இயற்கையின்பக் காட்சிகளில் சிந்தையைச் செலுத்தி—கல்லும் புல்லும் கனிந்து உருக—புள்ளும் விலங்கும் தன்னைச் சுற்றிலும் அசைவற்றுக் கிடப்ப—தன்னையும் உலகையும் மறந்து தனிப்பட்ட ஆனந்தத்தில் ஆழ்ந்தவனாய் வேய்ங் குழலிசைத்து வீற்றிருப்பானாயினன்.

எவ்வுயிர்க்குந் தலைவனாகிய இறைவனே கண்ணபிரானாக அவதரித் துள்ளான் என்னும் உண்மையை உணர்ந்து கொள்ளாத ஆயர்கள் பலரும், அவனது ஒப்புயர்வற்ற பெருமையைச் சிறிதும் உணர்ந்து கொள்ளாமல் அவனைச் சாதாரண சிறுவனாகவே மதித்திருப்பினும், அவனது உண்மை இயல்பை உணர்ந்த மகாத்மாக்கள் சிலரும் கோகுலத்தில் இல்லாமற் போய்விட வில்லை. ஆய்ச்சியின் அடிக்கு அஞ்சி தன் வீட்டுக்குள் வந்து நுழைந்த கண்ணனின் காலைப் பிடித்துக் கொண்டு, தனக்கும் தனது தயிர்ச் சட்டிக்குங் கூட முக்தி கொடுக்குமாறு வரம் வேண்டிப் பெற்று உயர்ந்த ததிபாண்டன் முதலிய அன்பர்கள் சிலரும் ஆயர்பாடியில் வாழ்ந்திருந்தனர். அத்தகைய அன்பர்களுள் சிலர், கண்ணன் கழலிணையை உறுதியாகப் பற்றிக் கொண்டு—"உயிரை உய்விக்கக் கூடியதொரு உத்தம கதியைக் காட்டியருளத் திருவுள்ளம் இரங்கி யருள வேண்டும்"—என்று வேண்டி நிற்கும் போது, அப் பெருமான் அவர்களை நோக்கிச் சிரித்த முகத்துடன் "நாலில் ஒன்று பலித்திடுங் காண்!"—என்று கூறி விட்டு ஓடி விடுவானாம்! அவனது அருளின்றி, அச் சொல்லின் உட் பொருளை எவரால் உணர்ந்து கொள்ள முடியும்?

கண்ணபிரானது திருவருள் வலியையன்றி வேறு எத் துணையையும் சிந்தையிற் கொள்ளாமல் அஃதொன்றையே உறுதியாக நம்பி நிற்கும் உண்மையன்பர்கள், சகித்தற்கரிய கொடிய துன்பங்களுக்கு உள்ளாகி நெஞ்சு குமுறி நிற்கும் போது, அவர்களது நம்பிக்கையின் உறுதியைச் சோதிக்கக் கருதும் கண்ணபிரான் தனது திருவருளை விரைந்தளிக்காமல் காலந் தாழ்த்துவதுண்டு. அந் நிலையிலும், நம்பிக்கை தளராத உறுதியான உத்தம—பக்தியை உடைய உண்மை யன்பர்களைக் கண்ணபிரான் ஒருபோதும் கை விடுவதில்லை. சில சமயங்களில் அடியவர்களுக்கு நேரும் துன்பங்களை விலக்கியருளும் கண்ண மன்னன், மற்றும் சில சமயங்களில் அவர்களது பக்தியின் உறுதியைச் சோதிக்கும் நோக்குடன் அருளின்றி ஒளிந்து நிற்பவனைப் போல் நடிப்பதும் உண்டு. துன்பம் மிகுந்தாலும் இன்பம் விளைந்தாலும்—என்றும் எந் நிலையிலும்—கண்ணன் கழலிணையை மறவாமல், "களைவாய் துன்பம்; களையாது ஒழிவாய்; களைகண் மற்றிலேன்"—என்று கலங்கா திருக்கக் கூடிய உறுதி மிகுந்த உத்தம—பக்தி உடையோரே, கண்ணபிரானது இன்னருளுக்கு உரியோராவர்.

ஆய்ப் பாடியில், இடையர்களோடு கலந்து விளையாடிக் கொண்டிருந்த காலத்திலும், கண்ணபிரான் வெறும் விளையாட்டிலேயே பொழுது கழித்துக் கொண்டிருந்து விட வில்லை. அக் காலத்திலுங் கூட, கண்ணபிரான் ராஜ குமாரனுக்கு உரிய வீரப் பயிற்சிகளைப் பயில்வதில் தவறி விட வில்லை. இவ் வுண்மையை நமது பாரதியார், "தந்திரங்கள் பயிலவுஞ் செய்குவான்—சவுரியங்கள் பழகவுஞ் செய்குவான்"—என்று அறிவுறுத்தலானார். தன்னைச்



சாதாரண சிறுவனாக நினைத்திருந்த பேதமை மிகுந்த ஆயர்களுக்குத் தனது



ஒப்புயர்வற்ற அற்புத சக்தியை உணர்த்தியருளத் திருவுள்ளங் கொண்டருளிய கண்ணபிரான், தான் ஆய்ப்பாடியில் வளரும்போதே விந்தை மிகுந்த மந்திர ஜாலங்களை யொத்த திருவிளையாடல்கள் பற்பலவற்றையும் அவ்வப்போது செய்து வந்தான். எனினும், அதே சமயத்தில், தான் மெய்யன்பர்களுக்கு எவ்வளவு தூரம் கட்டுப்பட்டிருக்கக் கூடியவன் என்பதை உணர்த்துவதற்காக, போர் செய்யப் போதிய வலிமை இல்லாத வெறும் விளையாட்டுப் பிள்ளையைப் போல் தனது அபார வலிமை முழுவதையும் மறைத்துக் கொண்டும் வாழ்வானாயினன்.

கருணைக் கடலாகிய கண்ணபிரானாலும் பொறுக்க முடியாதவாறு தீயோரின் கொடுமைகள் வரம்பின்றிப் பெருகி விடும்போது—பன்னெடுங் காலம் பொறுத்திருந்து பார்த்தும் தீயோர் சீர்திருந்தக்கூடும் என்னும் நம்பிக்கைக்குச் சிறிதும் இடம் இல்லாமற் போய்விடும் போது—கொடியோரைத் தண்டித்தே தீரவேண்டிய காலம் நேர்ந்து விடும்போது—ஒரே ஒரு கண நேரத்திலேயே, அப் பெருமான் — முற்றிலும் புதியவனாக மாறி விடுவானாயினன். பாட்டிலும் கூத்திலும் பற்பல விளையாடல்களிலும் காலங் கழித்துக் கொண்டிருந்த கண்ணபிரான்,

"பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்!
தர்ம ஸமஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே!!"

("நல்லோரைக் காக்கவும் தீயன செய்வோரை அழிக்கவும் அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்")—என்று கீதையில் அருளியவாறு, கொடியோரைத் தண்டிக்க வேண்டிய காலம் நேர்ந்த விடத்தில், வியக்கத்தக்க அற்புதப் பேராற்றல் வாய்ந்த ஒப்புயர்வற்ற வீரநாயகனாக மாறலானான், அவ்வேளையிலே, அப்பெருமானது திருவுள்ளத்தில் நெடுங்காலமாகப் புகைந்து கொண்டிருந்த வெஞ்சினத்தீ, திடீரென்று பயங்கரமான ஜ்வாலைகள் வீசி ஓங்கி வளர்ந்து எரியத் தொடங்கி விடுவதாயிற்று. எனவே, அச்சமயத்தில் அக்கண்ணபிரான் பாரதியார் பாடியவாறு—"ஆலகால விடத்தினைப் போலவே—அகிலம் முற்றும் அசைத்திடச் சீறுபவ"னாக மாறியது இயல்பேயன்றோ!

நெடுங்காலமாகக் கொடுங்கோன்மை செலுத்திச் செருக்கு மிகுந்து நின்ற கொடியோரை, நச்சுப்பூண்டை வேரோடு பறித்து அவ் வேர் படர்ந்திருந்த

மண்ணையும் தோண்டியெடுத்தெறிந்து அவ்விடத்தையும் தீயினால் சுட்டெரிப்பது போல், அடியோடு அழித்து கண்ணபிரான் பகைமையைப் பொசுக்கிய அற்புதம் உன்ன உன்னப் பெருவியப்பை விளைவிப்பதாகும். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மண்ணுலகும் விண்ணுலகும் அனுபவித்த கொடிய துன்பங்கள் எல்லாவற்றையும் ஒரே ஒரு கணப்பொழுதில் முழுதும் மாற்றி, தீயோர் செருக்கொழிந்து பதறிக் கதறவும் தூயோர் துயரொழிந்து துதித்து நிற்கவும் செய்யக்கூடிய கண்ண மன்னனின் ஒப்புயர்வற்ற அற்புதம் மிகுந்த சீரிய வீரத்தின் தனிப்பெருஞ் சிறப்பை, கேவலம் எழுத்தால் எழுதிக்காட்டி உணர்த்த முடியுமோ ?

கொடியோரைத் தண்டிப்பதற்கென்றே திருமாலின் வலத்திருக்கரத்தில் சிறந்து விளங்கும் ஒளி மிகுந்த சக்கரம், அப்பெருமான் மண்ணுலகில் கண்ணபிரானாக அவதரித்தருளிய போதும், அப் பெருமான் விரும்பிய போதெல்லாம் அவன் முன் தோன்றி அவன் ஏவிய பணிகளைச் செய்து முடிக்கச் சித்தமாக நின்றது நன்கு சிந்திக்கத் தக்கதாகும். எல்லா உலகங்களிலு முள்ள எல்லா மன்னர்களுக்கும் தனிப்பெருந் தலைமை வகித்து நிற்கும் மன்னர்குலத் தெய்வமாகிய திருமாலின் திருக்கைகளில் பகைவரை அழிக்கும் படையாக விளங்கும் சக்கரமும்—வீர வெற்றி முழக்கம் செய்யும் சங்கமும். அப்பெருமான் மண்ணுலகில் கண்ணபிரானாக அவதரித்தருளிய காலத்திலும், அவன் விரும்பிய போதெல்லாம் முறையே சத்துரு நாசமும் ஜயகோஷமும் செய்து நின்றது கவனிக்கத் தக்கது. 'பகைவனை அழிக்க வேண்டும்' என்னும் எண்




ணம் கண்ணபிரானது திருவுள்ளத்தில் தோன்ற வேண்டியதுதான் தாமதம்! அதே கணத்தில், சுடரொளி வீசும் திருச் சக்கரம் அப்பெருமானது வலத்



திருக்கரத்தில் வந்து நிற்குமாம்! மறு கணத்திலேயே, மண்ணுலகில் பரந்து நின்ற தீயவை யாவும் பறந்துபோய், எங்கணும் தருமமே தழைத்து நிற்குமாம்! சக்கரத்தைத் திருக்கரத்தில் எடுத்த நேரத்திற்கும் போர் முனையில் பகைவர்களை அழித்த நேரத்திற்கும் இடையிலுள்ள நேரமே அன்பர்களின் நெஞ்சில் தோன்றாதவாறு,—அவ்வளவு விரைவிலே—பகைமையை ஒழிக்கும் ஒப்புயர்வற்ற அற்புத சக்தி பெரிதும் சிறந்து விளங்கியது, வீரர் குலத் தெய்வமாகிய கண்ணபிரானிடமே யன்றோ! இவ்வுண்மையையே நமது பாரதியார்—வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே பொங்கிப் பெருகும் உள்ளத்துடன் கூடியவராய்,

"சக்கரத்தை எடுப்பதொரு கணம்;
தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்!
இக்கணத்தில் இடைக் கணம் ஒன்றுண்டோ ?
இதனுள்ளே பகைமாய்த்திட வல்லன் காண் !"

என்று போற்றிப் பாடுவாராயினர்.

கவியரசராகிய பாரதியார், அரசர் குலத் தெய்வமாகிய கண்ணபிரானது ஒப்புயர்வற்ற தனிப்பெரும் வீரப்புகழை அப் பெருமானுக்குப் பெருமகிழ்வூட்டக் கூடிய உணர்ச்சி ததும்பிப் பொங்கும் இன்பப்பாட்டில் அமைத்து எப்பொழுதும் பாடிக் கொண்டிருப்பதில் பித்து மிகுந்து நின்றதாகக் கூறியிருப்பதை, அன்பர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். திண்ணை வாயில் பெருக்கும் சிறு தொழில் செய்ய வந்த தன்னை, கண்ணபிரான் நாடு முழுதும் போற்றிப் புகழும்படி மந்திரியாக்கிச் சிறப்பித்தான் என்று பாடுகிறார் நமது பாரதியார். நெடுங்காலம் எவ்வளவோ சிரமப்பட்டு கற்றுணர்ந்த கல்வியறிவை மற்றவர்களைப் போல பாரதியாரும் கேவலம் உத்தியோகத் துறையில் பயன் படுத்தும்படி விட்டு விடாமல், அக் கல்வியறிவுச் செல்வம் முழுவதையும் தேசமக்களைத் தட்டியெழுப்பி புத்துயிரளித்துப் புத்துணர்ச்சி ஊட்டக் கூடிய சீரிய கவிகளைப் பாடும் பணியில் பயன்படுத்தச் செய்வித்தது கண்ணபிரானது திருவருளேயன்றோ!

"நித்தச் சோறினுக்கு ஏவல் செய்ய வந்த" தனக்கு, கண்ண மன்னன் "நிகரிலாப் பெருஞ் செல்வம் உதவி"யதாகப் புகழ்கிறார் நமது பாரதியார். "இன்னருள் வடிவினனாகிய இறைவனே நீ கருணை கூர்ந்து எனக்கு அளித்தருளிய கவிதைப்பற்றுக்கு பசி பிணி முதலியவற்றால் எத்தகைய இடையூறும் நேராவாறு காத்தருள வேண்டும்"—என்ற பாரதியாரின் முறையீட்டைக் கேட்டு, "மகனே! உன்னைப் பற்றிய கவலை உனக்கேன்? உனது உள்ள உணர்ச்சியை நான் நன்கு உணர்வேன். உன்னிடத்தில் உண்மையன்பின்றி—கேவலம் வயிற்றுப் பிழைப்புக்காக பற்பல அற்பர்களையும் புகழ்ந்து பாடித் திரிந்து கொண்டிருக்கும் புலவர்களின் கூட்டத்தில் நீ சேர்ந்தவனன்று என்பதை நான் நன்கு அறிவேன். ஆதலின், அவர்களைப்போல் வீணில் அலைந்து வருந்தும்படி உன்னை விட்டு விடமாட்டேன். உனது மனத்தின் உணர்ச்சிகளையும் இன்பக் கவிதைகளையும் நினைக்க நினைக்க என் மனத்தில் நிகரற்ற மகிழ்ச்சி பொங்குகின்றது. மேன்மேலும் பெருகிக் கொண்டே யிருக்கும் அறிவுச் செல்வத்தையும், உள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சிகளை அற்புதச் சொற்சித்திரங்களாக அமைக்கக் கூடிய புலமைச் செல்வத்தையும், என்றும்

குன்றாத தனிப்பெரும் புகழ்ச் செல்வத்தையும் உனக்கு உதவினேன். நீ சோற்றுத் தொண்டனன்று; தேசத் தொண்டனும் செந்தமிழ்த் தொண்டனும் கவிதைத் தொண்டனும் சமயத் தொண்டனும் நீயே ஆவாய்'"—என்று கண்ண மன்னன் பாரதியாரின் திருவுள்ளத்திற்கு அறிவுறுத்தினன் போலும்!

"கல்வி கரையில; கற்பவர் நாள் சில; மெல்ல நினைக்கிற் பிணி பல"—என்பது ஆன்றோர் அருள்மொழி. கலைப்பித்து மிகுந்த கவிஞர்களுக்கு எவ்வளவு கல்வி கற்றாலும், 'மேன்மேலும் கற்கவேண்டும்'—என்ற ஆசைமட்டும் என்றும் நீங்குவதில்லை. அவ்வாறே, எல்லா வித்தைகளையும் கற்றுணர்ந்து களிக்கப் போதிய ஓய்வும் ஆற்றலும் தனக்கு வாய்க்கவில்லையே என்று பாரதியார் ஏங்கி நின்றபோது, அவரது நெஞ்சமாகிய சிங்காசனத்தில் வீற்றிருந்த கண்ணபிரான்—'எனது சிந்தைக்கினிய அன்பனே! எல்லாக் கலைகளையும் கற்று களிக்கும் பேறு வாய்க்கவில்லையே எனும் ஏக்கம் உனக்கு வேண்டுவதில்லை. எல்லாக் கலைகளுக்கும் மூலமாகிய வேதங்களின் அரிய நுட்பங்களை யெல்லாம் நானே உனக்கு நன்கு விளங்கிடச் செய்வேன். உனக்கு நான் அளிக்கும் கலையறிவுச் செல்வமும் கவிதா—சக்தியும், உனக்கே யன்றி இச் செந்தமிழ் நாட்டினர் எல்லோருக்கும் பெரும் பயனளிக்கக் கூடியனவாக இருப்பதை நான் நன்கு உணர்வேன். ஆதலின், உன்னைப் பற்றிய கவலை உனக்குச் சிறிதும் வேண்டுவதில்லை. என்றென்றும் என் சிந்தைக்கினிய கருவியைப் போலிருந்து எப்பயனையும் எதிர்பாராமல் பணி செய்து கொண்டிருக்கக் கடவாய்!"—என்று உணர்த்தியருளினர் போலும்!

அவ்வாறு மெய்யன்பர்களுக்கு என்றுங் குன்றாத இன்பத்தை அளித்தருள்வதில் ஆர்வம் மிகுந்து நிற்கும் கண்ணபிரானது திருவருளின் பெருமையை என்னென்று புகழ்வது? இவ்வுலகில் வாழ்ந்திருந்த எண்ணிறந்த மெய்யன்பர்கள் பன்னெடுங் காலமாகச் செய்த பெருந்தவப் பயனாகத் தீமையை ஒழித்து அறத்தை நிலைநிறுத்த அவதரித் தருளிய கண்ண மன்னனின் கருணையை எவ்வண்ணம் போற்றுவது? இன்னருளையே தன்னுருவாகக் கொண்ட அண்ணலாகிய கண்ணபிரானின் கருணை மழையை எதிர்பார்த்து நிற்கும் மெய்யன்பர்களாகிய பயிர்களை, அப்பெருமான் உலர்ந்து மடிந்து விடும்படி விட்டுவிடுவானோ? கண்ண மன்னனின் இன்னருளையே நாடி நிற்கும் நமது நாடு கூடிய விரைவில் மாசு நீங்கித் தேசு மிகுந்து மாநிலம் போற்றச் சிறந்து விளங்கு மென்பதில், ஐயமும் உண்டோ? ஆதலின், செந்தமிழ் நாட்டுச் செல்வர்களே! நாமெல்லோரும் இவ்வுலகிலுள்ள எல்லா அரசர்களுக்கும் தனிப்பெருந் தலைமை பூண்ட அரசர் குலத் தெய்வமாகிய கண்ண மன்னனின் இன்னருளையே தினந்தோறும் சிந்தித்து சிந்தித்து சிந்தை மகிழ்ந்து, கவியரசராகிய பாரதியாரைப் பின்பற்றிப் பின்வருமாறு குதூகலத்துடன் வாழ்த்து பாடி மகிழ்வோமாக:—

"கண்ணன் எம்பெருமான் அருள் வாழ்கவே!
கலி அழிந்து புவித் தலம் வாழ்கவே!
அண்ணல் இன்னருள் நாடிய நாடுதான்
அவலம் நீங்கிப் புகழில் உயர்கவே!"

# "மணிமேகலை" ஆராய்ச்சி

R. V. இராமஸ்வாமி B. A., B. L. வக்கீல், சேலம்.

(Rights Reserved.)

## பழந்தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள்.

### அரசரின் பணியாளர்.

தமிழரசரின் காவலாளர் நகரெங்கணு மிருந்து வந்தனர். அவர்கள் இராக்காலங்களில் நாட்டைக் காவல் புரிந்து வருவர். புறநானூறும், யாமங் கொள்பவரின் செயலைக் கூறுதல் காண்க. (செ. 37.) "உலக மன்னவ ருழையோ ராங்குளர்" (3. 46) என வனத்திலும்,

"கோமன் கோயிற் குறுநீர்க் கன்னலின்
யாமங் கொள்பவ ரேத்தொலி யரவமும்"

என நகரெங்கும் இரவு நேரத்தில் காவல் புரியும் நாழிகைக் கணக்கரிருந்ததாகக் கூறுமிடத்தும்,

"தண்டு மண்டையும் பிடித்துக் காவல
ருண்டுகளர் படுக்கு முறைபுட் குடிலை." (6: 62-3)

என மயானக் காவற்காரர்கள் உண்பதற்கும் உறங்குவதற்கும் குடிசைகளிருந்தன வென வந்துள்ள இடத்தும்; அரசரின் பணியாளரின் செய்தி கூறப்பட்டுள்ளன.

அரசருக்கு அடிசில் செய்திட மடைத் தொழிலாளர் இருந்தனர். (21.) அமைச்சரு ளொருவனாகிய சோழிகவேணதியை நோக்கி, அரசன் மாவண்கிள்ளி "இறந்தவனை ஈமத் தேற்றிக் கணிகை மகளையுங் காவல் செய்க" என்று ஆணையிட, அவ்வாறே செய்வானாயினன். (22.) பீலிவளை யென்பாள் பிறந்த அந்நாளில் 'இரவிகுலத் தொருவனால் இவன் கருவுற்று வருவன்" என எதிர்காலச் செயல்களை முன்னதாகக் கூறியவாறு, சோதிடம் தெரிவித்திடும் திறமை வாய்ந்த கணியுமிருந்தனர். அவர்கள், அரசனுக்கு வருவன உரைத்தும், நன்னிமித்தங்கள் கூறியும் வருவர். கஞ்சுகனென்ற சட்டையிட்ட பிரதானி புண்ணிய ராசனிடம்தான் காவிரிப்பூம் பட்டினம் சென்றுவந்த செய்தி மொழிந்திட்டனன். (25:11) பகைவர்களின் ஒற்றனென்று சங்கமனை ஆராயாது தனது பணியாளன் பரதனது மொழிகேட்டுக் கொன்றனன். ஒற்றர்கள் தமது நகரிலேனும், அன்றிப் பகைவரின் நாடுகளிலேனும் சென்று தம்மரசனைக் குறித்தும் அவனது ஆட்சியைப் பற்றியும் நிகழும் மொழிகளைப் பிறரறியாவா றிருந்து கேட்டுவந்து நமது அரசனிடம் கூறுவர். (26.)

தன்னுயிர்க் கிரங்காது பிறவுயிரோம்பி நீதியா யிருத்தலே உத்தம மன்னனின் இலக்கண மாகலின், அது உணர்ந்த தமிழரசர்கள், உயர்ந்தோ ராயினும் தாழ்ந்தோராயினும் குற்றம் செய்தோ ரெவராகிலும் ஒரு நிக

ராகவே தண்டித்து வந்தனர். அரசர் ஒரு பக்கமாகச் சார்ந்திரார். (புறம். 6.) மாதவருடைய நோன்பும், மாதர்களின் கற்பும், அரசன் செங்கோலினனாகா விடத்துச் சீர் குலைந்து விடுமென்ற மேலான எண்ணங் கொண்டிருந்தோ ராகலின், அவர்கள் பிழைசெய்யும் கொடியோரை அவ்வப்போது அவர் தமது செயலுக் கேற்றவாறு தண்டனையுட் படுத்துவர். இவ்விரு தருமங்களும் சிதைந்த விடத்து, "நன்னாடெல்லாம் அலங்கோல முற்று அழிந்திடு மென்பது அவரது நம்பிக்கை, (22: 28: 188-91.) இவற்றால் மாதவத்தையும், சிறந்த கற்பையும் போற்றி நின்ற அரசர்கள் தமது குடிகளின் கொள்கைகளினின்றும் பிரிந்து தாம் வேறு அவர் வேறு எனக் கருதி யிராது, அவர் தமோடும் ஒத்து உழைத்து நாட்டின் நலப்பாடு கருதினரென்பது விளங்கும். அரசியலோடு தெய்வ வழிபாடு, மக்களின் ஒழுக்க முறையாதிய பிறவும் அரசர்களே கவனித்து வந்தனரென்பதும் போதரும்.

தம்மாலும், தமது பரிசனத்தாலும், பகைவராலும் நாட்டினருக்குத் துன்பம் எவ்வாற்றாலும் நிகழாவாறு காத்து வருவர். நன்னெறியை நிலைநாட்டி, மேலான தருமங்கள் சீர்குலையா திருக்கச் செய்ய அரசர்கள் பிழைத்தோரைக் கொலைபுரியவும் பின்வாங்கார். மகனைத் தேரடியிலிட்ட மன்னனது வழித்தோன்றியவ ராகலின், கந்தனது, கணிகை மகனாகிய ககந்தன், கற்புடைய நங்கையர்பின் போகிய தனது மைந்தரிருவரையும், மக்களென்றும் பாராது தனது கைவாளுக்கு இரையாக்கிக் கணிகை மகனாகியும் தனது தந்தையின் குலப்பெருமையை விளக்கிக் காட்டினன். கிள்ளிவளவனும், தவமாதின் பின்னேகிய தனயன், வித்தியாதரன் வாளால் வெட்டப்பட்டது கேட்டு வருத்தஞ் சற்றுங் கொள்ளாது, "நான் செய்யவேண்டிய தண்டனையே வித்தியாதரன் அளித்திட்டான்" என்று பாராட்டிக் கூறுவானாயினன். தமிழ்ப் புலவர் மன்னனா ரென்பார் அகம். 256-ல் கள்ளூரில் இளமக ளொருத்தியின் கற்பு என்னும் அணிகலனுக்கு நமனாக இருந்த ஒருவனை நீற்றறையி லடைத்துப் பாடு பலவும் படுத்திய விவரம் கூறுதல் காண்க. இங்ஙனமாக தூயவழியி லாண்ட அரசர்கள் தமிழ் நாட்டி லிருந்தனர்.

தருமமே யாவற்றிலும் சிறந்த தாகலின், உயர்ந்த அதனைக் கைப்பற்றி நாடாளுவதே அரசர்களுக்குரிய வழியாகுமென, மனுஸ்மிருதியும் கூறுதல் நோக்குக. (7: 28). படைக் கலங்களாலும், காற்படையாலும், கொடையாலும், பிறவற்றாலும் அரசர் தமிழ்நாட்டைக் காத்தல் மரபென்றும், அங்ஙனம் காத்த உயிர்க்கு ஏதஞ் செய்யும் மக்களையும், விலங்கையும், பகைத் திறத்தையும், அறஞ்செய்யா அரசரையாயினும் விதிவழியாற் தண்டித்தலும் நெறியாமென்றும், தொல் காப்பியத்து வாகைத் திணையில் "ஐவகை மரபின் அரசர் பக்கம்" (20) என்ற அடிக்கு உரையாளர் விரித்துப் பொருள் கூறுவதும்; மனு அரசர்கள், பதினெட்டு விதங்களில் குற்றம் செய்தாரை விசாரித்து தண்டிக்கும் விதம் கூறுதலும் காண்க. (8. 2.7)

நெறியல்லா நெறிமேல் செல்லுவோரைத் தண்டித்து வந்த விதங்களில் சிறையி லடைத்தலு மொன்றாகும். மன்னுயிருக்குத் தீங்கு செய்த புல்லரை, எழுதிறங்களில் தண்டிப்பது அரசரது கடமை யாகுமென்பது, சதுக்கப் பூதத்தின் வாயிலாகக் கூறப்பட்டுள்ளது. (22:72).



"அதிர்கழல் வேந்த னடிபிழைத்தாரை
யொறுக்குந் தண்டத் துறுசிறைக்கோட்டம்."

(19: 42-43). என்பதால் நாட்டினருக் கன்றி அரசனுக்குத் தீமை செய்தோரை மட்டில் தண்டித்து வந்தனரெனக் கொள்ளாது, அவ்வரசனின் செங்கோலினடி யுள்ளவர்களுக்குத் தீங்கு செய்தவர்களை அவ்வரசன் தண்டித்து வந்தனனெனக் கொள்ளவேண்டி யுள்ளது, அக்காலத்தினர் தமது அரசனிடம் ஒப்பற்ற பணிவும், மிகுந்த நேசமும் கொண்டிருந்தன ராகலின், குடிகளினின்றும் கோலோனை வேறாக்கிக் கூறப்படாராகி யிருந்தனர். அங்ஙனமே, மன்னர்களும் தம்முயிரும் மன்னுயிரு மொன்றெனக் கருதிய உத்தமர்களா யிருந்தமைபற்றி, இங்கு வீரக் கழலணிந்த வெற்றி வேந்தனது அடிபற்றி நிற்கும் குடிகளைக் குறித்ததேயாகும். அரசனோடன்றி ஏனையோரும் சாமானியமாகக் குற்றஞ் செய்தோர்களைத் தண்டித்து நல்லுபதேசம் செய்து அனுப்புதல் வழக்க மென்பது, ஆவைத் திருடிய கள்வனென்று ஆபுத்திரனை அடித்து ஓட்டிய வரலாற்றால் அறியலாம். (13.) பௌத்தர் கூறும் பஞ்ச சீலத்தில் களவை யொழித்திடுதலு மொன்றாதல் காண்க.

## சிறை வாசம்.

மணிமேகலை, சிறைச்சாலையுட் புகுந்து, ஆங்கு பசியுறு மாருயிர் மாக்களை கண்டு, வெய்துயிர்த்துப் புலம்பி, வாங்குநர் கையகம் வருந்தத் தன்னிடமிருந்த வற்றாத பாத்திரத்தின் உதவியால், அவர்களனைவரும் வெறுப்புறும் வரையில் விருப்பமுடன் உணவளித்து உண்பித்தனளெனச் சிறைக் கோட்டத்தை அறக்கோட்ட மாக்கிய காதையிலும் (19); பிறிதோரிடத்து "நிரயக் கொடுஞ்சிறை" யென்றும் (20:2) கூறப்பட்டுள்ளதாலும் சிறையிலுள்ளோருக்கு அன்னமிடாது வருத்திப் பசிப்பிணி பாதிக்குமாறு அக்காலத்தில் செய்தனரோ வென்று சந்தேகித்தற் கிடமுள்ளது. குற்றவாளிகள் என்ற காரணத்தால், மனமகிழ்ந் துண்ணுமாறு, வயிறார உணவளிக்கப்படாது, அரைவயிறுக்கு அன்னமிட்டு, அதனால் அவர்களைத் தமது குற்ற முணரச் செய்து வாட்டியிருக்கலாம். அன்றி, உண்மை தோன்றத் தாம் செய்த தவறுகள் அவர்களின் மனத்தை வாட்டித் "தன் வினை தன்னைச் சுடுமாறு" செய்தற் கெனவும், தீமை செய்தலாலுளவாகும் விபத்துக்கள் விளங்குதற்கும் அன்னமே அக்காலத்தில் சிறைவாசகர்களுக்கு அளிக்கப்படாம லிருப்பினு மிருக்கலாம். ஆயின், பண்டைத் தமிழ்நாட்டுச் சரித்திரங்களை நோக்குமிடத்து, தமிழ் வேந்தர்கள் கொடூரமான வழிகளையும், உசித மற்றதுறைகளையும் நாடியில்லாது, நன்னெறி நின்று நாட்டைப் பரிபாலித்து வந்தன ரென்பது விளங்கிடும். ஆகலின், சாத்தனார் தீயோர்கள் நிறைந்த இடமாகலின் இழிவு தோன்றுதற் கெனச் சிறைச்சாலையை இங்ஙனமாகக் கூறினரென்று கொண்டிடுதலே, அக்கால உண்மை வழியினைக் கண்டறிந்ததாகும்.

மற்றும் சிறைச்சாலையை யடைந்த மணிமேகலை ஆங்குள்ள பசிப்பிணியாளருக்குப் புசித்திட அன்ன மளித்ததாகக் கூறப்பட்டுள்ளது. காவலாள னனுமதியின்றிச் சிறையுட் சென்றதுமன்றிச் சிறைவாசிகளுக்கு அன்னமு மளித்தனளென்பது இதனால் விளங்குகின்றது. அதுகண்டு தடையொன்றுஞ் செய்திடாத சிறைக்காப்பாளர், அவளது அரிய செயலைக்கண்டு அதிசயித்து, விரைந்து சென்று வேந்தனிடத்தில், பிக்குணிக் கோலங்கொண்ட மாதினது

கையகத் துள்ள, தெய்வ பாத்திரத்தை வியந்து புகழ்ந்து கூற லுற்றனர். சீற்றஞ் சற்றுமெய்தாத அரசனும் அதுகேட்டு, மங்கையைத் தன்பா லணுகச் செய்து, அவளது நற்பாத்திரத்தின் மகிமையை அறிந்து, "நான் செயற்பாலன யாதுள" தென்று வினவி, அறத்தைப் போற்றுமவர் கேட்டபடியே, சிறைக்கோட்டத்தை அறக்கோட்ட மாக்கினன். இவை யாவும், நோக்குமிடத்து, அக்காலத்தில், அயலினர் சிறைச்சாலையி னகத்துச் செல்லுதலும் வெளியேகுதலும் சாமானியமாக நிகழ்ந்திடும் செயலி லொன்றாகக் கருதப்பட்டதாக அனுமானிக்க வேண்டியுள்ளது. பிறர் சென்று வருதற்குக் காவலரால் நிபந்தனைகளொன்றும் விதிக்கப்பட்டிலது போலும்!

இவ்வணமாகத் தடை யொன்று மின்றிச் சிறையுட் சென்று கண்டு சொல்லுதல், சிறையிற் றாம் கண்டனவற்றை எண்ணுந்தோறும் அங்கு வந்து செல்லுவோரின் மனத்தில் இடையறாத பயமொன்றை ஏற்படுத்துமாகலின், தாம் குற்றமொன்றுஞ் செய்யாது விலகுவரென்ற நோக்குடனே இவ்வடிக்கு இருத்தலுங் கூடும். அன்றி, மாதவத்தினராகிய மணிமேகலையின், உயர்வைக் கருதிச் சிறைக்காவலர் கடிந்துரை செய்யாது, அரசனிடம் தெரிவித்தனரோ? யாதாயினும், தெய்வத்தன்மை கொண்ட பாத்திரத்தில், உணவருந்திய சிறைவாசிகள், அப்புண்ணிய விசேடத்தால் சுகவாசிகளாகி வெளிப் போந்தனர். நல்ல வழிகளையே போற்றிய அரசனும், எதிர்மொழி கூறாது, மணிமேகலையின் வேண்டுகோட்படியே தனது சிறையை அறச்சாலை யாக்கினன்.

## போர்த்திறன்

நிலவேட்கை மிக்கேனும், பகைமையின் காரணத்தாலேனும், தமிழ் அரசர்கள் ஒருவரோடொருவர், அமர்க்களத்தி லெதிர்த்துச் சமர்புரியுங் காலத்து, அவ்வச்சமயங்களுக்கு ஏற்றவாறு, அக்காலத்திய வழக்கப்படி, உரிய மாலைகளை அணிந்து கொள்வரென்பது தமிழ் இலக்கிய நூற்கள் கூறுதலைப் போலவே, 'மணிமேகலை'யிலும் கூறப்பட்டுள்ளன. பகைவர் நாட்டைக் கொள்ள நினைந்து, போர் செய்தற்கு அவர்மேல் செல்வோர், அதற்கறிகுறியாக வஞ்சிமாலையைச் சூடிச் செல்வர். (19: 120; 26: 78) இதன் விவரத்தைத் தொல்காப்பியத்திலும் (புறத்: 7); புறப்பொருள் வெண்பா மாலையிலும் (வஞ்சிப்படலம் 1); அவற்றின் உரைகளிலும் காண்க. பகைவரை வென்றே ரென்பதற் கறிகுறியாக, வாகை மாலையை அணிந்து கொள்வர். புறமதிலை வளைப்போரும் அதனைக் காப்போருமாகிய இரு திறத்தினரும், உழிஞை மாலையைச் சூட்டிக்கொள்வ' ரென்பர். (28: 2-4) அரசர்கள், அம்மலர்களை யென்று மழியாது நீடித்து இருத்தற்கெனப் பொன்னாற் செய்து கொள்ளுதலியல்பாதலின், 'செய்ய பொன்வாகையு" மென்றனர். (28)

தமிழ்வேந்தர்கள் யுத்த மியற்றும் சமயங்களில் சூடும் மாலைகளும், அவை சூடும் சமயமும்,

"வெட்சிநிரை கவர்தல் மீட்டல் கரந்தையாம்
வட்கார் மேற் செல்லுவது வாஞ்சியாம்—உட்கா
தெதிரூன்றல் காஞ்சி எயில்காத்தல் நொச்சி
அது வளைத்தலாகும் உழிஞை யதிரப்



பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவறத்து வாகையாம்."

(பிங்கலம்) என்ற செய்யுளால் நன்கு விளங்கும். சிதம்பரப் பாட்டியலும்,

"மகிழ்நிரை கொள்வது வெட்சி கரந்தை மீட்டல்
மாற்றூர்பார் செலல்வஞ்சி யூன்றல் காஞ்சி
பகர் மதிலைக் காக்குமது நொச்சி சுற்றுப்
படைவளைத்த லுழிஞை பொரல் தும்பைவென்று
புகழ் படைத்தல் வாகை..."

எனக் கூறுதல் நோக்குக. (செய். 38) பரந்து கிடக்கும் அவரது போர்ச் செய்திகளைத் தொல்காப்பியம். புறத்திணையியலில் கூறப்பட்டுள்ளன காண்க.

கூரிய கொடியவேலும், நெடியவாளுமே, அக்காலத்தில் அமர்க்களத்தில் பயன்படுத்திய முக்கியமான கருவிகளென்பதை இலக்கிய நூற்களால் அறியலாம். இரவெல்லாம் தம்மிடத்து முரணிய பகைவர்களை வெல்லுதற்கு வேண்டிய வழிகளை அரசர்கள் ஆராய்வதில் கழித்திடுதலையும் (31); மதிற் கதவுகளை யானைகளைக்கொண்டு பிளவுபடுத்தலையும் (52); பகைவரது புலத்தை எரித்தலையும், நாட்டை அழித்தலையும் (15, 19, 22, 25, 26 அவரது நாட்டைக் கொள்ளையிடலையும் (81); அவர்களிடம் பெற்றபொருள் யாவற்றையும், தம் கைநோக்கி நிற்கும் இரவலருக்கு அரசர்கள் ஈந்திடும் செயலையும் (48); பகைவருக்குப் பயந்துள்ள சிற்றரசர்கள், பெரிய அரசனொருவனிடம் அபயமாகச் சென்றடைந்து நட்புப்பூண்டு ஒழுகும் பழக்கத்தினையும் (50); பழம் தமிழ்நூலாகிய பதிற்றுப்பத்து கூறுகின்றது. 'மணிமேகலை'யிலும் ஓரோ விடத்து இவற்றுள் சில குறிக்கப்படுதல் காண்க.

## பட்டப் பெயர்கள்

அக்காலத்தில் அரசர்கள், தமது ஆட்சிக் குட்பட்டவர்களுக்கு, அவர்களின் உயர்ந்த பதவியைக் கருதியேனும்; அன்றி அவர்கள் பொதுஜன நன்மைக்காகச் செய்திட்ட கைங்கரியங்களின் காரணத்தாலேனும், பட்டப் பெயர்கள் பல அளித்து வந்தனர். அப் பட்டங்களுக்கு அறிகுறியாக மோதிரம், பொற்பூ முதலிய ஏதாகிலுமொரு அடையாளமுங் கொண்டிருந்தனர். 'மணிமேகலையில்' அரசனால் 'எட்டிப் பட்டம்' கொடுக்கப்பட்ட தென்பதும், அதற்கு அடையாளமாகப் பூவொன்று மளிக்கப்பட்ட தென்பதும்,

"..............சீணில வேந்தனி
னெட்டிப்பூப் பெற்றிரு முப்பதிற் றியாண்டு."

(22: 113-4) என்ற அடிகளில் விளங்குகின்றன.

அரசர்கள், அமைச்சர் முதலியோருக்குக் காவிதி யென்றும், சேனைத் தலைவர்களுக்கு ஏனாதி யென்றும், வணிகருக்கு எட்டி யென்றும், இவ்வாறான பட்டங்கள் அளித்து வருவது வழக்காக இருந்தது. இதனை நச்சினார்க்கினியர் (தொ. எழு. 12), 'எட்டி காவிதி யென்பான் தேய வழக்காகிய சிறப்புப் பெயர்' என்பர். மற்றும் "சோழிக வேனாதி தன்முகம் முகம் நோக்கி"

(22: 205) என்ற விடத்து வந்துள்ள 'ஏனாதி' யென்பது வேந்தனால் சேனைத் தலைவனுக்குக் கொடுக்கப்பட்ட பெயராகும். இதனை "மாராயம் பெற்ற நெடுமொழியானும்" (தொ. புறம் 8) என்பதற்கு ஆசிரியர், நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையாலும், அதில்,

"போர்க்கடலாற்றும் புரவித் தேர்ப்பல் படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றோ போர்க்கெல்லாந்
தானாதியாகிய தார்வேந்தன் மோதிரஞ்சே
ரேனாதிப்பட்டத் திவன்."

என்று அவர் காட்டியுள்ள பழம் பாட்டாலு முணரலாம்.

"எட்டி குமரனி னிதினியக்கும்" என்றும், "எட்டி காவிதிப்பட்டந் தாங்கி," என்றும் பெருங் கதையிலும்; "எட்டி சாயலனிருந் தோன்றனாது" என்று சிலப்பதிகாரத்திலும் வருகின்றன. உரையாசிரியர், நச்சினார்க்கினியர், "ஏனாதி மோதிரஞ் செறித்த சேனாபதி" எனச் சீவகசிந்தாமணி, மண்மகளி லம்பகத்தில், "செம்பொனீண் முடி" என்ற செய்யுளில், "ஆழி தொட்டான்" என்ற அடிக்கு உரை கூறு மிடத்தும் குறித்திடுவர். "காவிதி" யென்பது, பாண்டி நாட்டு வேளாளரில் உழுவித் துண்போர் அரசரால் பெறுவதொரு பட்டமெனத் தெரிய வருகிறது. நற்றிணையில் ஆவூர்க்காவிதிகள் சாதேவனா ரென்றும், இளம்புல்லூர்க் காவிதி (89); காவிதி கீரங்கண்ணனார் (218); காவிதி பெருங்கொற்றனார் (364) என்றும் புலவர்களின் பெயர்கள் வருவன நோக்குக.








கணவன் :—"நாளைக்கு முதல் இனி தினம் காய் கறி தான் சாப்பிடுவேன்."

மனைவி:—"ஏன், டாக்டர் உத்தரவா?"

கணவன்:—"இல்லை. அந்தக் கசாப்புக் கடைக் காரனுக்கு நான் பாக்கி கொடுக்க வேண்டிய திருந்தது. அவன் இன்று என்னை 'உமக்குச் சொரணை யில்லையா?' என்று கேட்டு விட்டான்."

***



மனைவி :—"உங்களிடம் நகை செய்யுமாறு எத்தனை நாளைக்குச் சொல்வது. கொஞ்சமேனும் கவனிக்கவே மாட்டேன் என்கிறீர்களே."

கணவன்:—"விகடப் பத்திரிகைகளோ பெருத்துப் போய் விட்டன. அவைகளை வாசித்து வாசித்து தினம் நான் நகை செய்து கொண்டிருப்பதை நீ கவனிக்க வில்லை. போலும்"



பையன்:— "அப்பா, நான் பெரியவனாகும்போது தென் துருவத்தைப் போய் சுற்றிப் பார்த்து வருவேன். இப்போ ஒரு அணா கொடு அப்பா."

தகப்பனார்:—"அது சரி தாண்டா. அதற்கு இப்போ ஒரு அணா எதற்கு?"

பையன்:—"ஐஸ் கிரீம் வாங்கிச் சாப்பிட்டுக் குளிரைப் பழக்கம் பண்ணிக் கொள்ள."

***

செட்டியார்:—(தன் வேலைக்காரனைப் பார்த்து) என்னடா தடிக் கழுதை மாதிரி நிற்கிறாய்? போய் வீட்டுக்கு தண்ணீர் கொண்டு வந்து நிரப்பு.

வேலைக்காரன் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து வீடு முழுவதும் ஊற்றிக்கொண்டிருந்தான்.

செட்டியார்:—கோபங் கொண்டு வேலைக்காரனைப் பார்த்து என்னடா வீடு முழுவதும் தண்ணீர் ஊற்றுகின்றாய்.

வேலைக்காரன்:—எசமானே நீங்கதானே வீட்டுக்கு தண்ணீர் கொண்டு வந்து நிரப்பச் சொன்னீர்கள்.

***

தகப்பனார் :—"அடே! மணி என்ன வென்று பார்."

பையன்:— "அப்பா! எனக்கு மணி பார்க்கத் தெரியாது."

தகப்பனார்:— "அப்படியானால் பெரிய முள்ளும் சிறிய முள்ளும் எந்த இடத்தில் இருக்கிறதென்றாவது பார்த்து வா."

பையன்:— (போய்ப் பார்த்து விட்டு) "அப்பா இரண்டு முள்ளும் கடிகாரத்தினுள்ளே தானிருக்கிறது."





ஒருவர் தம்முடைய மகன் வீட்டிற்கு நேரம் கழித்து வருவதைக் குறித்துப் பல முறை கண்டித்தார். அதை அவன் சட்டை செய்யவில்லை. ஒரு நாள் வழக்கம்போல் நேரங்கழித்து வீட்டிற்கு வந்தான்.

தந்தை:—(கோபத்துடன்) நான் பல முறை சொல்லியும் நீ இவ்வாறு நேரங் கழித்து வந்தால் என்னடா அர்த்தம்?

உடனே மகன் புத்தகங்கள் வைத்திருக்கும் அலமாரியிலிருந்து ஒரு அகராதியை எடுத்துத் தந்தையின் முன் வைத்தான்.

தந்தை:—அகராதி எதற்காக?

மகன்:—அர்த்தம் கேட்டீர்களே அதைப் பார்ப்பதற்காக.

***



பெண்:—"நான் பார்த்த மட்டில் ஸ்தூலித்த தேகமுள்ள ஆடவர் மிக்க சாந்த குணமுள்ளவர்களாகவே யிருக்கிறார்கள் அது ஏன்?"

பெரியவர்:— "அது வாஸ்தவமே. எங்களால் எவரையும் எதிர்த்து அடிக்கவு முடியாது, ஓடிப் போகவு முடியாது."

***

நீதிபதி:—அய்யா! இந்த பத்திரம் பாலூரில் எழுதப் பட்டு அரியலூரில் படிக்கப் பட்டுப் பார்க்கப் பட்டது என்று சொல்லுகிறீர். கடையில் அது எந்த இடத்தில் கையெழுத்துச்செய்யப் பட்டது?

பிரதிவாதி:—பத்திரத்தின் அடியில் தானுங்க.

***

ஒரு கனவான் மணி பார்க்கும் பொருட்டு கடிகாரமுள்ள ஓர் கடை முன் நின்றார்.

வியாபாரி (சற்று செவிடு என்ன சார் வேண்டும்?

கனவான்:—ஒன்று மில்லை.

வியாபாரி:—அதுவா? எவ்வளவு சார் வேணும். நயமாய்க் கொடுக்கிறேன்.

***

சாஸ்திரி:—எங்கே ஓய் அவசரமாய் போகிறீர்?

மேஸ்திரி:—(ஞாபக மறதியாய்) கழுதையை தரிசிக்க.

சாஸ்திரி:—இங்கே எங்கே ஐயா கழுதை அகப்படப் போகிறது!

மேஸ்திரி:—பரவாயில்லை. உம்மைத் தான் தரிசித்து விட்டேனே.




**உருளைக் கிழங்குச் செடியில் தக்காளிக்காய்:—**

தாவர நூல் நிபுண ரொருவர், தமது நுண்ணிய ஆராய்ச்சியின் பயனாக, உருளைக் கிழங்குச் செடியில் தக்காளிக்காய் காய்க்கும்படி செய்திருக்கிறாராம்.

* * * *

**பேசும் கடிகாரம்:—**

அமெரிக்காவில் 70—வயதுள்ள மார்டின்ஷியார் 10 வருஷங்களாகப் பெரிய ஆராய்ச்சி செய்து, 10,000 பவுன்கள் செலவு செய்து உலகிலேயே மிகவும் அற்புதம் வாய்ந்த கடிகாரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். அது மணி யடிக்கும் போதெல்லாம் ஊது குழல் ஊதிப் பாடிப் பேசி செய்திகளையும் கூறுகிறதாம். அதோடு பல முக்கிய நகரங்களின் கால நேரத்தையுஞ் சொல்லுகிறது.

* * * *

**பொய் கண்டு பிடிக்க ஊசி:—**

சிகாகோவைச் சேர்ந்த லியோனார்டு கீலர் என்பவர் பொய்யைக் கண்டு பிடிக்க நூதன முறை யொன்றை யறிந்திருக்கிறார். ஒரு விதமான திரவப் பொருளை உடலில் ஊசிகள் மூலம் ஏற்றினால், மனிதனைப் பொய்யை மறைத்துக் கூற முடியாது, உண்மையை வெளிப்படுத்தும்படி செய்கிறதாம்.

* * * *

**அடைகாக்கும் இயந்திரம்:—**

முட்டையிடும் பெட்டைக் கோழி அடைகாத்து உஷ்ணம் உண்டாக்குவது போல, செயற்கையாக முட்டையின் மேல் பாகத்தை உஷ்ணம் உண்டாகுமாறு செய்து பின்னர் குளிர்ச்சி யடையவைத்து குஞ்சி பொரிக்கும்படி செய்ய ஒரு புதிய இயந்திரத்தைச் சோவியத் ஆராய்ச்சியாளரான நிகோலஸ் மெஷ் செரியா கோவ் என்பவர் கண்டு பிடித்திருக்கிறார். இம் முறையினால் வெகு விரைவில் முட்டையிலிருந்து குஞ்சை வெளிப் படுத்த இயலுகிறது. இம் முறையின் படி 100-க்கு 75 முதல் 78 முட்டைகள் வரை வெற்றியாக அடைகாக்கப் படுகிறது.

* * * *

**பல பாஷைகளைத் தயாரிக்கும் பேசும் படங்கள்:—**

ஒரே சமயத்தில் ஐந்து பாஷைகளில் பேசும் படங்களைத் தயாரிக்கும் புதிய கருவி யொன்றைப் புடாபெஸ்டைச் சேர்ந்த நிபுண ரொருவர் கண்டு பிடித்திருக்கிறார். படத்தில் நடிக்கும் நடிகர் குறிப்பிட்ட ஒரு பாஷையில் பாடினாலோ பேசினாலோ அதை வேறு நான்கு பாஷைகளில் அவ் வியந்திரமானது மாற்றி யமைத்து விடுகிறது. இது எவ்வளவு சுலபமான முறை




லண்டன்மா நகரில் சிறுவர்கள் வசிப்பதற்கென நான்கு ஹோட்டல்கள் இருக்கின்றனவாம்.

***

ஒரு அவுன்ஸ் தங்கத்தை 146-சதுர மைல் பரப்புள்ள அவ்வளவு மெல்லிய தகடாக அடிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

***

அமெரிக்காவில் ஒருகோடி செவிடர்களுக்குமேல் இருக்கிறார்கள். அவர்களில் 30 லட்சம் பேர் குழந்தைகளாவர்.

***

லண்டனில் 64 ரஸ்தாக்களுக்கும், மைதானங்களுக்கும் ஆல்பர்ட் மன்னரின் பெயர் இடப்பட்டிருக்கிறது.

***

முதன் முதலாக 1615-ம் வருஷத்தில் மான்செஸ்டரில்தான் இலவச வாசகசாலை ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

***

ஜர்மனி தேசத்தில், விவாகத்துக்கு குறித்த நேரத்துக்குள் வாராது தாழ்த்து வரும் தம்பதிகளுக்கு அபராதம் விதிக்கும் சட்டமொன்று அமுலிலிருக்கிறதாம்.

***

இங்கிலாந்திலுள்ள சில கலாசாலைகளில் இடது கையால் எழுதும் பிள்ளைகளுக்காக விசேஷ சாய்வு மேஜைகளும் மைக்கூடுகளும் செய்யப்பட்டு வருகின்றனவாம்.

***

ஜர்மனியில் சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் சினிமா நடிப்புக்களைக் கற்றுக் கொடுப்பதற்கு பள்ளிக்கூடமொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம்.

***

யகாஸ்டாரிகள் என்பது மிகச் சிறிய விளக்குப் பூச்சியே யெனினும், அதிலிருந்து வெளிப்படும் ஒளியில் ஒருவர் சாதாரணமாய்ப் படிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

***

சைபீரியா என்னு மிடத்தில் வசிப்பவர்கள் குளிர்காலத்தில் சதா படுக்கையிலேயே கிடப்பார்களாம். சாப்பாட்டு நேரத்திற்கு மட்டும் அவர்கள் எழுந்திருக்கிறார்களாம்.

***

அயர்லாந்தில் 1666-ம் வருடம் வரையில் தவளைகள் என்ன வென்றே தெரியாதாம். முதன் முதலில், இங்கிலாந்திலிருந்தே அயர்லாந்துக்குத்

# ஆசிரியர் குறிப்புக்கள்

## அரிய முயற்சி

இந்தியா விவசாய நாடாக இருப்பதோடு கைத்தொழில்களுக்கு வேண்டிய சாதனங்களும் சௌகரியங்களும் படைத்த நாடாகவும் இருக்கிறது. இந்தியாவில் வேண்டிய மூலப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இரும்பு, நிலக்கரி முதலிய சாதனங்களும் தொழில் செய்வதற்குரிய ஆட்களும் இங்கே உண்டு. இவ்வளவிருந்தும் இந்நாட்டில் விவசாயமோ கைத்தொழிலோ ஓங்கி வளரவில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆண்டுதோறும் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் அந்நியநாட்டுச் சாமான்களுக்காக இந்நாட்டிலிருந்து கொள்ளை போகின்றன. இப்பொழுதுதான் சிறிது சிறிதாகச் சுதேசிய உணர்வு நாட்டில் வளர்ந்து வருகிறது. எனினும் அது ஆமை நடையில் இருப்பது வருந்தத்தக்கதாகும். இந்நிலையில் இந்தியாவில் மோட்டார் உற்பத்தி செய்வதைபபற்றி ஆலோசனை நடைபெறுவதாகப் பம்பாயிலிருந்து வெளிவந்த ஒரு செய்தியை அறிந்து மகிழ்கின்றோம். பேர்பெற்ற மைசூர் மாஜி திவான் ஸர் விசுவேசுவர ஐயா இதற்கான ஆராய்ச்சியை நடத்தி வருகிறார். அவர் பம்பாயிலுள்ள முக்கிய தொழிற்சாலைப் பிரமுகர்களோடு கலந்து பேசினார். இந்தியாவில் மோட்டார் உற்பத்தி செய்வது சாத்தியமா என்பது ஆலோசனை செய்யப்பட்டது. அமெரிக்காவின் முக்கிய கைத்தொழில் மோட்டார் உற்பத்தி. அந்நாட்டின் செழுமையான நிலைமைக்கு இதுவே சிறந்த காரணம். இந்திய மோட்டார் வண்டிகளுக்கும், லாரிகளுக்கும் அயல் நாடுகளையே எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. அமெரிக்கர்கள் ஏற்கனவே இரண்டு மோட்டார் உற்பத்திச் சாலைகளை இந்தியாவில் ஏற்படுத்தியிருக்கின்றனர். இந்தியரது முதலையும், இந்தியரது நிர்வாகத்தையும் கொண்ட மற்றொரு மோட்டார் உற்பத்திச் சாலையை ஏற்படுத்தினால் அது நன்றாக வேலை செய்யும் என்பது அறிஞர் விசுவேசுவர ஐயர் உள்ளிட்ட பிரமுகர்களின் அபிப்பிராயம். இக்கம்பெனியின் வளர்ச்சிக்கு அரசாங்கத்தார் உதவி இன்றியமையாதது என்று கருதப்படுகின்றது. சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் இக்கம்பெனிக்கு மூலதனமாய் இருக்க வேண்டுமாம். இதில் பங்குதாரர்கள் எல்லாரும் இந்தியராகவே இருப்பார்கள். கம்பெனிக்கு வேண்டிய எஃகு டாடா கம்பெனியிலிருந்து வாங்கப்படும். முதலில் சில பாகங்கள் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும். சிறிது சிறிதாகப் பாகங்களை உற்பத்தி செய்து ஐந்தாண்டுகளுக்குள் பிறநாடுகளின் உதவியை எதிர்பார்க்க வேண்டாத நிலைமையை உண்டாக்கவேண்டும் என்பது இப்போதையத் திட்டம். இந்தியருக்குப் பயிற்சி அளிக்க அயல்நாட்டு நிபுணர்கள் அழைக்கப்படுவார்கள். இவ்வளவும் இன்னும் ஆலோசனை அளவிலே தான் இருந்து வருகிறது. இந்த அரிய யோசனை வெற்றிபெற்று நடைமுறையில் வரும் நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

---



## சுகாதாரத் தொண்டு

சொல்வது எளிது; செய்வது அரிது. பேச்சுக்காலம் கழிந்து விட்டது. இப்பொழுது வேண்டியது செயல். சேரிகளின் சீர்திருத்தங்களைப்பற்றியும், கிராம சுகாதாரங்களைப்பற்றியும், ஓயாமல் பேசிக் கொண்டிருப்பதைவிடக் கூடை, முறம், துடைப்பங்களைக்கூடவே எடுத்துக்கொண்டு போய்ச் சுத்தம் செய்து காட்டவேண்டும். இதுதான் காந்தியடிகளின் வழி. ஸர்தார் வல்லபாய்படேல் தொத்து வியாதியான பிளேக் பரவியிருந்த ஒரு இடத்திற்குச் சென்று தாமே அசுத்தங்களைப் போக்கிய செய்தி ஒன்று சமீபத்தில் வெளிவந்தது இவ்வுண்மையை நன்கு விளக்கும் என்று நம்புகின்றோம். அவர் அங்கே உள்ளவர்களுக்கு எப்படியிருந்தால் அந்நோய் வராது என்பதை மனம் வாக்குக் காயங்களால் அறிவுறுத்தினார். இப்படியே சென்னை ஒய். எம். சி. ஏ. ஸ்தாபனத்தைச் சேர்ந்த தொண்டர்கள் சென்னையில் செய்துவரும் தொண்டு பெரிதும் குறிப்பிடத் தக்கதாகும். அவர்கள் சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர், ராயபுரம் முதலிய பாகங்களிலுள்ள வீடுகளுக்குப்போய் அப்பரிசுத்தமான வீடுகளைச் சுத்தம் செய்து காட்டி வருகிறார்கள். வீடுகளை எப்படிச் சுகாதாரமானவைகளாக வைத்துக் கொள்ளவேண்டும் என்னும் முறையை தாங்களே செய்து காட்டுகிறார்கள். கார்ப்பொரேஷன் சுகாதார ஆபீஸரும் சம்பந்தப்பட்ட பேட்டையைச் சேர்ந்த நகரசபை அங்கத்தினரும் அவர்களுக்குத் துணைபுரிவதால் நல்ல பலன் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஒவ்வொரு நகரிலும் கிராமத்திலும் இத்தகைய தொண்டர்கள் புறப்பட வேண்டும். முனிசிபாலிட்டிகள் உள்ள விடங்களில் தோட்டி வேலை செய்வோரும் சுகாதார இலாகாவும் நல்வழிக்கு வரலாம். நல்ல சுகாதாரமும் ஏற்படும். இதனால் நகரமக்களின் உரிமைகளையும் கடமைகளையுங்கூட நினைவூட்டலாம். குழந்தைகளைத் தெருக்களில் விட்டு ஆபாஸப்படுத்துவதைத் தடை செய்யலாம். இத்தொண்டர்கள் மார்க்கட்டுகளுக்குச் சென்று அழுகல்-பதார்த்தங்களையும் பழைய நாற்றப் புலால்களையும் ஜனங்கள் வாங்காமலிருக்குமாறு செய்யலாம். மதுவின் தீமையை எடுத்துக் காட்டிக் குடிப்பவர்கள் தொகையை குறைக்கலாம். இத்தமாதிரி விஷயங்களுக்குச் சுகாதார இலாகாவின் உதவி தேவையாக இருக்கும். ஒய். எம். சி. ஏ. ஸ்தாபனத் தொண்டர்களைப் போலவே கல்லூரி-கலாசாலை மாணவர்களும் விடுமுறைக் காலங்களில் இத்தகைய திருத்தொண்டை மேற்கொண்டால் அற்புதமான பலன் காணலாம் என்பதில் ஐயமுண்டோ?

---

## ஜீவகாருண்யத் திருநாள்

சென்ற மாதம் சென்னைக் கோகலே மண்டபத்தில் முதலாவது அகில இந்திய ஜீவகாருண்யத் திருநாள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அக்கொண்டாட்டத்திற்கு டாக்டர் ஜி. எஸ். அருண்டேல் தலைமை வகித்தார். உயிர்களைக் காத்துப் போற்றவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பல அறிஞர்கள் அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். மக்களிடையே நிலவும் சண்டை சச்சரவுகள் ஒழிந்தாலே மிருகங்களை வதை செய்யும் கொடுமைகளும் ஒழியும் என்று டாக்டர் அருண்டேல் குறிப்பிட்ட நுட்

பம் பெரிதும் கவனிக்கத்தக்கதாகும். "உலக சமாதானத்திற்காகவும், ஜீவ சம்ரக்ஷணத்திற்காகவும் நாம் எவ்வளவோ சங்கங்களைக் காணலாம். ஆனால் மனிதன் தன்னிடமுள்ள சண்டைபோடும் குணத்தை விடாவிடில் எவ்வளவு சங்கங்களிருந்தாலும் பயனில்லை. மனிதர்களுக்குள் சண்டையை ஒழித்து விட்டால்தான் அவர்கள் மிருகங்களிடம் அன்பாக இருப்பார்கள்' என்கிறார் டாக்டர் அருண்டேல். இச்சமயத்தில் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரித் தலைவர் ஸ்ரீமான் எஸ். சக்கரவர்த்தி நயினார் எடுத்துக்காட்டிய உண்மை பெரிதும் பாராட்டத் தக்கதாகும். எல்லாச் சமயங்களும் அஹிம்சையைப் போதித்தாலும் மக்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் அஹிம்சையைக் கடைப்பிடிப்பதில்லை என்று அவர் சுட்டிக்காட்டியது முற்றிலும் உண்மையே ஆகும். அன்புச் சமயங்களைப் பெருமையாகப் போற்றுவோரே உலகப் போர்களுக்கு மூலகாரணர்களாக விளங்குகின்றார்கள் என்பதை யாரே மறுக்கவல்லார்? "ராஜீயம் எப்பொழுதும் ஹிம்ஸையையே ஒட்டியது. இன்று உலகின் ராஜீயம் நெருக்கடியான நிலையை அடைந்திருக்கிறது. இதை ஆராய்ந்தால் சமூக வாழ்வின் மூலாதாரங்கள் சீர்கெட்டு மானிடவர்க்கம் தற்கொலை செய்துகொள்ளும் நிலையிலிருக்கிறது என்று விளங்கும். எங்கே பார்த்தாலும் சண்டை முழக்கம்தான். ஒரு நாடு இன்னொரு நாட்டை விழுங்கப்பார்க்கிறது. இந்தச் சமயத்தில் மகத்தான இந்திய நாடு மற்றநாடுகளுக்கு ஒரு பெரிய படிப்பினையைச் சொல்லிக்கொடுக்கவேண்டும். அந்தப் படிப்பினை அஹிம்சையேயாகும். என்கிறார் தத்துவப் பேரறிஞர் ஸ்ரீமான் சக்கரவர்த்தி நயினார். அஹிம்சையின் தத்துவங்களை நன்றாக உணர்ந்து அதை அரசியல் துறையிலும் சமூகத்துறையிலும் உபயோகித்துச் சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும் என்பது ஸ்ரீமான் சக்கரவர்த்தியாரின் அபிப்பிராயம். காந்தியடிகள் உலகத்துக்குக் காட்டியுள்ள புதுமை இதுதான் என்பதை இச்சமயத்தில் எல்லாருக்கும் நினைவூட்ட விரும்புகின்றோம். ஸ்ரீமதி ருக்குமணி அருண்டேல் ஜீவ வதைகளைத் தடுக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியபோது "நாம் நமக்கு எப்படிச் சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்கின்றோமோ அதைப்போலவே ஏனைய விலங்கு-பறவை முதலியவைகளுக்கும் சுயேச்சை கொடுக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார். இவ்வளவு பெரிய தாராள மனப்பான்மை மக்கள் சமூகத்தில் எப்பொழுது ஏற்படும்? எஸ். பி. வி. ஏ. காரியதரிசி ராவ் சாஹிப் என். சி. ரங்கசாமி ஐயங்கார் பேசுகையில் "இந்தியா அஹிம்சை நாடு; ஆனால் இங்கே அதிக ஹிம்சை குடிகொண்டிருக்கிறது. சமயங்களின் பேராலும், மூடப் பழக்க வழக்கங்களாலும் ஜீவ வதைகள் நடைபெறுகின்றன. இவற்றை ஒழிக்கப் பொது ஜன அபிப்பிராயத்தைக் கிளப்பவேண்டும்" என்று குறிப்பிட்டார். தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபையார் தேவதைகளின் பேரால் பலிக்கொலைகள் நடைபெறுவதைத் தடுக்க முயன்று வருகின்றனர். இவர்களுடைய இடையறாத தீவிர பிரசாரத்தால் குறிப்பிடத்தக்க பயன் விளைந்து வருதலையும் நாம் அறிகின்றோம். இச்சங்கத்தினருடைய நன்முயற்சியால் பலிக்கொடுமை, செடில் குத்தியாடல், வேப்பஞ்சேலை யுடுத்தல் போன்ற அநாகரிகக் காட்டுமிராண்டி வழக்கங்கள் விரைவில் ஒழியவேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். இவைகளைத் தடுக்கச் சட்டம் செய்யவேண்டிய ஏற்பாடுகளையும் இச் சங்கத்தார் மேற்கொள்ளவேண்டும் என்பது நமது கருத்து.

---




# நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

---

(809-ம் பக்கத் தொடர்ச்சி.)

மத்தியானம் வெப்பத்தினால் அறையி லிருக்கத் தாங்காமல் மீனா ஒரு நல்ல கதைப் புஸ்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தோட்டப்பக்கம் அங்கு ஒரு விசாலமான மரத்தின் கீழ் போடப்பட் டிருந்த பலகையின் மீது உட்கார்ந்தாள். மணி இரண்டு ஆனபோதிலும் சூரிய வெப்பம் அம்மரத்தின் கீழ் கொஞ்சங்கூடத் தெரியாது. இதுவே மீனாவுடன் சாவதானமாய்ப் பேசுவதற்குத் தக்க சமயமென்று நான் சிறிது நேரங் கழித்து அம்மரத்தடிக்குப் போனேன். என்னைக் கண்டதும் மீனா சிரித்துக்கொண்டே என்னைப் பார்த்து "ஏது? இந்த மரத்தடிக்கு வரும்படி உங்களுக்கு மனம் வந்து விட்டது!" என்றாள்.

நான்:—நீ கேட்பதைப் பார்த்தால் இந்த இடத்திற்கு நீ தினம் வருகிறாய் போலிருக்கிறதே?

மீனா:—ஆம்; இந்த வேளையில் பிரதிதினமும் நானிங்கு ஏதாவது ஒரு புஸ்தகத்தை யெடுத்துக்கொண்டு வருவேன்.

நான்:—அடடா! இந்த சமாச்சாரம் எனக்கு இதுவரையில் தெரியாது. நேற்றிரவு எனக்குச் சரியான தூக்கம் கிடையாது. அதனால் இந்தத் தோட்டத்துக்கு வந்தேன்.........

மீனா:—நேற்று ராத்திரி யிங்கு தோட்டத்திற்கா வந்தீர்கள்?—என்று ஒருவித ஆச்சரியத்துடன் கேட்டாள்.

நான்:—ஆம். தூக்கமே பிடிக்கவில்லை யாதலால் தோட்டத்திலேயே வெகு நேரம் உலாவிக் கொண்டிருந்தேன்.

மீனா:—தனியாகவா இங்கு வந்திருந்தீர்கள்?—என்று கேட்டாள்.

இக்கேள்விக்கு உடனே நான் பதில் சொல்லாமல் சற்று தயங்கினேன். பிறகு மீனாவை நேராகப் பார்த்து "என்ன, நீகேட்பது வேடிக்கையாக விருக்கிறதே! உன்னுடன் தான் நான் இங்கிருந்தேன்!" என்றேன். இதைக் கேட்டதும் மீனாவின் முகம் சவம் போல் வெளுத்தது.

"என்னுடனேயே இருந்தீர்கள்?" என்றுகூறித் திகைத்தாள்.

"ஆம்; நீயும் இரவு தோட்டத்தில் தான் இருந்தாய்!" என்று தைரியமாய்ச் சொன்னேன்.

இதைக் கேட்டதும் மீனா சற்றுத் தடுமாற்றங் கொண்டவளாய் என்னைப் பார்த்து, "நான் தோட்டத்தில் உங்களைப் பார்க்கவே யில்லையே!" என்றாள்.

நான்:—இது போகட்டும்; உன்னைச் சுற்றி யிருக்கும் ஆபத்தை நீ அறிந்து கொள்ளவில்லை; இதற்குத் தான் நான் எப்பொழுதும் பயப்படும்படியாக விருக்கிறது.

மீனான்:—என்னைச் சுற்றி என்ன ஆபத்து இருக்கிறது?

நான்:—உன்னைத் தொலைத்துவிட வேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கும் உன்னுடைய விரோதி வரவர உன்னருகில் வந்து கொண்டிருப்பதை நீ அறியாய்!

மீனான்:—நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை.

நான்:—விடியற்காலம் உனக்குத் தெரிந்த ஒரு பேர்வழியுடன் நீ பேசிக்கொண்டிருக்க வில்லையா?

மீனான்:—ஆம்; நான் பேசிக்கொண்டிருந்தேன். இதற்கென்ன?

நான்:—அந்த பேர்வழியார்?

மீனான்:—யார்? நீங்கள்தான் சொல்லுங்களேன்.

நான்:—அவன்தான் முகமூடியணிந்துகொண்டு உன்னை நீல அறையில் வந்து பார்த்துவிட்டுப்போன மர்மஸ்திரீ—என்றேன்.

இதுகேட்டு மீனான் வியப்புந் திகைப்புமடைந்து, "இல்லவேயில்லை! விடியற்காலம் அந்தஸ்திரீயுடன் நான் பேசிக்கொண்டிருக்கவில்லை" என்றான்.

நான்:—நீ கூறுவது எனக்கு ஆச்சரியமாகவே யிருக்கிறது. பின் நீ யாருடன்தான் பேசிக்கொண்டிருந்தாய்?

மீனான்,—தயவு செய்து மன்னிக்கவேண்டும். நான் சொல்லத் தயாராயில்லை.

நான்;—என் பேச்சு உனக்கு அபகாரமாய்த் தோற்றுகிறது! ஆயினும் நான் உனக்கு நன்மையையே கூறுகிறேன். அந்த மர்மஸ்திரீ இன்று விடியற்காலை இவ்வீட்டில் இருந்தாள். அவள் உன்னுடைய அறைக்குள்ளேயும் சென்றிருந்தாள்!

மீனான்:—என்னுடைய அறைக்குள்ளேயா!......நான் நம்பவில்லை.

நான்:—இதில் ஏன் உனக்கு அவநம்பிக்கை யுண்டாகிறதென்று எனக்கே தெரியவில்லை உன்னுடைய அறைக்குள் அவள் நுழைந்ததை நான் நேரில் பார்த்தேன்—என்று கூறிவிட்டுப் பிறகு இரவு நடந்த விஷயங்களனைத்தையும் கூறினேன். என்னுடைய அறைக்குட் சென்றவுடன் எனக்கு அம்மயக்கம் உண்டானதையுங் கூறினேன்.

மீனான்:—மிக்க ஆச்சரியமாகவே யிருக்கிறது. இதுவரையில் எனக்கு இவ்விஷயங்கள் தெரியாது. அதே மர்மஸ்திரீதான் என்னறைக்குள் நுழைந்தாளென்று உங்களுக்கு நிச்சயமாய்த் தெரியுமா?

நான்:—அவளுடைய நிறம், நடையுடைபாவனை உருவம் எல்லாவற்றையும் நீயும் பாலாமணியம்மாளும் என்னிடம் விவரமாய்த் தெரிவித்திருக்கிறீர்கள் இவ் விவரத்தினாலேயே அவள்தான் உன்னறைக்குள் நுழைந்ததென்று நான் சந்தேகமில்லாமலே கூறுவேன்.

மீனான்:—என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்! வந்தவள் அந்த ஸ்திரீயாகத்தானிருக்கவேண்டும். ஏனென்றால் உங்களுக்கு மயக்கம் உண்டானது



போல் என்னுடைய அறையில் அந்த மாய மயக்கமே உண்டாயிற்று. இன்னுங்கூட என்னுடைய தேகத்தில் ஏற்பட்ட வலி சரியாய்ப் போகவில்லை. ஆனால் மயக்கம் முன்போலெல்லாமில்லாமல் சில நிமிஷங்களுக்குத்தானிருந்தது......டாக்டரவர்களே! இவ் விஷயங்களிலிருந்து நீங்கள் என்ன தெரிந்துகொள்ளுகிறீர்கள்?

நான்:—என் மனதிற்படுகிறதென்னவென்றால் நம்மிருவரையும் ஒழித்துவிடவேண்டுமென்று சில விரோதிகள் தம் சுய நலத்தை முன்னிட்டு ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறார்கள். இந்த மரணமயக்கம் உண்டாவதற்கெல்லாம் சில மனிதர்களே காரணமே தவிர, இதில் மாயமுமில்லை, மந்திரமும் இல்லை. நம்மையவர்கள் எதற்காகத் தொலைத்துவிடப் பார்க்கிறார்களென்பது மர்மமாகவே யிருக்கிறது. மீனான்! நான் சொல்லுவதைக்கேட்டு என்பேரில் கோபித்துக்கொள்ளாதே. நீ வாய் திறந்தால் இந்த மர்மங்களெல்லாம் தெரிந்துபோய்விடும். நீ உன்னுடைய இரகசியங்களைக் கூறுவதனால் எவ்வளவோ நன்மையுண்டாகும்.

மீனான்:—நான் எனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் உங்களுக்குச் சொல்லிவிட்டேனே?

நான்:—முழுவதும் சொல்லவில்லை; எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவைச் சொல்லிவிட்டு இருந்துவிட்டாய். நான் கேட்பது என்னவென்றால் நான் வேறு நீ வேறு என்பதாக எண்ணிக் கொண்டு நீ யென்னிடம் சொல்லாமல் எந்த இரகசியத்தையும் வைத்துக் கொள்ளக் கூடாதென்பது தான்—என்றேன்.

இதையெல்லாங் கேட்டுக் கொண்ட பிறகு மீனான் மௌனமாகவே யிருந்தான். உடனே நான் அவனைப் பார்த்து "உன்னுடை ஆபத்துக்கு முக்கிய காரணமா யிருக்கும் ஒரு இரகசியத்தை நீ யிதுவரையிலும் எனக்குச் சொல்ல வில்லை. ஆனால் நானறிந்து கொண்டு விட்டேன்" என்றேன்.

மீனான்:—அந்த இரகசியம் என்ன? நீங்கள் தான் சொல்லுங்கள்.

நான்:—உனக்குக் கலியாணமாகி விட்ட விஷயம்!—என்றேன். இதைக் கேட்டதும் அவன் மெய் சிலிர்த்தான். அவனுடைய முகத்தில் ஒரு வித மாறுதல் தென்பட்டது..................கொஞ்ச நேரத்திற்கு என்ன சொல்லுவதென்றே தெரியாமற் திகைத்தவனாய் பிறகு என்னைப் பார்த்து "இவ் விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று தாழ்ந்த குரலில் கேட்டான்.

நான்:—எனக்கு இது வெகு நாட்களாய்த் தெரியும்.

மீனான்:—இவ் விஷயத்தை பாலாதான் உங்களுக்குச் சொல்லி யிருக்க வேண்டும்.

நான்:—இல்லை; பாலாமணியம்மாள் என்னிடம் ஒன்றுஞ் சொல்லவில்லை. இவ் விஷயத்தை நான் சில மாதங்களுக்கு முன்னேயே அறிவேன்.

மீனான்:—எப்படித் தெரியும்?

நான்:—எப்படித் தெரிந்து கொண்டேனென்பது என்னுடைய ரகசியம். நீ யெப்பொழுது உன்னுடைய ரகசியத்தை எனக்குத் தெரிவிக்காமலிருக்கிறாயோ அப்பொழுது நான் மாத்திரம் என்னுடைய இரகசித்தை உன்னிடம் எதற்காகச் சொல்ல வேண்டும்?

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

யுவ௵ வைகாசிமீ—கலியுகாதி 5037, சாலிவாகனம் 1858,
பசலி 1344, கொல்லமாண்டு 1110, ஹிஜரி 1354,
இங்கிலீஷ் 1935௵ மேமீ—ஜூன்மீ

| வைகாசிமீ | மேமீ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | செவ் | ஏகா18-50 | உத்10-10 | அ10-10சி | [வ ஏகாதசி |
| 2 | 15 | புத | து22-15 | அஸ்12-45 | ம12-45சி | பரசுராமதுவாதசி,சர்வ,மத் |
| 3 | 16 | வியா | திர24-15 | சித்18-53 | சி18-53அ | பிரதோஷம் |
| 4 | 17 | வெள் | ச○24-45 | சுவா21-15 | சித்60 | நரசிம்ம ஜயந்தி |
| 5 | 18 | சனி | பவு24-13 | விசா22.2 | சித்60 | வியாதியஸ்தர் மருந்துண் |
| 6 | 19 | ஞா | பிர22-5 | அனு22.15 | மர60 | பௌர்ணமி, வைசாகபௌ |
| 7 | 20 | திங் | துதி16-43 | கே21-19 | சித்60 | வைசாகபகுளம் |
| 8 | 21 | செவ் | திரி15-33 | மூல19-20 | அ19-20சி | |
| 9 | 22 | புத | சது11-20 | பூரா17-0 | அமி60 | |
| 10 | 23 | வியா | பஞ்6-43 | உத்14-15 | சித்60 | |
| 11 | 24 | வெள் | சஷ்1-43 சப்56-25 | திரு11-8 | ம11-8சித் | |
| 12 | 25 | சனி | அஷ்50-55 | அவி7-43 | சித்7-43அ | |
| 13 | 26 | ஞா | நவ45-18 | சத4-10 | சித்60 | |
| 14 | 27 | திங் | தச39-45 | பூர0-30 உத்56-58 | மர0-30சி | |
| 15 | 28 | செவ் | ஏகா34-25 | ரே53-38 | சித்60 | சர்வ,மத்வ ஏகாதசி,சத்திரி |
| 16 | 29 | புதன் | து29-28 | அஸ்50-48 | ம50-48சி | பிரதோஷம் [கிவர்த்தி |
| 17 | 30 | வியா | திர25-3 | பர48-30 | சி48-30ம | மாச சிவராத்திரி, கரிநாள் |
| 18 | 31 | வெள் | ச●21-35 | கி✻47-30 | சி47-30ம | கிருத்திகை |
| 19 | 1935௵ ஜூன்மீ 1 | சனி | அமா19-3 | ரோ47-28 | அ47-28சி | அமாவாசை விரதம் |
| 20 | 2 | ஞா | பிர18-8 | மிரு48-53 | சித்60 | சந்திர தரிசனம் |
| 21 | 3 | திங் | துதி18-38 | திரு51-53 | சி51-53அ | சுவர்ண கௌரி விரதம் |
| 22 | 4 | செவ் | திரி20-38 | புன56-23 | சித்60 | 9-க்குள் மழை |
| 23 | 5 | புத | சது24-15 | பூச60 | சித்60 | மாச சதுர்த்தி விரதம் |
| 24 | 6 | வியா | பஞ்29-5 | பூச2-13 | சி2-13அ | நவக்கிரகசாந்தி செய்ய |
| 25 | 7 | வெள் | சஷ்34-48 | ஆயி9-10 | மர60 | சஷ்டி, ஆரண்யகௌரி விர |
| 26 | 8 | சனி | சப்40-55 | மக16-35 | அ16-35சி | தானிபம் செலவிட [தம் |
| 27 | 9 | ஞா | அஷ்46-40 | பூர24-0 | சி24-0அ | சித்திரம் எழுத |
| 28 | 10 | திங் | நவ51-43 | உத்30-50 | சித்60 | தானியம்சஞ்சியம்வைக்க |
| 29 | 11 | செவ் | தச55-30 | அஸ்36-28 | சித்60 | தசஹரா விரதம் |
| 30 | 12 | புதன் | ஏகா57-35 | சித்40-43 | சித்60 | சர்வ, மத்வ ஏகாதசி |
| 31 | 13 | வியா | து58-10 | சுவா43-20 | அ43-20சி | இராம லட்சுமண துவாதசி |
| 32 | 14 | வெள் | திர56-53 | விசா44-15 | சித்60 | ஷடசிதி புண்ணிய காலம் |

| | | | |
|---|---|---|---|
| | | ஞரி புத | சுக் |
| சனி | 9-மிது-புத 19-கடக-சுக் | | கே |
| ராகு | | | |
| | | குரு | செவ் |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS.
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.


## புதிய நாவல்! புதிய நாவல்!!

## வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

நீங்கள் நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த

ஸ்ரீமான்-ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய

# அரசூர் இலக்ஷ்மணன்

அல்லது

## அதியற்புதக் கள்ளன்

என்னும் புதிய நாவல் தயாராய்விட்டது.

இந்நாவலில் அரசூர் இலக்ஷ்மணனது சாமர்த்தியச் செயல்களும், அதிசயத் திருட்டுகளும், சுரங்க என்ஜினீரும், நூதன நீர்மூழ்கிக் கப்பலைச் செய்யும் முறைகளைத் தெரிந்தவருமான லோகநாயகன் என்பவர் என்ன ஆனார் என்பதைப் போலீஸாரும், துப்பறிபவர்களும் கண்டு பிடிக்க முடியாமலிருக்க இவ்வரசூர் இலக்ஷ்மணன் அவ்வுண்மையைக் கண்டு பிடிப்பதும், கொலைகாரர்களான எத்தூர் வீரண்ணனையும் அவனது சகோதரன் அழகப்பனையும் மடங்க வைத்து உண்மை யறிவதும், சிறையிலிருந்தவாறே ஒரு பிரபுவின் வீட்டில் கொள்ளை யடிப்பதும், தான் செய்யும் களவுகளைக் கண்டுபிடிக்க முடியாவாது துப்பறிபவர்களைத் திண்டாடவைப்பதும், இலக்ஷ்மணன் நல்லம்மாள் மீது காதல்கொண்டு மயங்குவதும், பிரசித்திபெற்ற துப்பறியுஞ் சிங்கம் ஆனந்தஸிங்கின் அரிய முயற்சியும், கடைசியில் அரசூர் இலக்ஷ்மணனே கொள்ளையடிப்பதை விட்டுத் துப்பறியும் தொழிலில் ஈடுபட்டுப் பிரசித்தி பெறுவதும் படிக்கப் படிக்க இன்பத்தைப் பயக்கும். சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. உடனே ஆர்டருக்கு முந்துங்கள். சுமார் 600 பக்கங்கள் கொண்ட

இதன் விலை ரூபா 2—0—0.

# கிருஷ்ணஸிங்

அல்லது

## துப்பறியும் சிடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமார்த்தியங்களும், வீரதீரச் செயல்களும், உலகில் பல பழிமோசப் படுகுழியிலிருந்து தப்புவதற்கான புத்திமதிகளும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதற்கிணங்க தீமைபுரிவோருடைய பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய போதனைகளும் அடங்கியது.

இதன் விலை அணா 14.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓர் சிறந்த தமிழ் நூல் வெளியீடு

# நாலடியார் மூலமும்

## விரிவான உரையும்.

**செய்யூர் வித்வான்-வி. ஆறுமுகஞ் சேர்வை அவர்களைக்கொண்டு இந்நூல், மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பழைய உரைகளையும் தழுவிப் புதிதாக எழுதப்பட்ட சிறந்த உரையுடன் இப்போது வெளிவந்திருக்கிறது.**

இந் நாலடியார் என்னும் நூலானது, ஏறக்குறைய இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் கடைச்சங்க காலத்தில், பாண்டியனிடம் வந்திருந்த சமண முனிவர் பலரால் தனித்தனி வெண்பாக்களாக இயற்றப்பட்டு பின்னர் அப் பாண்டியனால் தொகுக்கப்பட்டுப் பெயரிடப்பட்ட சிறந்த நீதி நூலாகும். உலகத்தில் பல தேசத்தாராலும், பல சமயத்தாராலும் கொண்டாடப்படும் திருக்குறளோடு ஒப்புமை யுடையது, உலகத்தார் பலருக்கும் பொதுவான பற்பல நீதிகளை எடுத்துரைக்கக் கூடியது. உலகத்தில் மனிதர்க்குப் பயன் படத் தக்க நூல்களில் இது சிறந்ததாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இது முதன்மை பெற்றதாகும். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கினையும் அடைதற்கு இந்நூல் நல்ல வழிகாட்டி யாகும். • மாணவர்களும், மற்றவர்களும் அவசியம் படிக்கத் தக்க நூலாகும்.

இதற்குப் பிற்காலத்தில், 'பதுமனார்' என்னும் சிறந்த புலவரொருவர், பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடுகளைச் செய்து சிறந்த உரையொன்றும் இயற்றி யிருக்கின்றார். வேறு சில சிறந்த புலவர்களும் சில உரைகள் எழுதியிருக்கின்றார்கள்.

இது, அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களையும், பதினொரு இயல்களையும், நாற்பது அதிகாரங்களையும், நானூறு செய்யுட்களையு முடையது.

இந்நூலுக்கு, முன் பதுமனார் முதலியவர்களால் இயற்றப்பட்ட சில உரைகள் இருப்பினும், அவை சிறந்த கல்வி யறிவுடையாரே படித்துணரத் தக்க பழந்தமிழ் நடையில் அமைந்திருப்பதாலும், ஆரம்பக் கல்வி யுடையாரும், சாமானியக் கல்வி யுடையாரும் தக்க ஆசிரியரிடம் பாடங்கேட்டுத் தெரிந்து கொள்ளக் கூடியனவா யிருப்பதாலும் எவரும் தாமே படித்துணரத் தக்க விதத்தில் இக்காலத்துக்கேற்ப எளிய தமிழில் தெளிவான உரை யொன்று எழுதி வெளியிட வேண்டுமென்று பலர் எம்மிடம் கேட்டுக்கொண்டதற் கிசைந்து, அவர்கள் விரும்பிய விதமாகவே இவ்வுரை எழுதி வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும் எவர்க்கும் சந்தேக முண்டாகாதபடி பொருள்களை நன்கு விளக்கிக்காட்டி மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. பழைய உரைப் பகுதிகள் மிகத் தெளிவாக விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. நூல் அமைப்பிற்கு விரோதமாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் பொருள்பட்டுச் சந்தேகங்களை விளைவித்துக்கொண்டிருந்த உரைப்பகுதிகளில் ஐயம் நீங்குமாறு பொருத்தமான பொருள்கள் விளக்கப்பட் டிருக்கின்றன. புதிய உரைகளும் ஆங்காங்கே விரித்தெழுதப்பட் டிருக்கின்றன. சில செய்யுட்களின் சரியான பொருள் விளங்காமல் மயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்த உரைகள், வேறு நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு சந்தேகம் நீங்கச் சரியான விதத்தில் அமைக்கப்



பட் டிருக்கின்றன. வேறு நூல்களில் விளங்காதிருந்த பொருள்கள், இந்நூற் செய்யுளின் ஆதாரத்தைக்கொண்டு விளக்கப்பட் டிருக்கின்றன. இதுவரை இந்நூலுரைகளிற் காட்டப்படாத பற்பல சிறந்த கருத்துக்கள் இவ்வுரையில் நூதனமாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் முதற் செய்யுளுரையில் ஜைனமதக் கோட்பாடுகள் மிகத் தெளிவாக எடுத் தெழுதப் பட்டிருக்கின்றன. பல கல்விமான்களும், ஜைனர்களும் காலடையில் சில இடங்களுக்குத் தெரிவித்துவந்த அரிய உரைகளும் இப்புதிய வுரையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இலக்கணக் குறிப்புக்களும், இலக்கியக் குறிப்புக்களும், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கண நூல் சூத்திரங்களின் உதாரணங்களாலும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், கலித்தொகை, நீலகேசி, சூடாமணி நிகண்டு, பழமொழி, அறநெறிச்சாரம், திருநூற்றந்தாதி முதலிய இலக்கிய நூற் செய்யுட்களின் உதாரணங்களாலும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் இவ்வுரையில் செய்யப்பட்டிருக்கும் திருத்தமான வேலைகள் பல.

இதுவரை, நாலடியாருக்கு இத்தகைய தெளிவான உரை வெளிவந்ததில்லை என்பது இதைப் படித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இது டெமிபிரௌன் 16-பேஜ் அளவில் 51-பாரங்களுக்கு மேற்பட்டும் 820 பக்கங்களாயும் அச்சிடப்பட்டிருக்கிறது. தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்கத் தக்கது.

இதன் விலை ரூபா 2—8—0.

# நாகரீகம்?

இரண்டாம் பதிப்பு.

கே. இராஜா செட்டியார், எம்.பி. பி.ஜி., அவர்கள் இயற்றியவை

'நாகரீகம்' என்ற உயர்ந்த பெயரை வைத்துக்கொண்டு இக்காலத்து நடைபெறும் பல போலி வழக்க ஒழுக்கங்களின் கேடுகளை ஒழிக்கவும், நீதியும், உண்மையும், அன்பும் நிலைகுலைந்து, மூலை முடுக்குகளில் தேங்கிக் கிடக்க, அநீதியும், பொய்யும் கொடுமையும் ஒருங்கு திரண்டு கரைகடந்து பெருகிவரும் பெரு வெள்ளத்தைத் தடுக்கும் அணைக்கட்டாக இந்நாவல் வரையப்பட்டது. இதில் உள்ளதை உள்ளபடியே எடுத்துக் காட்டி இந்தியர் எல்லோரும் ஒன்று சேர்ந்து அன்புடன் வாழவேண்டுமென்று அரும் பெரும் நீதிகள் அடங்க பலதிறத்து மனிதர்களின் சுபாவத்தையும் போக்கையும் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது; இதில் ஜாதி சமூக கட்டுப்பாடுகளின் ஊழல்களும் சுத்தமித்திரனின் அருங்குணங்களும், கருத்தொருமித்த காதலர்களின் அந்தரங்கப் பிணைப்பும், மோசக்காரர்கள் இறுதியில் நாசமுறுவதும், பல அந்தரங்கங்களை எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இதை எல்லாரும் வாசித்து நற்பயனடைந்து இன்புறுவார்களாக. இதன் விலை ரூபா 2.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

# அம்பாலிகை

அல்லது

## அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கருப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம் புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சிசெய்து, ஏற்கனவே அவளுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனுமான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ரசாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தசிங் உண்மையான குற்றவாளியை அதாவது கருப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம் செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கருப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தசிங் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கன்னிகையை மணஞ் செய்துகொண்டு மேலும் பிரக்யாதி அடைவதும் படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

### இதன் விலை அணு 12.

## இதர ஆக்ட் புஸ்தகங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இர்டியன் பினல் கோட் சட்டம் | 3 | 0 |
| கிரிமினல் லா | 3 | 0 |
| சிவில் லா | 3 | 0 |
| புது விவகார சிந்தாமணி | 2 | 8 |
| புது பெரிய ஹிந்து லா | 2 | 0 |
| மகம்மதியன் லா | 2 | 0 |
| கிராம முன்சீப் சட்டம் | 1 | 8 |
| பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் சட்டம் | 1 | 0 |
| இன்கம் டாக்ஸ் சட்டம் | 1 | 0 |
| லோகல்போர்ட் ஆக்ட் | 2 | 0 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| பஞ்சாயத்துச் சட்டம் | 1 | 4 |
| இந்துதேச சாட்சி ஆக்ட் | 1 | 8 |
| தேவஸ்தான சட்டம் | 1 | 8 |
| எஸ்டேட் லாண்டு ஆக்ட் | 1 | 4 |
| ஸ்டாம்பு ஆக்ட் | 0 | 12 |
| ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் | 0 | 14 |
| டிரஸ்டிகள் சட்டம் | 0 | 12 |
| கால நிர்ணயச் சட்டம் | 0 | 8 |
| நில ஆக்கிரமிப்பு என்குரோச்மெண்ட் சட்டம் | 0 | 4 |
| கிராமச் சுகாதாரம் | 0 | 2 |

**ஜனகநந்தனி** இன்பம் நிறைந்த நீதி பொக்கிஷம். அறிவை வளர்க்கும் அரும் புதையல் இதுவே. எளிய நடையில் எழுதப்பட்டதால் யாவரும் வாசிக்கத்தக்கது. விலை ரூபா 1.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.**

# மதிமோசவிளக்கம்.

(ஸ்ரீ இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

### ஆன்றோர் மதிக்கும் நான்காம் பதிப்பு.

**223-பக்கங்கள் கொண்டது. 16-விநோதமான சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டது. உயர்ந்த நீக்கு கடிதத்தில் அச்சிடப்பட்டது.**

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமியாகிய இவ்வ பரதகண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர், [illegible]ப்பட்டு, மன மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அதர்மத்தில் செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வருகின்றது. அதற்கேற்ப வஞ்சமும், சூதும், பஞ்சமா பாதகமும் அமைந்த நஞ்சா நெஞ்சமும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள் தோறும், ஊர் தோறும், வீடுகள்தோறும் மலிந்து, விநோதம் விநோதமான பலமோசம், மதிமோசம், நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்து வருகின்றனர். காலம் செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந்த மோசநாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன்றி அதியற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் செய்யும் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து விழுங்குவோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவன் போல வளர்ந்து சிறந்து ஜெகஜாலப்புரட்டராயும், அண்டப்புரட்டராயும், ஆகாசப் புளுகராயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மகாமோசச் செயல்களால் சூதுவாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்டங்களுக்களவே யில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாயத்திலும் மோசம்; உத்தியோகத் துறைகளிலும் ஒப்பில்லா மோசம்; வித்தையிலும் மோசம்; வேடிக்கையிலும் மோசம்; வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீகத்திலும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக்கடையிலும் மோசம்; கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோசம்; தேசச் சாலைகளிலும் மோசம்; கோவிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டிலும் மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோசம். இப்படியே மனிதர் தலை நீட்டு மிடங்களெல்லாம் மோசமயமாகவே விளங்குகின்றன. உலக முழுவதும் இவ்வாறே மோசம் நிறைந்ததா யிருப்பதனாலே, வஞ்சகமற்ற மனிதர் துன்பத்திற்குள்ளாகிச் சதா சர்வகாலமும் சஞ்சலப்படுகின்றனர்; இத்தகைய மோசநாச வலையினின்றும் தப்புதற்கு மார்க்கங் காணாதவர்களாய்த் தவிக்கின்றனர். ஆதலின், இந்தப் பலமோசப் பெரும் பாதாளத்தில் மனிதர் வீழ்ந்து மயங்காமல் தப்பித்துய்தற் கேதுவாயிருக்கும்படி, உலகத்தில் உலாவும் எண்ணிறந்த மோசச் செயல்களெல்லாம், இப்புத்தகத்தில் மிக்க விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

இது இவ்வளவு பயன் சிறந்ததா யிருப்பதனாலேயே இதன் மூன்று பதிப்புக்களும் வெகு சீக்கிரம் செலவாகி இப்போது இந் நான்காம் பதிப்பு வெளிவந்திருக்கின்றது. இப்பதிப்பிலும் பெரும்பாகமான காப்பிகள் செலவாகிவிட்டன; சொற்பக் காப்பிகளே இருக்கின்றன.

### இதன் விலை ரூபா 1—0—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணு 12.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

# பகவத்கீதை வசனம்

ஸ்ரீ மகாத்மாவினால் சிறப்பித்துக் கூறப்படுவதும், ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மாத்வர், ஸ்ரீ நீலகண்டர் முதலிய சமயாச்சாரியர்களின் வியாக்கியானங்கட்குப் பாத்திரமாக விளங்கியதும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினால் அருளிச் செய்யப்பட்டதுமாகிய பகவத்கீதையைச் சிறிது கல்வியறிவுள்ள ஆண்களும் பெண்களுங்கூடப் படித்துப் பயன் பெறவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அது பிரபல நாவலாசிரியரும், கைவல்ய நவநீத வசனாசிரியருமாகிய ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எளிய இனிய வசன நடையில் எழுதப்பட்டது.

அழகிய காலிகோ கட்டடம். இதன் விலை ரூ. 1—8—0.

## காதலி? ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' என்னும் பல உயரிய நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர்திருத்தத்தின் சீர்கேடு ஆகிய பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 10.

## பவளத்தீவு 2-பாகம்

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்தினால் அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு கோர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூர்ணமாய்க் கவர்ந்து நின்று மிக்க களிப்பை யளிக்கும். 2-பாகம் விலை ரூபா. 2.



## திருவருட்பா.

(அடக்க விலை)

நாளது வரையில் கிடைத்த பல அரிய உபதேசங்கள், உண்மை நெறிகள், சன்மார்க்க வெளியீடுகள் அடங்கியது. தடித்த கிளேஸ் காகிதம் சுத்தமான பதிப்பு, பலமான அழகிய பட்டு கலிகோ பைண்டு. ஒவ்வொன்று சுமார் ஆயிரம் பக்கங்கள். 2-வால்யமும் ரூபா 6 தான். தபால் அல்லது ரயில் செலவு வேறு. சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன. முந்துவோர்க்கே கிடைக்கும்.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒரு முறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப் பிறந்த நாம் அனுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட் குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் அவதரித்த பகவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீ ராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் அதிசயங்களைப் பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனைப் படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். இதனைப் படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடையக் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களைவிட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீ ராம சரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்குமென்பர் பெரியோர்; இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை ரூபா 4.

## ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(நான்காம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்ப காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

## நாகரீக நங்கையர் கழுத்துச் சங்கிலி

இது சுத்தமான 18 காரட் கோண்ட
ரோல்ட் கோல்ட் பிளேட் நெக்லேஸ் என்னும்

### கழுத்துச் சங்கிலி



3 வருஷம் உத்திரவாதமுள்ளது. இது சுத்தமான ரோல்ட் கோல்டால் செய்யப்பட்டு இமிடேஷன் வைரம், சிவப்பு, ரத்தினங்கள் முதலியவை பதிக்கப்பெற்றது. படத்திற் கண்டபடி மிகவும் வேலைப்பாடுடையது. பதக்கம் அமைக்கப்பெற்றது. கண்ணைக் கவரக்கூடியது. அசல் தங்கத்தால் செய்ததுபோலவே இருக்கும். யாவரும் எத்தேயத்தினரும் உபயோகிக்கலாம். இதன் விலை ரூபா 1—8—0

ஒரே சமயத்தில் இரண்டு சங்கிலிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் தபால் செலவு இல்லை.

## ரோல்டு கோல்டு
## "பிடோ" லீவர் கைகெடியாரம்.



எங்கள் ரிஜிஸ்டர் ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்றுபோவதல்ல. 5 வருஷமல்ல பத்து வருஷங்கூட ரிபேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கெடியார கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷ காரண்டியுடன் அனுப்பப்படும். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ 5-12-0. ஸ்டாக் கொஞ்சம் உடனே எழுதுங்கள்.

அமீரியர் வாட்சு கம்பேனி, கெடியார வியாபாரிகள், மதராஸ்

---

## ஸ்ரீ மஹா பாரதம் விராடபர்வ வசனம்

நமது இதிகாசங்களில் சிறந்ததும், அறம் பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களைத் திறம்பட வகுத்துரைப்பதினால் ஐந்தாம் வேதம் என்று சிறப்பிக்கப் படுவதுமாகிய ஸ்ரீ பாரதம் விராடபருவம் புதிய பதிப்பு வெளிவந்து விட்டது. சரளமான செந்தமிழ் நடை. முத்துப்போன்ற பெரிய எழுத்துக்களில் அமைந்த சுத்தப்பதிப்பு; விசித்திரப் படங்களுடன் இலங்குவது. சாமானியப் படிப்புள்ள ஆடவர் பெண்டிர் யாவருக்கும் எளிதில் பொருள் விளங்கும். சொற்ப பிரதிகளே கைவசம் உள்ளன. உடனே முந்துங்கள். உறுதியான கட்டிடம்.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், நைனியப்பநாயக்கன் தெரு, நம்பர். 187, மதராஸ்

---

## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும்,

அயக்காந்த செந்தூரமுமே.




முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும் தேகபலத்தைத் தரும் ஔஷதம் வேறொன்றுமில்லை.

### விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தட்வையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

# இந்த லேகிய சேந்தூரங்களால்
## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்கலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம். பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல் நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, ரக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவையென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளைக்கு வாங்கி யுண்டால் இவற்றின் அபாரகுணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரே தாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரத்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் நாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஐயப்பாடின்றி இருக்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிகமனக் கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக்காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக இந் லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்ச் சனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கை வைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் ஆச்சரியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம், மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி மார்க்கண்ட சூப்பு, இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிடல் வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் ப[illegible]ராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவ்வளவாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் உறைந்த, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்சாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால், அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அநாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 8. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், ரெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0. தபாற்கூலி ரூபா 1-4-0.

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**

44, நம்புலையர் தெரு, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர் டிரேட் மார்க்)

கட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனனி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும். விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு விலை ரூபா 5.

ஏககாலத்தில் 8-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம்.
வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

**[illegible]லட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.**

## நாராயண சஞ்சீவித் தைலம்

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், சாதுரோய், தலைபாரம், அதிக வெய்யிலினால் உண்



டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளைக் கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த் தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவி வாரிவருவதினால் மயிர் கரும்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து ஞாபக சக்தியையும், முகவசீகரத்தையும் உண்டாக்கும். கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் நடந்தவர்களும் படுக்கும்போது சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் காலையில் எழுந்திருக்கும்போது தேகம் ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்



## கூந்தல் வளரும் தூள்

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 12. தபாற்கூலி வேறு.

## கண்நோய் மருந்து



இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலைப் பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

---

லக்ஷ்மி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

## மேஹ ராஜ சஞ்சீவி எண்ணெய்.



இந்த எண்ணெயை ஒருமுறை மூன்று நாள் சாப்பிட்ட மாத்திரத்திலேயே, கிரந்தி, மேக தாமரை, மேக நமைச்சல்கள், மேக இரணம், மேகப் புண், கால் கைகளிலே சேரும் மேக துர்நீர், மேக வெடிப்பு எல்லாவகைகளான வெள்ளை, மூத்திர கருவியிலே தோன்றும் பலவித வியாதிகள் தீரும். அநேக காலமாக இருக்கும் வியாதிகளுக்கு ஒருமுறை சாப்பிட்டு, 15-நாள் பொறுத்து, மற்றொரு முறை சாப்பிடவேண்டும். 3-நாள் எண்ணெய், புட்டி 1-க்கு ரூபா 1—8—0; மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது வியாதியின் பூரண நிலவரத்தை தெரியப்படுத்தவும்.

## கஸ்தூரி மாத்திரை

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டாகும் சளி, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகள் தீரும். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.



## காப்கியூர் என்னும் க்ஷய அரி.

கபஇருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான சுழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலுதினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவஸ்தைகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

## சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளைகளிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத்




தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேக வாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதியைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியதுமாகிய உண்மையான மருந்து.

இதன்விலை ரூபா 1—8—0. தபாற்கூலி வேறு.

---

லக்ஷ்மி கம்பெனி, நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.

## சுகம்பத மாத்திரை.

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை திரேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் கலகாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறை தெரிந்து கொள்ளலாம். 25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு அணா 5.




## யூகலிப்டஸ் ஆயில்.

### (சுத்தமான நீலகிரித் தைலம்)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அனுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகைகளுடை வெட்டுக் காயங்கள், சாம்புச்சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்ப்பிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி, முதலிய ரோகங்களுக்குக் கைகண்ட ஒளஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 „ 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0.

## நரைமயிர் கருக்குந் தைலம்.



தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டு பண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா, இதைப் பூசிய பிறகு ரூகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் சார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூ. 1.

## கள்ள நோய் நிவாரணி.

### இது 3-தினத்தில் குணப்படுத்தும்.

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட்டு மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியமில்லையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபாற்கூலி வேறு.

---

லக்ஷ்மி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்



## கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.
வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு அணா 4. தபாற்கூலி வேறு.

லக்ஷ்மி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

---

## பூவேலை தைக்கும் கைமெஷீன்

இவ்வாச்சரியமான மெஷீன் பலவித பூச்சித்திர வேலைகளோடு நேர்த்தியாகத் தைப்பதற்கு மிகவும் அவசியமானது. கொஞ்சநாள் அனுபவத்திலேயே ஸ்திரீ புருஷர்கள் யாவரும் இதை எளிதில் அறிந்து கொண்டு இதன் உதவியால், மெத்தை படுக்கை, படுக்கை உறைகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள், ஜன்னலின் திரைச்சீலைகள், குழந்தைகளின் சொக்காய்கள், ஸ்திரீகளின் கவுன்கள், குல்லாய்கள், இவைகளில் பலவித பூச்சித்திர வேலைகளமைத்து கண்ணைக் கவரும்படி செய்யலாம்; சுவற்றில் களி மண்ணால் பலவிதப் பூச்சித்திர வேலைகள் அமைப்பதற்கும் இது மிகவும் சாதனமானது.



ஒவ்வொரு ஸ்திரீக்கும் தங்கள் ஓய்வு நேரங்களில் இது மிகவும் உற்சாகத்தைத் தந்து தங்கள் மனத்திற்கினிய யுக்தியுடன் புதுபுது வேலைப்பாடான பலரக பூஇலை சித்திர வேலைகள் செய்வதற்கு இது மிகவும் அவசியமானது.

வாங்கிப்பார்த்தாலே இதன் அருமை பெருமை விளங்கும். சற்றே நிமிஷத்தில் இதை அறிந்து கொள்ளும்படியான முறையையும் இதனுடன் அனுப்புவோம். பல ஆச்சரியமான வேலைகளைப் பகட்டாகவும் நேர்த்தியாகவும் இதன் உதவியால் செய்து முடிக்கலாம்.

அநேக பள்ளிக்கூடங்களில், மாணவர்களுக்கு இவ்வேலைப்பாடுகளைக் கற்பிக்கும் பொருட்டுத் தருவித்து நல்ல பலனை அடைந்திருக்கிறார்கள்.

இதை உபயோகிக்கும் முறை அடங்கிய புஸ்தகம், இம் மெஷினுடன் கூட பெட்டியில் அடக்கம் செய்து அனுப்பப்படும். விலை ரூ. 2-8-0-தான்.

---

ராஜலட்சுமி கம்பெனி, நெ. 44, தம்புசெட்டியார் தெரு, மதராஸ்.

# சிவப்பிரகாச பல் பொடி



இந்தச் சிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும், பல் வலி, பல்லில் சொத்தை, சதை வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கம கம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2. 3-டப்பிகள் அணா 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணா 6.

## அயத்தங்கத் திராவகம்

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக் கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போ யிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டொரு வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்கியமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் நீக்கும். வாத பித்த சிலேத்தமங்களா லுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேகதிடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40-நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூபா 1. 40-நாள் மருந்து விலை ரூபா 1-12-0.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# புத்திர சந்தான எண்ணெ



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
ஏன்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
வன்கிருந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
நான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
நிலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவைப்போது வித்தைப் புசித்து விடுவதனாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சோதி பற்றி இரத்தக்கட்டி யிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கருதரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் மேற் குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து பிறகு கரைந்து உடைந்து போவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

## மதன கோலாகல
## தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், அளவற்ற போக நுகர்ச்சியாலும் இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒரு விதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும்.



இதுவன்றி வேறு எந்த நோயினு லுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விர்த்தியை யுண்டாக்கி நரம்புக்கு உறுதியைக்கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டுச் சிறந்த கைபாக செய்பாகங்களால் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## ரூதக நிவாரணி மாத்திரை.

ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமல் ரஸ்தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலே யிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, யோனி தோஷங்கள், மஞ்சட் காமாலை, உணர்ச்சியின்றி சிறு நீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல் மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.



ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1.

## (காட்லீவர் ஆயில்) மீன் எண்ணெய்.



இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இரும்பலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும், ரத்தத்தைச் சுத்தி செய்யும், சுவாசகோசங்களின் ரோகத்தைக் குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூ. 1-8-0.

## கருவைத் தடுக்கும் ஔஷதம்

இந்த இரகசிய கருவைத்தடுக்கும் ஔஷதம் ஜர்மன் தேசத்தில் செய்யப்பட்டு அநேக பண்டித மேதாவிகளால் பரிசோதிக்கப்பட்டு நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றிருக்கிற படியாலும் நமது தேசத்தில் வரவுக்கு மிஞ்சிய குழந்தைகளைப் பெற்று குடும்பங்கள் கஷ்டப்படுவதை யோசித்தும், சில பலஹீனப்பட்ட தாய்மார்கள் அடிக்கடி கர்ப்பம் தரித்து தனது சரீரம் நொந்து துர்திசை யடைவதைக் கண்ணுற்றும் தற்சமயம் எம்மால் இவ் ஔஷதம் தருவிக்கப்பட்டு விற்பனை செய்து வருகிறோம். உபயோகிக்கும் முறை ஔஷதத்துடன் அனுப்பி வைக்கப்படும். விலை ரூபா 2—0—0.

## டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம், மூன்றுங்கள். விலை ரூ. 6-4-0. தபால் கூலி பிரத்தியேகம்.



கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## புதிய மகாகமகாகாவ்ஸ்திரம்
### (உண்மையான இன்பநூல் இது அவசியம்)

இதைப்போன்ற பலவித புஸ்தகங்கள் வெளிவந்திருந்தபோதிலும் அவைகளில் விஷயங்கள் மனதிற் பதியுமாறு எழுதப்படவில்லை. ஆனால் இந்நூலில் ஆண் பெண் இருபாலரும் சிற்றின்ப சம்பந்தமாகவும், இல்லற சம்பந்தமாகவும் அறியவேண்டிய பல விஷயங்களும், மர்மங்களும் தெளிவான நடையில், சுருக்கச்சொல்லி விளக்கவைக்கப்பட்டிருக்கிறது. இப்போது இரண்டாம் பதிப்பு வெளியானதாலேயே இதை மக்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்பது தெரிகிறது. சட்டைப் பையில் அடங்கும்படியான அளவு புஸ்தகம் விலை ரூபா 1—0—0. வி. பி. வேறு.

### காதலர் கண்டு களிப்புறும் நூல்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இன்பவாழ்க்கையின் இரகசியம் | 2 | 0 | ரதி சாஸ்திரம் | ... | 1 | 4 | 0 |
| இல்வாழ்க்கையின் இரகசியம் | 2 | 0 | சரீர மர்ம சாஸ்திரம் | ... | 1 | 0 | 0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | 2 | 4 | மதனாதி ரஹஸ்யம் | ... | 2 | 0 | 0 |
| மாதர் நீதி ... | 1 | 0 | ரதிமதனசிருங்காரரகஸ்யம் | | 1 | 0 | 0 |
| இல்லற இன்பரகசியம் ... | 0 | 8 | மாயாஜால விநோதம் | ... | 1 | 0 | 0 |
| ஸ்திரீ புருஷ தத்துவம் ... | 3 | 0 | மனோவசிய சாஸ்திரம் | ... | 1 | 8 | 0 |
| மூத்தத்தின் மர்மம் ... | 1 | 8 | ஸ்திரீ புருஷ ரகசியம் | ... | 1 | 8 | 0 |

விலாசம்:—ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

## அயக்காந்த சத்தின் திராவகம்.



இந்தத் திவ்ய ஔஷதம், விஷசுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினாலும் தேகம் மெலிந்து நொறுத்துப் போனவர்களுக்கும், வேறு சில வியாதிகளால் தாக்கப்பட்டும் களைத்துப் போனவர்களுக்கும், நாடு விருத்தி நாட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுவோம். இம்மருந்தை உட்கொண்டால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீரண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாதுவிருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.

இம் மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, வைரம் அன்ன மக்களைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆண்பெண் இருபாலரும் எப்பொழுதும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்சு தண்ணீர் அல்லது பசும்பாலில் 10, 12-துளி வரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6,7—துளிகள் வரையிலும் காலைமாலை இருவேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும்பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒருமாதம் சாப்பிடக்கூடிய மருந்து 0-12-0 தபாற் செலவு வேறு.

கருணாநிதி டிபோ, நெ. 1/6 வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# சூதக நிவாரண—V. H. R. A Quality
## பெருங்காயம்.

ஸ்திரீகளுக்கு மாதவிடாய் காலத்தவறி வெளிப்படுதல், வயிற்றுவலியின் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல ஜன்னி தோஷாயம் கிடைப்பது அரிதாயிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததைத் தேர்வு செய்து பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் எம்மிடத்தில் கிடைக்கும். வேண்டுவோர் வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2.
½-இராத்தல் ரூபா 1—1—0. } தபாற்கூலி வேறு.



## மோகினி பரிமள
## கூந்தல் தைலம்

5 வித இனாம் சாமான்கள் சேர்த்தனுப்பப்படும்.

இந்தத் தைலத்தை கூந்தலில் தடவிக் கொண்டால் இன்றுமலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதுடன் தலைக்கொதிப்பையும் அடக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரவல்லது. விலை அணா 13.

இனாம் சாமான்:-1 சென்டுபுட்டி, 1 பெட்ரூம் படம், 1 ஜவ்வாது பில்லை, 1 கஸ்தூரி சாந்து, 1 சிறிய கண்ணாடி.

## 130 சாமான்கள் அடங்கிய பெட்டி

இதன் விலை ரூபா 2-12-0 தான்.



இதன் விலை ரூபா 2-12-0 தான்.

### சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் போத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புரூச்; 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; கோர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; கோர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு ரூ. 2—12—0.

---

குருஞானிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

# நிமித்தியகுறி சாஸ்திரம்

மனதில் நினைத்துக்கொள்ளுங் காரியங்களையும், அவற்றின் பலாபலன்களையும் அறிந்து சொல்லும் மார்க்கங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 2.

## கிராமக் கோர்ட்டுகள் சட்டம்.

(சென்னை 1888ஞூ 1-வது ஆக்ட்.)

சென்னை ராஜதானியின் கிராமங்களில் ஏற்படுத்தியிருக்கும் கிராமக் கோர்ட்டுகளில் (கிராம முனிசிப் கோர்ட்டுகளிலும் கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகளிலும்) நடக்கும் சட்ட திட்டத்தைக் குறித்த ஷை ஆக்டை, 1920ஞூ த்திலும், 1929ஞூ த்திலும் ஏற்பட்ட திருத்தங்களுடன் ஆக்டையும் அதன்படி செய்யப்பட்ட விதிகளையும், இன்னும் அவைகளுக்கு சம்பந்தமான கிராம மேஜஸ்திரேட்டு ரெகுலேஷன்களையும், இதர சட்டங்களையும் அனுபந்தங்களுடன் சேர்த்து விரிவான உரையுடன் எளிய தமிழ் நடையில் சென்னை ஹைகோர்ட்டு அட்வோகேட்டுகள் ம-ா-ா-ஸ்ரீ, K. ஜகன்னாத சாஸ்திரியார், B.A. B.L., K. சங்கர சாஸ்திரியார், B.A. B.L., அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை ரூபா 1—8—0.

---

## மயிர் போக்கும் சூரணம்

இந்த சூரணத்தை ஜலத்தில் கலந்து, மயிர் போக்கவேண்டிய இடத்தில் தடவி உலர்ந்தபின் உடனே 5-நிமிஷம் பொறுத்து கழுவினால் மயிர் போய் விடும்.

புட்டி 1-க்கு அணா 8.

## அற்புத எலக்டிரிக் மோதிரம்.

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது! இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர் வரை ஆண் பெண் இருதிறத்தார்களும் உபயோகப் படுத்தலாம் இம் மோதிரத்திற் குள்ளிருக்கும் எலெக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள்



நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும்நோயைகுணப்படுத்திக்கொள்வதற்கும் இம் மோதிரத்தை உபயோகியுங்கள்! இம்மோதிரமானது 3-வித வேலைகளைக்கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பட்டிருக்கின்றது. இதை விரலில் அணிந்தவுடன் அதிலிருந்து மின்சாரசக்தி தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாதநோய், தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளுயென்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம், சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாக்ஷிப் பத்திரங்கள் பிரதி தினம் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0
மோதிரம் 3-க்கு ரூ. 3—12—0

---

குருஞானிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும்

# மகா சந்தனாதித் தைலம்.

அன்பர்களே! வெயிற்காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக் கட்டைச் சத்திலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான சரக்கு வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின் மேல் செய்யப்பட்டு இப்போது வெளி வந்திருக்கிறது.



நூற்றுக்கணக்கான பணச் செலவின் மேல் தீர்க்கவேண்டிய வியாதிகளையெல்லாம், இந்த சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி யிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ்செய்து வருவதால் கண்ணெரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, கண்டைவிடி, சாலேஸ்வரம், பித்தபாண்டு, காமாலை, அஸ்தி சுரம், கைகால் எரிவு, தேகவெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி. சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபாலசூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாகும்; ஞாபகசக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்துவருவதால் மூளையின் கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, துடிதுடிப்பு, தலைமயக்கம் முதலியவைகளும் நீங்கும்; மறதி ரோகம் அறவே ஒழிந்துவிடும்; சித்தத்தினால் நரைத்த உரோமங்கள் கருமை யடையும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும், பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவைகளையும் நீக்கவேண்டும்.

இதன் விலை 1 சேர் தைலம் அடங்கிய டின் ரூபா 1-12—0
இதன் விலை ½ சேர் தைலம் அடங்கிய டின் ,, 1—0—0

## வாத ஜீர்ணபி லேகியம்.

இந்த லேகியத்தை கொட்டைப்பாக்கு பிரமாணம் காலை, மாலை சாப்பிட்டால் அஜீர்ணம், மந்தம், வயிற்றுவலி, குன்மம், வாதம் முதலிய அநேக ரோகங்கள் நீங்கும். பத்திய விபரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 1. தபால் செலவு வேறு.

---

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி,
நெ. 8, வேங்கடேசமேஸ்திரி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.

# ப்ரெஞ்சு லெட்டர்ஸ் என்னும்

## ரப்பர் பெஸ்ஸரிகள்.



கருத்தரித்தலைத் தடுக்கும் பொருட்டுப் புருஷர்கள் உபயோகப்படுவதற்கான ரப்பர் கருவிகள். யாவரும் உபயோகிக்கலாம்.

டஜன் பீஸ் 1-க்கு ரூ. 1-12-0. நெ. 1. ரூபா 1. நெ. 2. விலை அணா 12. நெ. 3. விலை அணா 10.

## ரப்பர் பெஸ்ஸரி.

சாஸ்திர ஆராய்ச்சி செய்து கர்ப்பத் தடைக்கு இன்றியமையாததென்று கருதப்படுவதும் டாக்டர் மேரிஸ்டோப்ஸ் முதலானவர்களால் சிபார்சு செய்யப்படுவதுமான இந்த மெல்லிய பெஸரியை எந்த ஸ்திரீயும் கருத்தடைக்காக உபயோகப்படுத்திக்கொள்ளலாம், உபயோகிக்கும் விதம் சேர்த்து அனுப்பப்படும். விலை ரூ. 2 8 0

## போட்டோ ஆல்பம்



பிரான்சு தேசத்தில் உள்ள அழகிய பெண்களை போட்டோ எடுத்து தயாரிக்கப்பட்டது. பங்களாக்களிலும், படுக்கை அறையிலும் சிங்காரிக்கவேண்டிய படங்கள். விதவிதமான காதல் வேட்டும் படங்கள் பற்பல மாதிரியாக நடக்கும் காதல் வேடிக்கைகளையும் போட்டோ மூலமாய் காணலாம். 12-கொண்ட 1-ஆல்பம் விலை ரூ. 1-14-0

சுகுணநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

---

## வடுவூர் K. துரைசாமி ஐயங்கார் நாவல்கள்.

| | பாகங்கள் | ரூ. அ. |
|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் | 4 | 7—8 |
| மதனகல்யாணி | 8 | 4—8 |
| சௌந்தரகோகிலம் | 3 | 6—0 |
| திகம்பரசாமியார் வல்லியலீலைகள் | 2 | 5—0 |
| வசந்தமாலினீ விநோதப்பிரதீபி | 2 | 5—0 |
| மேனகா | 2 | 3—0 |
| கனகாம்புஜம் | 2 | 2—12 |
| கும்பகோணம் வக்கீல் | 2 | 3—0 |
| வித்தியாசாகரம் | | 1—4 |
| திவான்லொடபடசிங் | | 0—12 |
| திலோத்தமா | | 0—12 |
| மாணிக்கவாசகர் | | 0—8 |
| வசந்தமல்லிகா | | 1—8 |

| | ரூ. அ. |
|---|---|
| காளிங்கராயன் கோட்டை 2 பாகங்கள் | 4—8 |
| விலாசவதி 2-பாகங்கள் | 3—8 |
| பாலாமணி | 2—8 |
| மங்கையர் பகட்டு | 0—12 |
| லீலாவிநோத குதூகலம் | 2—4 |
| பன்னியூர் படாடோப சர்மா அல்லது மயனுலக மதமயக்கம் | 2—8 |
| மிஸின் ஜெலாமோனி அல்லது மயன்லாம் | 2—12 |
| இராஜேந்திர மோகனா | 1—4 |
| துரைக்கண்ணம்மாள் | 2—4 |
| மாயசுந்தரி | 0—12 |

விலாசம்:—ஆரியன் புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

# நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

## ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 |
| கற்பகச்சோலையின் அற்புதக் கொலை ... | 1 | 4 |
| பட்டுக்கொள்ளைக்காரன் 2 பாகம் | 3 | 4 |
| [illegible]தனும்பாள் 2-பாகம் ... | 3 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச்சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 3 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் ... | 0 | 14 |
| இந்திராபாய் ... | 2 | 8 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மஞ்சள் அறையின் மர்மம் ... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2 பாகமும் ... | 3 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்தினபுரிரகசியம் 8 பாகமும் | 16 | 2 |
| சந்திராபாய் ... | 2 | 0 |
| இராஜாமணி ... | 2 | 0 |
| இரத்தினபாய் ... | 1 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| உத்மாலணி ... | 0 | 14 |
| ஆனந்தசிங் ... | 2 | 0 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 |
| ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 |
| அர்ஜுனசிங், சுந்தர் ... | 0 | 2 |
| கைவல்லிய நவநீத வசனம் ... | 1 | 8 |
| யசோதராவாஞ்சை ... | 0 | 7 |

---

| | ரூ. | அ. |
|---|---|---|
| தத்வ சங்கிரஹ ராமாயணம் ... | 4 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 |
| ஸ்ரீவிவேகானந்தர் ... | 4 | 0 |
| தமிழ் மெடிரியா மெடிகா ... | 3 | 0 |
| மாதவி மாதவன் 2 பாகம் ... | 2 | 0 |
| மலையாள பகவதி ... | 1 | 0 |
| அற்புதவனித ரம்பை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| தயாளன் கதை ... | 0 | 12 |
| பூலோக லக்ஷ்மி கதை ... | 0 | 10 |
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜாநாடகம் ... | 0 | 12 |
| நளின சுந்தரி ... | 0 | 10 |
| கம்பராமாயண சங்கிரகவசனம் | 2 | 0 |
| குசேலோபாக்கியான வசனம் | 1 | 0 |
| ஸ்ரீபாலன் ... | 0 | 8 |
| உதயணன் ... | 0 | 7 |
| சுக்கிரீவன் ... | 0 | 14 |
| போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் வசனம் ... | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| பீஷ்ம விஜயம் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| மூப்பெருந்தாசர் ... | 0 | 10 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 8 |
| பரசுராமன் ... | 0 | 8 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| அங்கதன் ... | 0 | 4 |
| தசாவதாரம் ... | 0 | 6 |
| கிருஷ்ணன் [illegible] வசனம் ... | 0 | 8 |
| சண்டோபாக்யானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்தியவசனி ... | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| நாலுமந்திரி கதை ... | 0 | 4 |
| மங்களேசுவரன் ... | 0 | 6 |
| நக்கன் ... | 0 | 6 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| நான்குகோடி ... | 0 | 4 |
| மதிமோசவிளக்கம் ... | 0 | 1 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மேனுமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணுகானன் ஞானேந்திரி ... | 0 | 8 |
| மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| விகடவல்லி கதை ... | 0 | 6 |
| தாலிகட்டி மறந்த கதை ... | 0 | 5 |

2076 ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நே. 167, மதராஸ்.